காலச் சக்கரத்தின் கடைசி சுழற்சி



மெய்வழி அடியார்

(சபிக்கப்பட்ட பூமியின் சித்திர முடிவு)

சத்திய ஜீவ மெய்வழி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

காலச் சக்கரத்தின் கடைசி சுழற்சி

(சபிக்கப்பட்ட பூமியின்
சரித்திர முடிவு)

மெய்வழி அடியார்

சத்திய ஜீவ மெய்வழி

காலச் சக்கரத்தின் கடைசி சுழற்சி : ஆன்மீக தீர்க்கதரிசன ஆய்வு, ஆசிரியர் : மெய்வழி அடியார், உரிமை : ஆசிரியர், முதல் பதிப்பு : ஜூலை 2012, பதிப்பாளர் : சத்தியஜீவ மெய்வழி எல்லீஸ்பேட்டை – 638 116, செல் : 9788905129, 9965218121, வெளியீட்டு உதவி: வெண்ணங்கி வெளியீடுகள் 18, 6வது குறுக்குத்தெரு சக்தி நகர் சாரம், புதுச்சேரி–13. 9994206198., பக்கம் : 80, விலை : 50/–

kaalachakkarathin kadaisi Suzharchi: Religious Prophetical Research, Author: Meivazhi Adiyar , ©: Meivazhi Adiyar, First Edition: July 2012, Published by: Sathya Jeeva Meivazhi Ellispettai - 638 116, Cell: 9788905129, 9965218121, Assistance in Publication: White Raiment Publication, 18, 6th Cross Street, Sakthi Nagar, Saaram, Puduchery -13. 9994206198, Page: 80, Rs: 50/-

குறிப்பு : ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளரின் முன் அனுமதியின்றி இந்நூலை முழுமையாகவோ பகுதியாகவோ அச்சிட்டு வெளியிடுதல் கூடாது.

முன்னுரை

காலச் சக்கரம் எப்பொழுது சுழலத் தொடங்கியது என்பதைக் கடவுள் மட்டுமே அறிவார். எனினும், கடவுளின் குமாரன் ஆதாம், கற்பகச் சோலையாகிய ஏதேனிலிருந்து வெளியேற்றப்பட்ட நேரத்திலிருந்து ஒரு காலக் கணக்கு சுழலத் தொடங்கியது. அதுவே பூலோகத்தின் இன்றையக் காலச் சக்கரக் கணக்கு.

இந்த கணக்கு, காலச் சர்ப்பமாகிய பூலோக அதிபதியின் ஜாதகச் சக்கரக் கணக்காகவும் உள்ளது. ஆறாயிரம் ஆண்டுக் காலத்தைக் கடந்துவிட்ட இந்த ஜாதகச் சக்கரக் கணக்கு, விவிலியம் என்ற வேதாகமத்தின் அறுபத்தாறு புத்தகங்களுக்குள் அடங்கி உள்ளது. இன்றைய அறிவுலக, ஆன்மீக உலக ஆரவாரங்களுக்கிடையில் காலச் சர்ப்பத்தின் ஜாதகக் கணக்கை மிகச் சிலர் மட்டுமே கண்டறிபவர்களாக உள்ளனர். இந்த காலச் சக்கரம், அதன் கடைசி சுழற்சிக்குள் இப்பொழுது சுழன்று கொண்டிருக்கிறது.

காலச் சர்ப்பத்தின் ஜாதகக் கணக்கும், இந்த உலகத்தின் ஜாதகக் கணக்கும் ஒன்றுதான். மெய்யான தெய்வத்தை, மெய்யான வேதத்தின் வழியாய்த் தேடுபவர்கள், உலக ஜாதகமாகிய காலதேவனின் ஜாதகத்தை மட்டுமின்றி, தங்களின் சொந்த ஜாதகத்தையும் கண்டுகொள்வார்கள்.

கால சர்ப்பத்தைத் தனது காலின்கீழ் மிதித்திடும் கடவுளின் மைந்தனுக்குள் மறுபடியும் பிறப்பவர்கள், காலனாகிய கால சர்ப்பத்தையும், காலத்தையும் வென்றவர்கள்.

சமர்ப்பணம்

அகிலத்தின் அதிபதியாகிய

ஆகாத சர்ப்பத்தின் தலையை

நசுக்கப்போகும்

திருப்பாதங்களின் முன்பாக

இந்நூலைப் பணிவுடன்

சமர்ப்பிக்கின்றோம்...

உள்ளடக்கம்

1. உலகப் பேரழிவு? - 7

2. மாயன் என்பவர்கள் யார்? - 8

3. மாயன் கோவிலும் மகாசர்ப்பமும் - 10

4. மகா சர்ப்பத்துடன் தொடர்புடைய மாய(ன்) கணக்கு - 12

5. உலக நாடுகளின் பிரமிடுகளும், கோபுரங்களும் - 13

6. முதற்கோபுரத்தின் மூல காரணம் - 15

7. கோபுரங்களில் மறைந்திருக்கும் கோட்பாடுகள் - 17

8. மாயன் காலச் சக்கரக் கணக்கும், மற்றும் சில கணக்குகளும் - 18

9. காலச் சக்கரக் கணக்கும், விவிலியம் விவரிக்கும் கால சர்ப்பக் கணக்கும் - 21

10. விவிலியம் விவரிக்கும் வேறு இருவகை மகா திர்க்கதரிசனங்கள் - 28

10அ) உலக அரசியல் ஆதிக்க வல்லரசுகள் பற்றிய திர்க்கதரிசனக் கணக்கு - 29

✷ பயங்கர மனிதச் சிலை ✷ மனிதச் சிலையின் அங்கங்களும், மகாராஜ்யங்களும் ✷ சிலையின் கால் பாதப் பகுதி ✷ வேதாகம திர்க்கதரிசனத்தில் அமெரிக்கா ✷ ஏழு தலைகளும் பத்து கொம்புகளும் உடைய பயங்கர மிருகமாகிய மகாவலிய சர்ப்பம் ✷ மகாசர்ப்பம் மற்றும் ஏழுதலை மிருகத்தின் இரகசியம்

10ஆ) தேவனுடைய தேவாலயம் பற்றிய திர்க்கதரிசனம் - 45

✷ சிறிய கொம்பு ✷ நியாயசங்கம் ✷ 2300 வருட திர்க்கதரிசனம் ✷ அஞ்ஞான அருவருப்பு ✷ பாவ நிவாரணம் ✷ நியாயத் திர்ப்புக்குரிய நியாயவிசாரணை ✷ மகாபிரதான ஆசாரியர் ✷ நியாயத்திர்ப்பின் வழியாய் பரலோகம் செல்பவர்கள் ✷ ஆயிரம் வருடங்களில் ✷ ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு.

11. [illegible] - 54
12. [illegible] - 59
13. [illegible] - 63
14. [illegible] - 74
15. [illegible] - 75

1

உலகப் பேரழிவு?...

உலகம் அழியப்போகிறது என்ற செய்தி, ஒவ்வொரு சந்ததியின் காலத்திலும் மக்களிடையே பெரும் பீதியையும், கலக்கத்தையும் ஏற்படுத்துகிறது. வானசாஸ்திர சோதிடக் கணிப்பின் காரணமாகவோ, பிரபஞ்சக் கோள்களின் பயணங்களில் ஏற்படும் மாறுதல்கள் காரணமாகவோ, கிரகங்களுக்கிடையில் குறுக்குச்சால் ஓட்டும் குட்டிக் கிரகங்களின் விபரீதப் பயணம் காரணமாகவோ, பூமிக்கு ஆபத்து வருகிறது என்ற செய்திகளை ஊடக உலகம் பெரிதுபடுத்திக் கூறுவதுண்டு.

கி.பி. 2000 ஆண்டின் முடிவில் உலகம் அழிந்துவிடும் என்று கிறிஸ்தவர்கள் பலர் எதிர்ப்பார்த்திருந்தனர். ஆதாம் காலத்திலிருந்து தொடங்கிய ஆறாயிரம் ஆண்டுக் காலம், கி.பி. இரண்டாயிரத்தில் முடிவடைந்துவிடுவதாகக் கருதியதன் காரணமாகவே இவ்வாறு எதிர்பார்த்திருந்தனர்.

மத்திய அமெரிக்காவின் யுகாதன் திபகற்பத்தில் வாழ்ந்த மாயன் இனத்தவரின் பிரமிடு கோபுரங்களில் கல்வெட்டுக் கணிதக் குறிப்புகளாகச் செதுக்கிவைத்திருந்த பன்னெடுங்காலப் பஞ்சாங்கத்தை ஆராய்ந்தறிந்தவர்கள், 2012 ஆம் ஆண்டு டிசம்பர் 21 அல்லது 22 இல் உலகம் அழிந்துவிடும் என்றனர். இதனை ஆதாரமாகக் கொண்டு அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட திரைப்படம் உலகத்தையே கலக்கியது. மாயன் காலக் கணிப்பின் முடிவில் மாறுபடும் மற்றொரு கணிப்பு, உலக அழிவின் நாளை 2021 டிசம்பர் 21 அல்லது 22 என்பதாகக் கூறுகிறது. மாயன் காலக் கணிப்பை ஆதாரமாகக் கொண்ட மர்மமான பல விஷயங்களை ஆராய்வதன் மூலம் உலக முடிவுக்குரிய உண்மையான காரணங்களையும், உலக முடிவை எதிர்பார்க்கக் கூடிய மிகச் சரியானக் கால கட்டத்தையும் ஆராய்ந்தறிந்திட இயலும்.

2

மாயன் என்பவர்கள் யார்?...

அமெரிக்கப் பழங்குடி இனத்தவர் பற்றிய விவரங்கள், 16வது நூற்றாண்டில் அமெரிக்கக் கண்டம் கண்டுபிடிக்கப்பட்டதற்குப் பிறகே உலகுக்கு தெரிய வந்தன. அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியர்கள் இவர்களைப் பொதுவாக செவ்விந்தியர்கள் என்று அழைத்தனர். வட அமெரிக்கா மற்றும் மத்திய அமெரிக்காவில் மட்டும் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட பழங்குடியினர் வாழ்ந்து வந்தனர்.

மாயன் காலண்டர்

வட அமெரிக்காவின் தென் பகுதியையும், தென் அமெரிக்காவின் வட பகுதியையும் பசிபிக் பெருங்கடலுக்கும், அட்லாண்டிக் பெருங்கடலுக்கும் இடையில் இணைத்திடும் யுகாடன் திபகற்பத்தில், (இன்றைய மெக்ஸிகோவின் தென்பகுதி) கவுதமாலா பகுதியில் வாழ்ந்துவந்த மிகப்பழமையான ஆல்மெக் என்ற மத்திய அமெரிக்க பழங்குடியினரின் (Meso-American's) வழிவந்தவர்கள் மாயன் இனத்தவர்கள். கவுதமாலா பகுதியின் 'குயிச்செஸ்' இனத்தவர்கள் மாயன் இனத்தவருக்கு நெருக்கமானவர்கள். டோல்டெக், மிக்ஸ்டெக், ஹுவாக்ஸ்டெக், அஸ்டெக் ஆகிய பழங்குடி இனத்தவருக்கும் மாயன் இனத்தவருக்கும் உறவுகளும் தொடர்புகளும் உண்டு.

ஆல்மெக் இனத்தவரின் காலம் கி.மு. 1500 முதல் தொடங்குகிறது. மாயன் இனத்தவரின் காலம் கி.மு. 900 முதல் தொடங்குகிறது. எனினும், கி.பி. 300 முதல் 900 வரையில் மேன்மையான நிலையை அடைந்தது. மத்திய அமெரிக்கப் பழங்குடி இனத்தவரில் அஸ்டெக் இனத்தவர்களே

பழம்பெருமை மிக்கவர்கள். எனினும், மாயன் இனத்தவர் எழுதிவைத்தக் காலச் சக்கர கணக்கு அவர்களை மிகவும் பிரபலபடுத்திவிட்டது. அமெரிக்கப் பழங்குடியினரில் எழுத்து முறையை முதன்முதலில் உருவாக்கியவர்கள் மாயன் இனத்தவர்களே.

மாயன் இராசிச் சக்கரம்

3

மாயன் கோயிலும் மகாசர்ப்பமும்

மாயன் இனத்தவர்கள், இறந்தவர்களாகிய தங்கள் முன்னோர்கள் மூலமாகவும், நரபலி செலுத்துவதன் மூலமாகவும் தங்கள் கடவுள்களை வழிபட்டுவந்தனர். தேவர்கள் வாழும் உலகத்துடன் தெய்வீகத் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே நாற்சதுர பிரமிடு கோபுரத்தை அமைத்து, அதன் உச்சியில் பலி செலுத்தி வந்தனர். மரித்தவர்கள் அடக்கம் செய்யப்பட்ட கல்லறைப் பூமியிலிருந்து அவர்களின் பிரமிடு கோயிற் கோபுரம் விண்ணை நோக்கி உயர்ந்து சென்றது. பிரமிடு எழுப்பப்பட்ட பகுதி, 'தியோத்திஹுவால்கன்' என்ற நகரப்பகுதியின் மையமாக இருந்தது.

ஏழு தலை சர்ப்பம்

பிரமிடு கோயிலில் குல்குல்கன் அல்லது குகுல்கன் என்ற கடவுளை அவர்கள் முதன்மைக் கடவுளாக வணங்கி வந்தனர். குகுல்கன் என்றால் தேவலோகத்திலிருந்து பறந்து வந்த தெய்வீக சர்ப்பம் (பாம்பு) என்று அர்த்தமாகும். மாயன் மக்கள் தங்களை குகுல்கன் தெய்வத்தின் மக்கள் என்று பெருமையுடன் அழைத்துக் கொண்டனர். குகுல்கன் என்ற தேவலோக பாம்பைத் தவிரவும், 'அஹ்வாச்சாபத்' என்ற ஏழுதலை நாகச்சர்பத்தையும், 'கெட்ஷல்கவாஹ்டுஹ்ல்' என்ற பறக்கும் மகாசர்ப்பத்தையும், மிக்ஸ்கோட்டி என்ற மேக சர்ப்பத்தையும் வணங்கி வந்தனர்.

இவர்களைப் போன்று, அஸ்டெக் இனத்தவர்களும், 'குவோட்சல்கோட்ல்' என்ற பறக்கும் பாம்பையும், 'சிக்கோமெகோட்ஸ்'

என்ற ஏழுதலைப் பாம்பையும் வணங்கி வந்தனர். இது மிகவும் வல்லமை மிக்கது என்றும், எகிப்தியர் வணங்கிவந்த சூரிய சர்ப்பம் இதுவே என்றும் கூறப்படுகிறது. மேலும், லிட்ஸ்மா அல்லது லக்கின்கேன் என்ற மகா சர்ப்பமும், நாகேன்கேன் என்ற வானலோக சர்ப்பமும் இவர்களால் வணங்கப்பட்டன. பைமா என்ற பழங்குடியினர் செர்ரானோ என்ற ஏழுதலை நாகத்தை வணங்கி வந்தனர்.

பிரமிடு கோயில்கள் இறந்த மன்னர்களின் கல்லறைகளின் மீது அமைக்கப்பட்டிருந்தாலும், வானத்திலிருந்து பறந்துவரும் மகாசர்ப்பங்களுக்காகவே அர்ப்பணிக்கப்பட்டிருந்தன. மாயன் மக்கள் வணங்கிய அஹ்வாச்சாபத் என்ற ஏழுதலை மகாசர்ப்பமும், அஸ்டெக் இனத்தவர் வணங்கிய சிக்கோமெகோட்ஸ் என்ற ஏழுதலை நாகங்களும், அவற்றிற்காக எழுப்பப்பட்ட பிரமிடு கோயில்களும் மிகவும் விசேஷமானவைகள்.

ஏழு தலை நாக சர்ப்ப வழிபாடு அன்றியும், பத்து தலை நாகசர்ப்ப வழிபாடும் மாயன் இனத்தவரிடமும், மற்றைய இனத்தவரிடமும் இருந்துவந்துள்ளன.

பத்து தலை நாக சர்ப்பம்

4

மகாசர்ப்பத்துடன் தொடர்புடைய மாயன் கணக்கு

குகுல்கன் கோயிலின் குருமார்கள் வானசாஸ்திரத்திலும், கணிதத்திலும் வல்லவர்கள். ஆண்டுக்கு 260 நாட்களையும், 365 நாட்களையும் கொண்ட இருவகைக் காலச் சக்கரக் கணக்கினை த்சோல்க்கின், ஹாப் என்ற பெயர்களில் கணித்து வைத்திருந்தனர். பலி பீடத்தை உச்சி மண்டபமாகக் கொண்டிருந்த ஆலயத்தின் நாற்புறமும் 12 இராசிச் சக்கரங்களைக் கொண்டிருந்தது. ஒரு புறத்திற்கு 91 படிக்கட்டுகள் வீதம் நாற்புறத்திற்கும் 364 படிக்கட்டுகள் அமைத்து மேலுச்சித் தளத்தையும் ஒரு படிக்கட்டாகக் கருதி 365 படிக்கட்டுகளை வருடத்தின் 365 நாட்களாகக் கணக்கிட்டனர். சூரியனை மையமாகக் கொண்ட அவர்களின் காலச் சக்கரக் கணக்கு கீழ்ப்படியிலிருந்து மேற்படிவரை கிளிப்ஸ் என்ற லிபியில் செதுக்கிவைக்கப்பட்டிருந்தது. இந்த காலச் சக்கரக் கணக்கு முழுவதும் குகுல்கன், அஹ்வாச்சாபத், சிக்காமெகோட்ஸ் ஆகிய வான சர்ப்பங்களுடன் தொடர்புடையது. காலச் சக்கரக் கணக்கு சர்ப்பத்தின் வாலிலிருந்து தொடங்குவதாகவே அர்த்தமாகிறது. தென்னாசிய இந்துத்துவத்தின் ஒவ்வொரு ஆண்டுக் கணக்கும், படமெடுக்கும் பஞ்சதலை நாகத்தை அடிப்படையாகக் கொண்ட பஞ்சாங்கக் கணக்காகவே உள்ளது. மங்கோலிய மகாசர்ப்பத்திற்கும் ஒரு மகாக் கணக்கு உள்ளது. இந்த மகாசர்ப்பங்களும், வானத்திலிருந்து இறங்கிவந்ததாக விவிலியம் (பைபிள்) கூறும் வலிய சர்ப்பமும் (வெளிப்படுத்துதல். 12:9) ஒன்றுதானா என்ற வினாவிற்கு விடை கண்டாகவேண்டும்.

மாயன் பிரமிடு

5

உலக நாடுகளின் பிரமிடுகளும், கோபுரங்களும்

மத்திய அமெரிக்கப் பழங்குடியினரின் பிரமிடுகளாகிய கோபுரங்கள் எழுப்பப்படுவதற்கு முன்னதாகவே, எகிப்திய பிரமிடுகளை கி.மு. 20ஆம் நூற்றாண்டுக்கு முன்பு எகிப்தியர்கள் எழுப்பியிருந்தனர். தென்னாசிய இந்தியத் துணை கண்டத்திலும், குறிப்பாக திராவிட தேசத்திலும் விண்ணைத் தழுவும் உயர்ந்த கோபுரங்கள் எழுப்பப்பட்டதன் காரணங்கள் ஆன்மீக ஆய்வுக்குரியவைகள். இந்துத்துவ ஸ்ரீ சக்கர ஆன்மீக ஜியோமெட்ரிக் கணிதத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுப்பப்பட்டவை இக்கோபுரங்கள். மூலாதார முக்கோணங்களை அடிப்படையாகக் கொண்ட சக்கர இயக்கத்தினுள் அணுவின் இயக்கம் முதல் அண்டத்தின் இயக்கம் வரை அடங்கியிருப்பதாக ஆகமங்கள் கூறுகின்றன. ஸ்ரீசக்கரத் தத்துவமே பிரமிடின் தத்துவம் என்றும் கூறப்படுகிறது. எனினும், எகிப்தியர் உருவாக்கிய பிரமிடுகளின் அடித்தளத்தில் அவர்களுடைய மன்னர்களின் மம்மி சடலங்கள் உள்ளன. மாயன் இனத்தவரின் பிரமிடுகள் அவர்களுடைய மன்னர்கள் அல்லது முன்னோர்களின் சடலங்கள் புதைக்கப்பட்ட மண்ணிலிருந்து விண்ணை நோக்கி எழுப்பப்பட்டன. இவைகளின் காரணங்களும், நோக்கங்களும் இவற்றில் மறைந்திருக்கும் இரகசியங்களும் ஆய்வுக்குரியவைகள்.

எகிப்திய பிரமிடு

எகிப்திய மாயமந்திர (Occultism) இரகசியங்களில் ஒன்று எகிப்திய பிரமிடுகள். பிரமிடுகளின் மர்மமான மாயசக்திகள் மந்திரவாதிகளுக்கும் புதிராகவே உள்ளன. பிரம்மிக்கவைக்கும்

பிரபஞ்ச சக்திகளையும் மனைக்களைக்கும் மகாசக்தி சக்திகளையும் ஒன்றுபடுத்தியே ஞானமே. அதாவது பிரம்ம ஞானமாகிய இராஜயோக ஞானமாகும்.

ஸ்ரீ சக்ர மேருவும்

ஸ்ரீ சக்ரம்

6

முதல் கோபுரத்தின் மூல காரணம்

எகிப்திய பிரமிடுகளின் காலத்திற்கு முன்னதாகவே கி.மு. 22ஆம் நூற்றாண்டில் பழைய பாபிலோனை நிறுவிய முதல் மாமன்னன் நிம்ரோத், பாபேல் என்ற மிக உயர்ந்த கோபுர மாளிகை ஒன்றைக் கட்டினான். இன்றைய ஈராக்கின் வடபகுதியில் அது கட்டப்பட்டது. நிம்ரோத் பாபேல் கோபுரத்தைக் கட்டத் தொடங்கியதற்கு ஒரு காரணமுண்டு. அவனுடைய பாட்டனார் நோவாவின் காலத்தில் ஊழிப் பிரளய பெருவெள்ளம் ஏற்பட்டு உலகம் அழிந்ததாகவும், நோவாவின் குடும்பத்தினரும் விலங்கினங்களும் ஒரு மாபெரும் மிதவைப் பேழை வழியாக தேவனால் காப்பாற்றப்பட்டனர் என்றும் விவிலியம் கூறுகிறது. இரு தலைமுறைகளுக்கு முன்பு உலகத்திற்கு பெரும் வெள்ளத்தால் ஏற்பட்டப் பேரழிவு, தனது காலத்தில் மீண்டும் ஏற்பட்டால் அதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவே மாபெரும் கோபுர மாளிகையை உயரமாக எழுப்பினான் நிம்ரோத். பாபேல் கோபுரத்தின் கட்டுமானப் பணிகள், அதன் மேல் உச்சித் தளத்தைச் சென்றடைவதற்கு முன்னதாகவே, நிம்ரோத் பரலோகத்தின் தேவனை நோக்கி, 'இப்பொழுது எங்களை அழித்துப்பார்' என்று சவால் விட்டானாம். அப்பொழுது தேவ தூதர்கள் அந்த கோபுரத்தில் இறங்கி, கட்டடப் பணியாளர்கள் பேசும் ஒரே மொழியில் பிரிவினையை ஏற்படுத்தி, கோபுரம் கட்டும் பணி நின்று போகும்படி செய்தார்களாம்.

பாபேல் கோபுரம்

ஈராக் அதிபராக விளங்கிய சதாம் ஹுசேன் பாபேல் கோபுரத்தை திரும்பக் கட்டுவேன் என்று சபதம் செய்தும் கட்ட

இவையில்லை. ஈராக்கின் தென்பகுதியில் 2716 அடி உயரத்துடன் 124 மாடிகளைக் கொண்ட 'பர்ஜ் துபை' என்ற உலகின் மிக உயரமான துபாய் தேசத்தின் இன்றைய கோபுர மாளிகையின் நுழைவுவாயிலில் "முடியாது என்ற வார்த்தை மன்னர்களின் அகராதியில் கிடையாது" என்று மன்னர் ஷேக் அஹமது எழுதி வைத்திருப்பது தேவனுக்கு எதிராக நிம்ரோத் விடுத்த சவாலை நினைவுபடுத்துவதாகவே உள்ளது.



பர்ஜ் துபை

7 கோபுரங்களில் மறைந்திருக்கும் கோட்பாடுகள்

முதல் ஊழிப் பிரளயம் ஏற்படுத்திய அச்ச உணர்வு காரணமாகவே உயரமான முதல் கோபுரம் விண்ணை நோக்கி எழுந்தது. கடவுள்களைப் போல் வாழ்ந்து மரணமடைந்த மன்னர்கள், மரணத்தைக் கடந்து மீண்டும் எழுந்துவரவேண்டும் என்பதற்காகவே எகிப்திய பிரமிடுகள் கட்டப்பட்டன. 'இறந்தோரின் வேதத்திலிருந்து' மந்திரங்களும் ஓதப்பட்டு வந்தன. சீனர்களின் பகோடா கலாச்சாரத்தில் உருவாக்கப்பட்ட இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முந்திய பீகிங் மோட்சக் கோயிலின் வட்டக் கோபுரம் மோட்சம் செல்வதற்காகவே கட்டப்பட்டது. சக்கர வியூகக் கணக்கின் வழியாய் மண்ணையும் விண்ணையும் தொடர்பு படுத்துவதுடன், மனிதனின் மூலாதாரத்தில் அருங்கோணக் குண்டலினியாய் மறைந்திருக்கும் அரவ சக்தியை எழுப்பி அழிவற்றதாய் அண்டவெளியாகிய பிரம்மவெளிக்குக் கொண்டு செல்லவேண்டும் என்ற ஆத்ம தத்துவத்துடன் இந்துத்துவ ஆலய கோபுரங்கள் எழுப்பப்பட்டன. ஆலயப் பிரகார முன்பகுதியில் பலிபீடத்தின் அருகிலுள்ள கொடிமரமாகிய துவஜஸ்தம்பம் இந்த தத்துவத்தின் ஓர் அடையாளம். இதன் மூலம் எந்தவொரு ஆத்மாவுக்கும் அழிவில்லை என்ற ஆன்மீகக் கோட்பாடு தொடர்ந்து அறிவிக்கப்படுகிறது. மனிதன் சாவைக் காணாதவனாய் அல்லது கடந்தவனாய் வாழவேண்டும் என்பதே கோபுரங்களில் மறைந்திருக்கும் கோட்பாடுகளாகும்.

பீஜிங் மோட்ச கோயில்

குண்டலினி சர்ப்பம்

8

மாயன் காலச் சக்கரக் கணக்கும், மற்றும் சில கணக்குகளும்

ஆத்மாவின் அழிவிலிருந்தும் அகிலத்தின் அழிவிலிருந்தும் தப்பித்துக் கொள்வதற்குரிய மார்க்கமாகவே மாயன் இனத்தவரின் பலிபீட வழிபாடு பிரமிடு கோயிலின் உச்சியில் நடைபெற்று வந்தது. பிரமிடு கோபுரத்தின் நாற்சதுர பக்கங்கள் வழியாக மேல்நோக்கி எழுதிச்சென்ற காலச் சக்கரக் கணக்கு, ஓர் அழிவில் தொடங்கி மறு அழிவில் முடிவதாகவே அர்த்தமாகிறது. எழுதப்பட்டுள்ள மொத்த வருடங்களாகிய 5126 ஆண்டுக் காலக் கணக்கு, கி.மு. 3114 இல் தொடங்கி 2012 டிசம்பர் 20 அல்லது 21இல் முடிவடைவதாக கணக்கிடுகிறார்கள். 5126 ஆண்டுகள் என்பது 13 பக்தூன் என்ற காலக் குறியீடுகளுக்குரியவை. 1 பக்தூனுக்கு 1.44.000 நாட்கள் என்கிறார்கள். இதன்படி ஒரு பக்தூனுக்கு 395 முழுமையான வருடங்கள் என்று கணக்கிடப்படுமானால், 13 பக்தூன்களுக்கு 5135 வருடங்கள் என்று கணக்கிடப்பட வேண்டும். இவ்வாறு கணக்கிடப்படுவது சரிதான் என்றால் உலக முடிவுக்குரிய இறுதிநாள் என்பது 2021 டிசம்பர் 20 அல்லது 21 என்கிறாகிறது. மேலும், தற்பொழுதுள்ள விடைக் குறியீடாகிய 12-21-12 (நாள் -மாதம்-வருடம்) என்பதை யூதர்களின் ஹீப்ரு மொழி வாசிப்பின்படி வலமிருந்து இடமாக வாசித்தால் உலக வரலாற்றின் இறுதி நாள் என்பது 2021ஆம் வருடம் 12ஆம் மாதம் 21ஆம் நாள் என்று அர்த்தமாகிறது. இப்போதைய பரபரப்புக்குரிய எதிர்பார்ப்பாகிய 2012 டிசம்பர் 21 என்பது (ஏ)மாற்றத்திற்குரியதாகிவிடுகிறது.

கிழக்கத்திய தென்னாசிய இந்துத்துவ வேதத்தின் அடிப்படையிலான காலச் சக்கரத்தின் இறுதி யுகமாகிய கலியுகத்தை மகாபாரத யுத்தக் களத்திலிருந்து சிலர் கணக்கிடுகிறார்கள். அவர்கள் கணக்கிடும் காலக் கணக்கு கி.மு. 3102 இல் தொடங்கி கி.பி. 2898இல் முடிவடைகிறது. ஆனால் வேறு சிலர் மகாபாரத யுத்தக் காலம் கி.மு. 143

என்கிறார்கள். இங்கு, மகாபாரத யுத்தத்தின்போது சூரியன் நடுவானில் நின்ற காலமும், ஆதி இஸ்ரவேலர்கள் (யூதர்கள்) தங்கள் தேசத்திற்காக ஜோஷ்வா தலைமையில் போரிட்டக் காலத்தில் சூரியன் நடுவானில் நின்ற காலமும், ஏறத்தாழ ஏககாலமாகவே உள்ளது. இதையே கலியுக இறுதிக் கணக்காகக் கருதினால், கால முடிவு கி.பி. 4568 என்றாகிறது.

இதுபோலவே, சிலர் கவுதம புத்தரின் காலத்திலிருந்து காலக் கணக்கைத் தொடங்குகிறார்கள். இதன்படி கலியுக முடிவு என்பது கி.பி. 5517 என்றாகிறது. தென்னாசிய பங்குனி அமாவாசை அல்லது சித்திரை அமாவாசையை அடிப்படையாகக் கொண்டு தொடங்கும் தற்போதைய அறுபதாண்டுக் கால சகாப்தக் கணக்கு 1987–88 பிரபவ வருடத்தில் தொடங்கி 2046 அல்லது 2047 அட்சய வருடத்தில் முடிவடைகிறது. 2047ஐ அடிப்படையாகக் கொண்டு 6000 ஆண்டு கால யுகக் கணக்கை பின்னோக்கிக் கொண்டுசென்று யுகத்தின் தொடக்கத்தை கணக்கிட்டால், அது கி.மு. 3953ஐ சென்றடைகிறது. இது ஆதி மனிதன் ஆதாம் தேவ சமூகத்திலிருந்து (ஏதேன் கற்பகச் சோலையிலிருந்து) வெளியேற்றப்பட்டக் காலத்திற்கு நெருக்கமாக உள்ளது. இந்தக் கணக்கு சரிதான் என்றால் 2046–47 ஆம் வருடம் என்பது யுக முடிவாகிய உலக முடிவுக்குரிய வருடமா என்ற கேள்வி எழுகிறது.

மனிதகுலம் சாத்தானின் வசம் அடிமைப்பட்ட ஆதாம் காலத்தை தவறாகக் கணித்து, அதனுடன் கலியுகத்தின் ஆறாயிரம் ஆண்டுக் காலத்தைச் சேர்த்து சில கிறிஸ்தவர்கள் 2000இல் உலகம் முடிவடையும் என்று 2000க்கு முன்புவரைக் கூறிக் கொண்டிருந்தார்கள். இப்பொழுதும் சிலர், இயேசு சிலுவையில் அறையப்பட்ட கி.பி. 31இல் இருந்து கணக்கிட்டு 2031ஐ இறுதி வருடமாக கணக்கிடுகிறார்கள். இவ்வாறாக, ஒவ்வொருக் காலக் கணக்குகளும் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவைகளாகவே உள்ளன..

மாயன் யுகக் கணக்கு தொடங்கப்படும் கி.மு. 3114இல் (32 ஆம் நூற்றாண்டு) மாபெரும் பிரளயம் ஒன்று பூமியில் ஏற்பட்டிருக்க வேண்டும். விவிலியக் குறிப்புகளின்படி, அக்காலத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய பிரளயம் என்பது 'பெருவெள்ள ஊழிப் பிரளயம்'. இது ஏற்பட்டது கி.மு. 24 ஆம் நூற்றாண்டு என்று சில விவிலிய அறிஞர்கள் கணக்கிடுகின்றனர். இவ்விரண்டு கணக்குகளின்படி யுகப் பிரளயக் காலம் நெருங்கி வரவில்லை. இவற்றை அடிப்படையாகக் கொண்டு

உலக முடிவை திட்டவட்டமாக வரையறுக்க இயலவில்லை.

எனினும், இன்றைய மனித குலம் என்பது, சமூக ஒழுங்கியல் சீர்குலைவுடன், அமைதியை இழந்து மகா ஒழுக்கக் கேடுகளால் பாதிக்கப்பட்டு, மிக மோசமான ஒரு நெருக்கடி நிலையை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை கணிக்க முடிகிறது. தனிமனிதனின் அகவாழ்க்கையைப் பொழுது போக்குக்குரிய புறவாழ்க்கையாக்கிக் கண்டுமகிழும் இன்றைய சமுதாய வாழ்க்கையே, உலகத்தின் இறுதி முடிவைக் காணச் செய்யும் ஒழுக்கக் கேடான வாழ்க்கையாகும். உலக நாடுகளால் அங்கீகரிக்கப்படும் வெட்கக்கேடான ஓரின வாழ்க்கையே, ஒழுக்கக் கேட்டின் உச்சக்கட்டமாகும். இன்றைய இறுதி நாட்களில் ஆறறிவுக்குரிய மனிதன் மகா அறிவு ஜீவியாகவே வாழ்ந்தாலும், ஐந்தறிவுக்குரிய விலங்கினங்களுக்கும் கீழாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறான். விவிலியம் குறிப்பிடுகிறவாறு, நோவா காலத்தின் ஊழிப் பேரழிவும், ஆப்ரகாம் காலத்தின் சோதோம்கொமரா பேரழிவும், மானிட ஒழுக்கக் கேடுகள் காரணமாகவே ஏற்பட்டன. ஒரு நூற்றாண்டுக்கும் அரை நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட முந்தைய மக்களின் சமூக வாழ்க்கையுடன் இன்றைய மக்களின் வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்த்திடும் இன்றைய மூத்த குடிமக்களாகிய ஆன்றோர்கள், மனித குலத்தின் முடிவும், இந்த உலகத்தின் முடிவும் மிக அருகாமையில் இருப்பதாகவே கருதுகின்றனர்.

9 காலச் சக்கரக் கணக்கும், விவிலியம் விவரிக்கும் காலச் சர்ப்பக் கணக்கும்

மாயன் காலச் சக்கரக் கணக்கு என்பது யுகங்களின் இறுதிக் கணக்காகவே இருந்தபோதிலும், உண்மையில் அது குகுல்கன் என்ற கால சர்ப்பத்தின் கணக்காகும். இன்றைய மானுடத்தின் காலம் முழுவதையும் அது ஆளுகை செய்வதால், அது கால சர்ப்பம் என்ற பெயருக்குரியதாகிறது. இந்த மகா சர்ப்பம் மாயன் பிரமிடு கோயிலை மட்டுமின்றி, உலகம் என்ற பூகோளத்தையே சுற்றி வளைத்துக் கொண்டிருக்கிறது. எகிப்திய–கல்தேய–இந்துத்துவ வான சாஸ்திரங்களின்படி, இந்த மகாசர்ப்பம் சூரிய பிபரஞ்சத்தையே சுற்றி வளைத்துக் கொண்டிருப்பதாகவும் கருத வேண்டும். மாயன் இனத்தவருடன் தொடர்புடைய அடேனா மக்கள் கி.மு. 1000இல் மண்மேடு சிற்பத்தின் மூலம் மகா சர்ப்பம் ஒன்று, பெரும் கோளம் ஒன்றை விழுங்கும்வகையில் அமைத்துள்ள வடிவமைப்பு இப்பொழுதும் மத்திய அமெரிக்காவில் உள்ளது. மாயன் இன மக்கள் வணங்கிய சர்ப்பங்களாகிய குகுல்கன், அஹ்வாச்சாபத், கெட்ஷுல்கவாஹ்டுஹ்ல், லக்கின் கேன், நாகேன், மற்றும் அஸ்டெக் இனத்தவர் வணங்கிய சிக்கோமெகோட்ஸ் சர்ப்பங்கள் எல்லாவற்றையும் குகுல்கன் என்ற பெயரிலேயே பொதுவாக அழைக்கலாம்.

மானிட பாலியல் சர்ப்பம்

உலக சர்ப்ப வழிபாடுகள் :

உலக மதங்களின் வழிபாடுகளில் காணப்படும் சர்ப்பங்கள் யாவும், மத்திய அமெரிக்க சர்ப்பங்களிலிருந்து வேறுபட்டவைகள் அல்ல. அக்னியை உமிழ்ந்தவண்ணம் அதளபாதாளத்திலிருந்து புறப்பட்டு பறந்துவரும்

'நாக்' என்ற நாக சர்ப்பங்கள் குறித்து வட இந்திய சர்ப்ப வழிபாடுகளிலும், புராணங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளன. (மாயன் சர்ப்பமாகிய 'நாகேன்' என்ற பெயரும், 'நாக்' மற்றும் 'நாகம்' என்ற பெயர்களும் வேர்ச்சொல்லில் ஒன்றுபடுவதைக் கவனிக்க வேண்டும்.) பழைய பாபிலோனிலும், எகிப்திலும், இரேக்கத்திலும், தென்னாசிய இந்தியத் துணைக் கண்டத்திலும், கிழக்காசியாவிலும் பாம்பு வழிபாடும், சூரிய வழிபாடும் ஒன்றாகவே இணைந்துள்ளன.

பாபிலோனின் 'ஈஆ' என்ற ஆதிக் கடவுள் எழுதலை நாகமாகவே உள்ளது. எகிப்திய மன்னர்கள் யாவரும், அவர்கள் இறந்த பிறகு, படமெடுக்கும் பாம்புகளாகவும், சூரிய தேவர்களாகவும் வணங்கப்பட்டனர். இரேக்க கடவுள் அப்பல்லோ ஒரு சர்ப்பக் கடவுள். ரோமர்களின் வழிபாட்டில், சர்ப்பமும் சூரியனும் ஒன்றாகவே வணங்கப்பட்டு ரோமன் கத்தோலிக்கத்திற்குள்ளேயும் நுழைந்தது. சீனா, மஞ்சூரியா, கம்போடியா, கொரியா, ஜப்பான் ஆகிய மங்கோலிய தேசங்கள் யாவற்றிலும் சர்ப்ப வழிபாடே முக்கிய இடம் வகிக்கிறது. சர்ப்பத்தை இராட்சச சர்ப்பமாகவே வணங்கும் வழக்கம் இப்பொழுதும் அங்கு உள்ளது. பண்டைய மங்கோலிய மக்களின் வாழ்க்கையுடன் சர்ப்பத்தின் வாழ்க்கையும் சகஜமாகவே இணைந்திருந்தது.

சூரிய தேவ சர்ப்பம்

உலக நாடுகள் பலவற்றிலும், தென்னாசியாவின் பழமையான 56 தேசங்களிலும், கடல் கொண்ட தென்தமிழ் நாட்டிலும் சர்ப்ப வழிபாடு முதல் இடம் வகித்துள்ளது. இந்துத்துவத்தின் சைவம், வைணவம், சாக்தம் ஆகிய மூன்றிலும் சர்ப்ப வழிபாடே முக்கிய வழிபாடாக உள்ளது. இந்துத்துவ மூலக் கடவுள்கள் அனைவருடனும் சர்ப்பம் இணைந்தே உள்ளது. சர்ப்ப வழிபாட்டுக்கென்றே இந்தியாவின் பலவிடங்களிலும் ஆலயங்கள் அமைந்துள்ளன. சர்ப்ப வழிபாட்டுடன் சூரிய வழிபாடும் இணைந்த சிற்பங்கள் நிறைய உள்ளன.

சிவலிங்கத்தைச் சுற்றியிருக்கும் நாகமே நாகேஸ்வரன் என்றும், இந்துத்துவத்தின் ஆதிக்கடவுள் ஆதிசேஷன் என்றும், விஷ்ணு

அனந்தசயனம் செய்யும் சர்ப்பம் அனந்த சேஷன் என்றும் அழைக்கப்படுகிறது. மேலும், இந்துத்துவ வழிபாடுகளில் காளிங்கன், காளஹஸ்தன், கார்க்கோடன், செங்கோடன், கோடன், வாசுகி, சாசா, சாந்தன், சாத்தன், சாபிர், நாக், நாகி, நாகின், நாகம், நாகினி, நாக்பக்கா, பவநாகா, புவநாகா, மணிநாகா, ஸ்கந்த நாகா, அஹி போன்ற பல பெயர்களால் சர்ப்பம் அழைக்கப்படுகிறது. தமிழில் பாம்பு, அரவம், உரகம் ஆகிய பெயர்களால் அழைக்கப்படும் சர்ப்பம், இலக்கியத்தில் 'குக்குடன்' என்ற பறக்கும் பாம்பாகவும் அழைக்கப்படுகிறது. குக்குடன் என்ற பெயரை குகுல்கன் என்ற மாயன் பறக்கும் பாம்புடன் ஒப்புநோக்க வேண்டிய அவசியம் உள்ளது.

யோனிலிங்க சர்ப்பம்

மேற்காணும் பாம்புகளில் பலவும் மனித வடிவிலும் வணங்கப்படுகின்றன. காளிங்கன் போன்ற பாம்புகளுக்கு இடுப்புக்கு மேற்பகுதி மனித உருவகமாகவும், கீழ்ப்பகுதி பாம்புருவமாகவும் உள்ளன. பொதுவாக சர்ப்ப வழிபாடு என்பது காமம், கோபம் ஆகியவற்றின் ஆதாரங்களாகவும் இனப்பெருக்கத்தின் ஊற்றுக் கண்ணாகவும் கருதப்படுகிறது. இது, மானுட பிறப்புறுப்புடன் தொடர்புபடுத்தப்பட்டு யோனிலிங்க வழிபாடாகவே உள்ளதாக சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பவுத்த சர்ப்பம்

இந்துத்துவம் அன்றியும் சமண, பவுத்தத்தின் தோற்றத்துடன்கூட சர்ப்பம் தொடர்புடையதாக உள்ளது. ஏழுதலை நாகத்தின் கீழ் புத்தர் அமர்ந்திருக்கும் பல புத்த விகார சிற்பங்கள் உள்ளன. கவுதம புத்தர் பிறந்தபோது அவரை இரு பறக்கும் பாம்புகள் குளிப்பாட்டின என்பது பவுத்த புராண ஐதிகம். சமண தீர்த்தங்கரர்களில் 23வது

தீர்த்தங்கரரான பார்சுவ நாதருடன் சர்ப்பம் தொடர்புடையதாக உள்ளது. இந்துத்துவ ஆதிசைவ கபாலீஸ்வர அதர்வண சர்ப்பம், யூதர்களுக்குள் கபாலீஸ சர்ப்பமாக நுழைந்து அவர்களுடைய ஆன்மீகப் பாதையை மாற்றியது.

இந்துத்துவத்தின் இருபெரும் இதிகாசங்களில் ஒன்றாகிய மகாபாரதம், ஒரு சர்ப்ப யாகத்திலிருந்து தொடங்குகிறது. மனித குலத்தின் மாபெரும் ஆன்மீக போராட்டம் மற்றொரு சர்ப்ப யாகத்தில் முடிவடைகிறது. பூலோகத்தில் சர்ப்பத்தால் மாற்றப்பட்ட மானிட சரீரம் எதுவோ, அதுவே மகாயக்ஞ யாகத்திற்கு (சிலுவைப் பலிக்கு) உள்ளாக்கப்படும்போது, சர்ப்பயாகம் முடிவடைகிறது. விவிலிய வாக்கியங்களின்படி மோசஸின் காலத்தில் சர்ப்பத்தின் உருவம் ஒரு கம்பத்தில் உயர்த்தப்பட்டபோது சர்ப்ப யாகத்தின் உற்சவம் தொடங்கியது. (எண்ணாகமம் 21:8,9) தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் சரீரம் சிலுவைக் கம்பத்தில் உயர்த்தப்பட்டபோது, சர்ப்பயாகத்தின் அசல் நிகழ்வு முடிவடைந்தது. (யோவான் 3:14) எனினும் சர்ப்பம் அதன் இறுதி முடிவைச் சந்திப்பதற்காக இன்னமும் விட்டுவைக்கப்பட்டுள்ளது. அணையப் போகும் விளக்கு சுடர்விட்டுப் பிரகாசிப்பதைப் போன்று, ஆட்டம் அடங்கப் போகும் அரவமும், ஏழு தலைகளிலும் படமெடுத்து இறுதி ஆட்டத்தை ஆடிக்கொண்டிருக்கிறது. (ஏழு தலைகளில் ஏழாம் தலையே இப்பொழுது சீறிப் பாய்ந்திடும் சீற்றத்துடன் ஆடிக்கொண்டிருக்கிறது!) சர்ப்பத்தை சூரியனாகவும், சூரியனை சர்ப்பமாகவும் வழிபடும் உலக மதங்களின் வேத ஆச்சாரியர்கள், வேத மந்திரங்களை தங்கள் மகுடிகளின் மூலம் ஒதிக் கொண்டிருக்கிறார்கள்.

பூலோக பாதாளத்தில் தள்ளப்பட்ட வேதாள சர்ப்பம், எவ்வாறு மானுடத்தின் மூலாதாரத்தில் குண்டலினியாய் குடிகொண்டது என்பது சர்ப்ப இரகசியம். தேவ குணத்தையும், தேவசாயலையும் ஆதி மனிதன் இழந்து போகும்படி செய்த சர்ப்பம், தன் சொந்த சுய குணத்தைத் தானே இழப்பதற்காக, ஆறு நிலைகளைக் கடந்து ஏழாம் நிலைக்கு ஏறிச் செல்லும் வித்தையே, குண்டலினி இராஜயோக வித்தையாகும். மேலேறிச் சென்ற இருபால் சர்ப்பம் ஒரு பாலாய் ஒன்றிணையும் உச்ச நிலையே சூரிய வழிபாட்டு சூட்சும நிலையாகும். சர்ப்ப வழிபாடும், சூரிய வழிபாடும் ஒன்றிணையும் வழிபாடே சாத்தானிய வழிபாடாகும்.

சாத்தானின் சாம்ராஜ்யம்:

ஆதி முதல் மனிதன் ஆதாம், சர்ப்பத்தால் வஞ்சிக்கப்பட்ட நேரம் முதல், மனித குலம் சர்ப்பமாகிய சாத்தானின் சாம்ராஜ்யத்திற்கு அடிமைப்பட்டுவிட்டது என்று விவிலியம் கூறுகிறது. ஆதாமையும் ஏவாளையும் ஏமாற்றிய சர்ப்பத்தைப் பார்த்து தேவன் சாபமிட்டு, இவ்வாறு தீர்க்கதரிசனம் உரைத்தார்....

"உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் வந்து உன் தலையை நசுக்குவார்; நீ அவர் குதிகாலை நசுக்குவாய்." (ஆதியாகமம் 3:15)

அவர் என்பது பரலோக தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து; சர்ப்பம் என்பது உலகை மட்டுமின்றி சூரிய பிரபஞ்சம் முழுவதையும் தனது ஆளுகையின் கீழ் வைத்திருக்கும் சாத்தான், 'உன் வித்து' எனப்படுவது சாத்தானின் சந்ததி என்றும், 'ஸ்திரீயின் வித்து' எனப்படுவது ஏவாள் வழியாய் வெளிப்படும் தேவனுடைய சந்ததி என்றும், தேவனுடைய திருச்சபையின் சந்ததி என்றும் அர்த்தமாகும்.

'நீ அவர் குதிகாலை நசுக்குவாய்' என்பது தீர்க்கதரிசனத்தின் முதற்பகுதி. 'அவர் உன் தலையை நசுக்குவார்' என்பது தீர்க்கதரிசனத்தின் இறுதிப்பகுதி. இயேசு கிறிஸ்துவை சிலுவையில் அறைந்து சாத்தான் கொலை செய்ததன் மூலம் கி.பி.31இல் தீர்க்கதரிசன முதற்பகுதி நிறைவேறிவிட்டதாகவும், கிறிஸ்துவின் மூன்றாம் வருகையின்போது, சாத்தான் அழிக்கப்படும்போது, தீர்க்கதரிசனத்தின் இறுதிப் பகுதி நிறைவேற வேண்டும் என்றும் விவிலிய விளக்கங்கள் கூறுகின்றன.

விவிலிய விளக்கங்களின்படி, மெய்யான ஒரு தெய்வத்துக்குரியதாய் சிருஷ்டிக்கப்பட்ட மனிதகுலம், அதன் தொடக்கத்திலேயே சாத்தானின் சாம்ராஜ்யத்துக்குரியதாய் மாறியது. இருப்பினும் மெய்தேவன் தனது பாசத்தின் காரணமாக தனக்குரிய மக்களை (ஸ்திரீயின் வித்து) தனியாகப் பிரித்தெடுக்கத் தொடங்கினார். இதுவே, மெய் தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையிலான மாபெரும் ஆன்மீகப் போராட்டமாகத் தொடங்கியது. (இந்தப் போராட்டம்

முடிவடையும்போது காலச் சர்ப்பக் கணக்கும், காலச் சக்கரக் கணக்கும் முடிவடைய வேண்டும்.)

விவிலியம் என்ற வேதாகமம், கிறிஸ்தவ மதத்தவர்களின் வேத நூல் என்ற பொதுவான நம்பிக்கையையும், மதப் பாகுபாடுகளையும் கடந்து, மனிதகுலம் பற்றிய ஆன்மீக உண்மைகளை ஆராய்ந்தறிய வேண்டியது இங்கு அவசியமாகும். ஏனெனில், ஆதாமும் ஏவாளும் எந்த மதத்தவர்களும் அல்ல. ஆதியாகமத்திலிருந்து தொடங்கும் விவிலிய வேதாகமம், முதல் மனிதனின் மெய்யான சந்ததிக்குரிய வேதாகமமாக தொடங்குகிறதேயன்றி, ஒரு மதத்தின் வேதாகமமாகத் தொடங்கவில்லை. (அவ்வாறானால் இன்றையக் கிறிஸ்தவ மதம் பற்றிய பல கேள்விகளுக்கும் பதில் கண்டறிய வேண்டியது அவசியமாகும்.)

விவிலியம் விவரிக்கும் உண்மைகளின்படி... கிறிஸ்துவின் மூன்றாம் வருகையின்போது சாத்தானும், அவனைச் சார்ந்த மக்களும் (வானத்திலிருந்து வந்த மகாவலிய சர்ப்பமும், அதன் ஆளுகைக்குரிய மக்களும்) முற்றிலுமாக அழிக்கப்பட்டு, மாபெரும் ஆன்மீகப் போராட்டத்திற்கு முடிவு காணப்படுகிறது. இதற்கு ஆயிரம் வருடங்கள் முன்னதாக, இயேசுவின் இரண்டாம் வருகையில் சாத்தானின் சாம்ராஜ்யம் முடிவுக்கு வரும். அதுவே இன்றைய உலக வரலாற்றின் முடிவாக அமையும். அது, சர்ப்பமாகிய சாத்தானை சம்ஹாரம் (சர்ப்ப சம்ஹாரம்) செய்வதற்குரிய தொடக்க நாளாக அமையும். (சூர சம்ஹாரம், அசுர சம்ஹாரம் என்பவைகள் சர்ப்ப சம்ஹாரமே). அவருடைய இரண்டாம் வருகையின் நாளில் சாத்தானுக்குரிய மக்கள் முதல் மரணத்தைச் சந்திப்பார்கள். தேவனுக்குரிய மக்கள் மரணமடைந்தவர்களாக இருந்தாலும், உயிருடன் இருப்பவர்களாக இருந்தாலும், தேவனுடன் கூட வானத்திற்கு அப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

இன்றைய உலக வரலாற்றின் இறுதி நாளுக்கு முன்னதாக, மகா உபத்திரவங்களின் காலத்தை இவ்வுலகம் சந்தித்தாக வேண்டும். எப்பொழுது இவ்வுலக மக்களின் மீது ஒரே தெய்வத்தின் அருட் கிருபையின் காலம் முடிவுக்கு வருகிறதோ, அது முதல் மகா உபத்திரவங்கள் தொடங்கும். அப்பொழுது பஞ்சபூதங்களும் மனிதனுக்கு விரோதமாய் மாறும். தேவனுடைய அருட் கிருபையின் கால முடிவுக்கு

முன், கிறிஸ்தவ மதம் கடந்த மெய் கிறிஸ்துவ மார்க்கம் அடையாளம் காண்பிக்கப்படும். இயேசு கிறிஸ்துவையே மூலைக் கல்லாகக் கொண்டு எழுப்பப்பட்ட மெய் கிறிஸ்துவ மார்க்கம் இதுதான். இது, ஆதாமின் மெய்யான சந்ததியாகிய மனித குலத்தவர் அனைவருக்கும் உரியது. இந்த மெய் கிறிஸ்துவத்தை கிறிஸ்தவ மதமே எதிர்த்து அழித்தொழிக்கும் முயற்சியில் ஈடுபடும்! இதற்காகவே சாத்தான் தனது ஆளுகையின் கீழுள்ள உலக நாடுகள் மூலம் மெய் கிறிஸ்துவத்தின் ஆராதனை நாளுக்கு (ஏழாம் நாளாகிய சனிக்கிழமை) விரோதமாக உலகளாவிய ஆணை ஒன்றைப் பிறப்பித்திடுவான். இந்த ஆணை பிறப்பிக்கப்படும் காலமே, மெய்கிறிஸ்துவ மார்க்கம் தனது ஊழியத்தை மிகுந்த வல்லமையுடன் தொடங்கும் காலமாகும். (இந்த மார்க்கம் ஏற்கெனவே 19ஆம் நூற்றாண்டின் மத்தியில் தனது ஊழியத்தைத் தொடங்கி தற்போது ஸ்தாபன மத அமைப்பாக இயங்கி வருகிறது.) இந்த ஊழியம் முடிவடையும் காலமே தேவனின் அருட்கிருபை முடிவடையும் காலம். இவைகள் யாவும் விவிலியம் கூறும் முதல் தீர்க்கதரிசனத்தின் (ஆதியாகமம் 3:15) வழியாகவும், தானியேல் மற்றும் வெளிப்படுத்திய விசேஷப் புத்தகங்களுக்குரிய தீர்க்கதரிசன விளக்கங்களின் வழியாகவும் பெறப்படும் உண்மைகள் ஆகும்.

இந்த உண்மைகளுக்குள் இன்றையக் காலச் சக்கரக் கணக்கு முழுவதும் அடங்கியுள்ளது. இந்தக் காலச் சக்கரக் கணக்கு என்பது, ஆதாம் ஏவாள் வழியாக தனது இராஜ்யத்தை மனித குலத்தில் ஸ்தாபித்த, கால சர்ப்பத்தின் (சாத்தானின்) கணக்காகும். அது காலங்களைத் தனக்குள் விழுங்கிக் கொண்டிருக்கிறது என்பது மட்டுமின்றி, காலனாகிய மரண தேவனாகவும் அது இருப்பதினால், அது கால சர்ப்பமாயிற்று.

10

விவிலியம் விவரிக்கும் வேறு இருவகை மகா தீர்க்க தரிசனங்கள்

மகா சர்ப்பமாகிய சாத்தானைக் குறித்து விவிலியத்தின் வழியாக இதுவரை வாசித்த தீர்க்கதரிசனக் காலச் சக்கரக் கணக்கிற்குள், வேறு இருவகைத் தீர்க்கதரிசனங்களும் அடங்கியுள்ளன. ஒன்று, உலக அரசியல் ஆதிக்க வல்லமை பற்றிய வரலாற்று தீர்க்கதரிசனம். மற்றொன்று, தேவனுடைய ஆலயத்தை அடிப்படையாகக் கொண்ட தேவாலய தீர்க்கதரிசனம்.

மகா சர்ப்பமாகிய சாத்தான், தனது தலையை நசுக்கப்போகும் இயேசு கிறிஸ்து, இந்த பூமியில் அவதாரமாய் தோன்றுவதைத் தடை செய்வதற்காகவே, தேவ குணத்துடன் பிறந்த ஆதாமின் மகன் ஆபேலைக் கொலை செய்தான். எனினும், இயேசு பிறக்கப் போகும் சந்ததி, ஆதாமின் அடுத்த மகன் சேத் வழியாகத் தோன்றி, நோவா வழியாக முதல் யுகப் பிரளயத்தைக் கடந்து, ஆபிரகாம் என்ற மனிதனுக்குள் நிலை கொண்டது. ஆபிரகாமின் பேரனின் வழியாக, இஸ்ரேல் என்ற இனமும், அந்த இனத்திற்காக யூத மதமும் தோன்றியது. மோசஸ் என்ற மாமனிதனின் காலத்தில் சடங்காச்சார ஆலய வழிபாட்டுமுறை, திருச்சபைக்குரிய அடிப்படை சத்தியத்துடன் தோன்றியது. தாவீதின் மகன் சாலமோனின் காலத்தில் சடங்காச்சார வழிபாட்டு முறைகளுக்குரிய தேவாலயம் ஜெருசலேம் நகரில் எழும்பியது. இயேசு பிறந்திடும் சந்ததியாகிய இஸ்ரேல் இனத்தையும், யூத மதத்தையும், ஜெருசலேம் தேவாலயத்தையும் சாத்தானால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

தேவன் அருளிய பத்துக் கட்டளைகளின் வழியாக உருவாகவேண்டிய தேவனுக்குரிய மனித குணத்தை, சாத்தான் ஒவ்வொரு சந்ததியிலும் கெடுத்து, அவர்களை ஆலயத்திற்கு ஆகாதவர்களாக மாற்றினான். தன்னைவிட்டு விலகிச் செல்லும் தனது

மக்களையும், அவர்களுடைய ஆலயத்தையும் தேவன் சாத்தான் வசமாகவே ஒப்படைத்தார். சாத்தானின் ஏவுதலின்படி பாபிலோனின் மன்னன் கி.மு. 605இல் இஸ்ரேல் மக்களின் தேசத்தின்மீது (யூதாதேசம்) படையெடுத்து, தேவாலயத்தின் தெய்வீகப் புனிதத்தைக் கெடுத்து, இஸ்ரவேல் மக்களையும் சிறைப்படுத்திச் சென்றான். இஸ்ரேலின் இளைஞர்களில் மகாஞானியாகிய தானியேல் என்பவரும் சிறைக் கைதியாகி பாபிலோனியச் சிறையில் இருந்தார். உலக அரசியல் ஆதிக்க வல்லமை பற்றிய தீர்க்கதரிசனமும், தேவனுடைய ஆலயத்தை அடிப்படையாகக் கொண்ட தேவாலய தீர்க்கதரிசனமும் இஸ்ரேலின் இளம்ஞானியாகிய தானியேல் மூலமாகவே தேவனால் அருளப்பட்டன. இவை பற்றிய விவரங்களை இனிக் காண்போம்.

10(அ) உலக அரசியல் ஆதிக்க வல்லரசுகள் பற்றிய தீர்க்கதரிசனக் கணக்கு

பயங்கர மனிதச் சிலை :

உலக அரசியல் ஆதிக்க வல்லரசுகள் பற்றிய தீர்க்கதரிசனக் கணக்கு என்பது, விவிலியம் கூறும் நான்கு வேதவசனப் பகுதிகளை ஆதாரமாகக் கொண்டது. அவைகள் முறையே, தானியேல் 2:31–45,7:6–28, வெளிப்படுத்துதல் 13:1–8, 17:1–18 ஆகிய வசனங்களுக்குரியவைகளாகும். இவ்வசனங்களில் மறைந்துள்ள உண்மைகளின் அடிப்படையிலேயே காலச் சக்கரத்தின் கடைசி சுழற்சியின் கடைசி நாளைக் கண்டறிந்தாக வேண்டும்.

கி.மு. 600க்கு முன்பு இஸ்ரேலியர்கள் (யூதர்கள்) வாழ்ந்த யூதா தேசத்தையும், ஜெருசலேம் தேவாலயத்தையும் பாழாக்கிச் சிரழித்த பாபிலோன் பேரரசன் நேபுகாத்நேச்சார், ஒரு நாள் இரவு தனது படுக்கையில் படுத்திருக்கையில் தனது இராஜ்யத்தைக் குறித்தும், தனது சாதனைகளைக் குறித்தும் பெருமையுடன் சிந்தித்துக் கொண்டிருந்தான். தொடர்ந்து தனது காலத்திற்குப் பிறகு தனது இராஜ்யத்தின் எதிர்காலம் பற்றிய கேள்விகள் அவனது மனதில் எழுந்தன. கேள்விக்கு விடை கிடைத்திடாத நிலையில், உறக்கம் அவனைத் தழுவியது. அந்த

உறக்கத்தில் பயங்கரக் கனவு ஒன்று அவனுக்கு ஏற்பட்டு. அந்தக் கனவுக் காட்சியின் முடிவு அவனது உறக்கத்தை கலைத்தது. மறுநாள் காலையில் அவன் தனது அரசவையைக் கூட்டி, இராஜ்யத்தின் சாஸ்திரிகள், ஜோஸியர்கள், சூனியக்காரர்கள், மந்திரவித்தைக்காரர்கள், வான சாஸ்திரிகளாகிய கல்தேயர்கள் ஆகியோரிடத்தில் முதல் நாள் இரவில் தான் கண்ட கனவின் காரணமாக, தான் மிகவும் கலங்கியிருப்பதாகக் கூறி, கண்ட கனவையும், கனவின் அர்த்தத்தையும் கூறுமாறு கட்டளையிட்டான்.

பேரரசனின் கனவையும், கனவின் அர்த்தத்தையும் எவரும் எடுத்துரைக்க முடியவில்லை. இஸ்ரேல்–யூதாவிலிருந்து சிறைபிடித்துக் கொண்டுவரப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த இளைஞர்களில் தானியேல் என்ற இளைஞர் மிகவும் ஞானியாகவும், தேவபக்தனாகவும் இருந்தார். பாபிலோன் இராஜா கண்ட கனவு பற்றி தானியேலுக்கு அறிவிக்கப்பட்டவுடன், தானியேல் தேவசமூகத்தில் வேண்டுதல் செய்த போது, அவருக்கு இராஜா கண்ட கனவும், கனவின் அர்த்தமும் தேவ தரிசனமாக விளக்கப்பட்டது.

உலக வரலாற்றுச் சிலை

இராஜாவுக்கு முன்பாக தானியேல் சென்று, இராஜா கண்ட கனவையும், கனவின் அர்த்தத்தையும் விளக்கிக் கூறினார். அவர் விளக்கிக் கூறிய விவரங்களாவன.

“இராஜா தனது கனவில் பயங்கரச் சிலை ஒன்று நிற்பதைக் கண்டார். அந்தச் சிலையின் தலை பசும்பொன்னாகவும், அதன் மார்பும், தோள்களும் வெள்ளியாகவும், அதன் வயிறும் தொடையும் வெண்கலமாகவும், அதன் கால்கள் இரும்பாகவும், அதன் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாகவும் இருந்தன. அந்தப் பிரம்மாண்டச் சிலையின் கால் பாதங்களின் மீது கைகளால் பெயர்க்க முடியாத ஒரு மாபெரும் கற்பாறை ஒன்று மலையிலிருந்து பெயர்ந்து உருண்டுவந்து மோதி, அந்தச் சிலையைச் சுக்கு நூறாக உடைத்துச் சிதறடித்தது. சிலையின் மீது

மோதிய பெரும்பாறை. ஒரு பெரிய மலையாக மாறி பூமியையெல்லாம் நிரப்பியது."

இராஜா கண்ட கனவைக் கூறிய தானியேல் அதன் அர்த்தத்தையும் விளக்கிக் கூறினான்.... "சிலையின் பொன்மயமான தலைப்பகுதி என்பது நேபுகாத்நேச்சார் ஆண்டு கொண்டிருந்த பொற்கால இராஜ்யத்தின் காலமாகும். அவருடைய காலத்திற்குப் பிறகு, பொன்னிலிருந்து தரம் குறைந்த வெள்ளிக்கு ஒப்பாகிய இரண்டாவது இராஜ்யம் வரும். அது உலகையெல்லாம் ஆண்டுகொள்ளும். அதற்குப் பிறகு வெள்ளியிலிருந்து தரம் குறைந்த வெண்கலத்திற்கு ஒப்பாகிய மூன்றாம் இராஜ்யம் தோன்றும். அதையடுத்து வெண்கலத்திலிருந்து தரம் குறைந்த இரும்புக்கு ஒப்பாகிய நான்காம் இராஜ்யம் தோன்றி இரும்பின் வலிமையைக் கொண்டு உலகத்தில் எல்லாவற்றையும் தகர்த்துப்போடும். அதற்குப் பிறகு, இரும்பிலிருந்து தரம் குறைந்த இரும்பும் களிமண்ணுமாய் சேர்ந்த கடைசி இராஜ்யம் தோன்றும். வலிமையுள்ளதும் வலிமையற்றதுமாகிய அந்த இராஜ்யம் ஒன்றுடன் ஒன்று உறவு கலவாமல் பல ராஜாக்களுக்குரிய ராஜ்யங்களாய்ப் பிரிந்திருக்கும். இறுதி இராஜ்யம் எனப்படும் அந்த இராஜாக்களின் முடிவு காலத்தில், பரலோகத்தின் பரமதேவன் பூலோகத்தில் என்றென்றைக்கும் அழியாத தமது தேவ இராஜ்யத்தை ஏற்படுத்துவார். இதுவே கைகளினால் பெயர்க்கமுடியாத ஒரு கல் மலையிலிருந்து உருண்டுவந்து சிலையின் பாதங்களில் மோதியதன் அர்த்தமாகும்"... என்று தானியேல் கூறியதுடன், "நீங்கள் கண்ட கனவு நிறைவேறுவதுடன், அதன் அர்த்தமாகிய சத்தியமும் நிச்சயமாய் நிறைவேறும்" என்றும் கூறினார்.

மனிதச் சிலையின் அங்கங்களும், மகா ராஜ்யங்களும் :

பாபிலோனிய பேரரசன் நேயுகாத்நேச்சாரின் மகன் பெல்ஷாத்சாரின் காலத்தில், தானியேல் பாபிலோன் தேசத்தில் ஒரு மாநிலத்தின் ஆளுநராக இருந்தார். அப்பொழுது ஒரு நாள் இரவில், ஏற்கெனவே அவர் கண்ட சிலை பற்றிய தரிசனங்களுக்கு வேறு விரிவான விளக்கங்கள் தேவ தரிசனமாக காண்பிக்கப்பட்டன. சிலையின் ஒவ்வொரு பகுதிகளாகிய ஒவ்வொறு இராஜ்யங்களும் ஒவ்வொரு விந்தையான மிருகங்களாக காண்பிக்கப்பட்டன.

நேபுகாத்நேச்சாரின் பாபிலோனிய இராஜ்யமே, உலக வரலாற்றில் முதல் பொற்கால ராஜ்யம். இது யூப்ரடிஸ்–டைகிரிஸ் நதிப் பகுதி முதல் நைல் நதிப் பகுதி வரையில் பரவியிருந்தது. இதுவே சிலையின் தலைப்பகுதி. இது கி.மு. 605 முதல் 539 வரையிலான காலப் பகுதியாகும். அடுத்து பாபிலோன் ராஜ்யத்தையே தலைமையாகக் கொண்ட மேதியா இராஜ்யமும், தொடர்ந்து பெர்ஷியா இராஜ்யமும் உலகின் இரண்டாவது இராஜ்யமாய் தோன்றின. அகாஸ்வேரு என்ற அரசனின் காலத்தில், பெர்ஷிய இராஜ்யம் சூசானைத் தலைநகராகக் கொண்டு, எத்தியோப்பியா முதல் தென்னாசிய (இந்திய) சிந்து தேசம் வரையில் பரவியிருந்தது. இது சிலையின் மார்பு–தோள் பகுதி. இதன் காலம் கி.மு. 539 முதல் 331 வரையிலான காலப்பகுதி. அடுத்து ஏதென்ஸ் நகரை தலைநகராகக் கொண்ட கிரேக்க ஆட்சி, மாவீரன் அலெக்ஸாண்டர் காலத்தில் மத்தியத் தரைக்கடல் பகுதியின் வடபகுதியாகிய கிழக்கு ஐரோப்பிய மாசிடோனியா, தென்பகுதியாகிய எகிப்திய நைல் நதி திரம் தொடங்கி தென்னாசிய (இந்திய) சிந்து சமவெளி வரையில் பரவியிருந்தது. இது சிலையின் வயிறு மற்றும் தொடைப்பகுதியாகிய மூன்றாம் இராஜ்யம். இதன் காலம் கி.மு. 336 முதல் 168 வரையிலாகும். அடுத்து ரோமாபுரியைத் தலைநகராகக் கொண்ட ரோமப் பேரரசு உலகப் பேரரசாய் தோன்றியது. மத்தியத் தரைக்கடற்பகுதியைச் சூழ்ந்துள்ள அனைத்து நாடுகளும், இங்கிலாந்தும், யூப்ரடிஸ்–டைகிரிஸ் நதிக்கரை நாடுகளும் ரோமப் பேரரசின் கீழிருந்தன. கி.மு. 168 முதல் கி.பி. 538 வரையில் உலகையே ஆண்ட அரசியல் ஆதிக்க ரோமப் பேரரசு, சிலையின் இரும்புமயமான கால் பகுதியின் முதற் பகுதியாகும். இதன் மறுபகுதி கி.பி.538 முதல் தொடங்கிய ரோமன் கத்தோலிக்க மதப் பேரரசாகும். மதத்தின் பெயராலும், போப்பாண்டவரின் பெயராலும் நடைபெற்ற ஆட்சி ஐரோப்பா முழுவதிலும் அரசியலும் ஆன்மீகமும் கலந்த மகாப் பேரரசாக விளங்கியது என்பதை வரலாறு விளக்கிக் கூறுகிறது. 538இல் தொடங்கிய போப்பாதிக்க வல்லரசு கி.பி. 1798 வரையில் 1260 ஆண்டுகள் மாபெரும் வல்லரசாகவே விளங்கியது.

இதனை விவிலியம் திர்க்கதரிசனமாகவே விளக்கிக் கூறுவதுடன், இக்காலத்தில், மகா சர்ப்பமாகிய சாத்தானின் பார்வையிலிருந்து விலகி, மெய்கிறிஸ்துவ மார்க்கம் மறைவிடங்களில் மறைந்து வாழ்ந்தது

என்பதையும் எடுத்துரைக்கிறது. (தானியேல் 7:7.8, 24,25, 8:9–11, 12:7, வெளிப்படுத்துதல் 12:14,15, 13:1–3,4, 17:7, 9–12) இத்தீர்க்கதரிசனங்கள் யாவும் மறைபொருளாய் கூறப்பட்டவைகள். ஏறத்தாழ 13 நூற்றாண்டுகள் உலகப் பேரரசாய் விளங்கிய ரோமப் போப்பாட்சியின் காலத்தில், மெய்கிறிஸ்துவத்திற்கு மாறுபட்ட ரோமன் கத்தோலிக்க மதமே உலகளாவிய மதமாகப் பரவியது. ரோமன் கத்தோலிக்க மதப் பேரரசுக்கு இணையான மற்றொரு பேரரசு உலக வரலாற்றில் வேறு எதுவும் இடம் பெறவில்லை.

ரோமன் கத்தோலிக்கப் போப்பாட்சியின் அரசியல் ஆதிக்கவல்லமை கி.பி. 1798இல் ஃப்ரான்ஸ் நாட்டின் மாவீரன் நெப்போலியன் மூலம் மாபெரும் அதிர்ச்சிக்குரிய வீழ்ச்சியைச் சந்தித்தது. சிலையின் நான்காம் பகுதியின் பிற்பகுதி (ஐந்தாம் ராஜ்யம்) இவ்வாறு முடிவடைந்து, சிலையின் ஐந்தாம் பகுதியாகிய பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாகிய சிலையின் பாதப் பகுதி தொடங்கியது.

சிலையின் கால் பாதப் பகுதி :

ரோமன் கத்தோலிக்கப் போப்பாட்சி 1798இல் வீழ்ச்சி அடைந்தது என்றாலும் 1922இல் இத்தாலியின் அதிபர் முசோலினியின் காலத்தில், அது, கொடுங்கோலாட்சியின் இரத்தக் கறை படிந்த செந்நிறத்தை மாற்றிக் கொண்டு, உலக சமாதானத்தைக் குறித்து மிகவும் கவலையுடன் பேசும் வெண்ணங்கியுடன் அது வெளியில் வந்தது. போப்பாட்சியை வீழ்த்திய ஃப்ரான்ஸ் தேச நெப்போலியனின் முடியாட்சியை பிரிட்டிஷ், டட்ச், ஜெர்மானிய தேசங்கள் வீழ்த்தியது. ஃப்ரஞ்ச் புரட்சியின் மூல வித்தாக இருந்த சமதர்ம நாத்திகக் கோட்பாடு பொதுஉடைமைக் கோட்பாடாகி, வடக்காசிய சோவியத் யூனியனாக மாறியது. இதுவே ஆறாவது இராஜ்யமாகும் . தொடர்ந்து ஐரோப்பா முழுவதும் போர் மேகங்களே சூழ்ந்திருந்தன. 17ஆம் நூற்றாண்டில் உலக அரங்கில் புதிதாய் பிறந்த அமெரிக்காவும் தனது சொந்த அமைதிக்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடும் தேசமாக்வே இருந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கமும், மத்தியப் பகுதியும் இரு மாபெரும் உலக யுத்தங்களை சந்தித்தன. அமெரிக்காவின் அணுகுண்டு வீச்சின் காரணமாக ஜப்பானின் ஹிரோஷிமா–நாகசாகி பகுதிகளில் 1,20,000 மக்கள் கொல்லப்பட்டப் பேரழிவுடன் இரண்டாம் உலகப் பெரும்போர் முடிவடைந்தது.

இதனைத் தொடர்ந்து, தென்னாசியப் பகுதியில் 62 ஆண்டுக் கால இந்திய சுதந்திரப் போராட்டம் முடிவுக்கு வந்தது. கொரியா போர், வியட்நாம் போர், ஈரான் போர், ஈராக் போர் ஆகியவற்றின் கதாநாயகனாக விளங்கிய அமெரிக்கா முந்தையப் பேரரசுகளுக்கு ஒப்பான தனிப்பெரும் பேரரசாக உருவாக முடியவில்லை. உலக வல்லரசாய் மாறிவிடுமோ என்ற கேள்விக் குறியுடன் வட ஆசியாவில் தோன்றிய சோவியத் யூனியன் 1991இல் வீழ்த்துவாரின்றி வீழ்ந்து போனது. கிழக்காசியாவில் 1949இல் செஞ்சுடராய்த் தோன்றிய செஞ்சீனாவில் சமதர்ம சுதந்திரத்திற்காகப் போராடிய 3000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கொலை செய்யப்பட்டதன் மூலம் தியானன்மென் சதுக்கம் செஞ்சதுக்கமாய் மாறியது. இந்தியத் துணைக் கண்டத்தின் தென்கோடித் தீவில் கால் நூற்றாண்டுக் காலத்திற்கும் மேலாக நடைபெற்ற ஈழவிடுதலைப் போர், 2009 மே திங்களில் முடிவுற்றபோது, அரை இலட்சம் தமிழர்களின் தமிழ் இரத்தம் ஈழ நிலத்தை சிவந்த சிங்கள நிலமாக மாற்றியது. வேதாகமம் கூறும் வெட்டுக்கிளிகள் ஏற்படுத்தும் வெடிச் சத்தங்களின் விபரீதங்கள், பயங்கரவாதங்களாகவும், தீவிரவாதங்களாகவும் அவ்வப்போது உலகின் பல பகுதிகளில் நிகழ்ந்து கொண்டே உள்ளன.

இத்தகைய அமைதியற்ற சூழல்களுக்கிடையில், 193 நாடுகள் அங்கம்வகிக்கும் ஐக்கிய நாடுகளின் சபையில் அமெரிக்க ஐக்கிய குடியரசு தனது செல்வாக்குமிக்க முத்திரைகளை அவ்வப்போது பதித்து வருகிறது. உலக நாடுகளை சமாதானத்தின் பெயரால் ஒன்றுபடுத்துவதற்காகவே 1945 முதல் 51 நாடுகளுடன் உருவாகிய ஐக்கிய நாடுகளின் சபையில் உலக சமாதானம் என்பது கேள்விக் குறியாகிக் கொண்டிருக்கிறது. செயற்கைச் சீரழிவுகளும், இயற்கைப் பேரழிவுகளும், தீவிரவாத பயங்கரவாத பாதிப்புகளும், இனப்படுகொலைகளும், மதப் படுகொலைகளும் ஒவ்வொரு நாளும் பெருகிக் கொண்டே உள்ளன. ஒவ்வொரு நாளிலும் பூபாகத்தின் ஏதோ ஒரு பகுதி பூகம்பத்தால் நடுங்கிக்கொண்டே உள்ளது. மானிட அறிவுப் பெருக்கம் விண்ணைத் தொடும் வகையில் வளர்ந்திருந்தபோதிலும், அதன் மறுபக்கம் மனித குலத்திற்கே கேடு விளைவிப்பதாய் மாறிக்கொண்டிருக்கிறது. சமூக அமைதி குலைந்துள்ள நிலையிலும், பொருளாதார நெருக்கடி சூழ்ந்துள்ள நிலையிலும், தங்கள்

பிரச்சினைகளுக்கு தீர்வினைத் தேடும் நாடுகளுக்கிடையில் அமெரிக்கா தன்னை நாட்டாண்மை நாயகனாக மாற்றிக் கொண்டு உலகையே வலம் வருகிறது. ஆணுக்குப் பெண் என்று ஆண்டவர் ஆரம்பித்துக் கொடுத்த இல்லற ஒழுக்கத்தின் தொடக்கம், ஆணுக்கு ஆண் என்றும் பெண்ணுக்கு பெண் என்றும் வாழும் சாத்தானிய ஒழுக்கக் கேடாகிய புற்று நோயாக மானுடத்திற்குள் ஊடுருவிக் கொண்டிருக்கிறது.

வேதாகம தீர்க்கதரிசனத்தில் அமெரிக்கா:

சிலையின், கால்பகுதியில் பெரும்பங்கை வகிப்பது அமெரிக்க ஐக்கிய நாடு. வேதவசனம் அமெரிக்காவை வேறொரு மிருகம் என்றும், இரு கொம்புகளை உடைய ஆட்டுக் குட்டிக்கு ஒப்பானதாய் வலுசர்ப்பத்தைப் போல் பேசியது என்றும் குறிப்பிடுகிறது. (வெளிப்படுத்துதல் 13:11) பட்டியலிடப்படும் மிருகங்களின் (இராஜ்யங்களின்) வரிசையில் அமெரிக்கா ஏழாவது மிருகமாக உள்ளது. (வெளிப்படுத்துதல் 17:10,11) போப்பாட்சியை வீழ்த்திய மிருகம் ஃப்ரான்ஸ் என்ற ஆறாவது மிருகம். இருபதாம் நூற்றாண்டில் இத்தாலிய முசோலினியின் கரம்பிடித்து வெளியில் வந்ததும், 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் நெப்போலியனால் வீழ்த்தப்பட்டதுமாகிய ரோமன் கத்தோலிக்கப் போப்பாட்சியே ஐந்தாம் மிருகமாகும். இந்த ஐந்தாம் மிருகமே மீண்டும் எட்டாவது இறுதி மிருகமாக உலக அரங்கில் வெளிப்பட்டாக வேண்டும். அது மீண்டும் வெளிப்படுவதற்கும், உலகையே ஆளும் அரசியல் ஆதிக்க சக்தியாக அரியணை ஏறுவதற்கும் ஏழாம் மிருகமாகிய அமெரிக்கா பெரும் பங்காற்றிடும் என்பது தீர்க்கதரிசனமாகும்.

பதினாறு மற்றும் பதினேழாம் நூற்றாண்டுகளில் கத்தோலிக்க போப்பாட்சியின் கொடுமைகளுக்குத் தப்பி ஐரோப்பாவைவிட்டு வெளியேறியவர்களுக்கு புகலிடமாக விளங்கிய புதிய தேசமே அமெரிக்கா. 'தேவனையே நம்புகிறோம்' (We Trust in God) என்ற முழக்கத்தையே தேசிய முழக்கமாகக் கொண்டு எழுந்த அமெரிக்க தேசமே, வெளிப்படுத்துதல் 13ஆம் அதிகாரத்தின்படியும், 17ஆம் அதிகாரத்தின்படியும் தேவனுக்கு விரோதமாக ஐந்தாம் மிருகத்திற்கு கைலாகு கொடுத்து மீண்டும் அரியணையில் அமர்த்தும் தேசமாக மாறிவிடும் என்பதே தீர்க்கத்தரிசனமாகும். ரோமன் கத்தோலிக்க

போப்பாதிக்கக் கொடுமைகளுக்கு அஞ்சிப் புகலிடமாய்க் கிடைத்த அமெரிக்க நிலத்தில் குடியேறிய புரொட்டஸ்டன்டுகள், ரோமன் கத்தோலிக்க போப்பதிகாரத்தை உலகாளும் ஒரே அதிகாரப் பேரரசாக மாற்றுவார்கள் என்பதே வியப்புக்குரிய தீர்க்கதரிசனமாகும்.

தானியேல் கண்ட தரிசனமாகிய சிலையின் கால் பாதப் பகுதியாகிய இறுதிக் காலம், 18ஆம் நூற்றாண்டின் இறுதி முதல் (1798) தொடங்கியதாகக் கருத வேண்டும். கி.மு. 2 ஆம் நூற்றாண்டு முதல் இரும்பின் வல்லமையைப் போல் அரசியல் ஆதிக்க ஆட்சியைத் தொடங்கிய ரோமபுரிப் பேரரசு, 7 நூற்றாண்டுகளுக்குப் பிறகு மதத்தின் பெயரால் அரசியல் ஆதிக்கப் பேரரசாக மாறி, 13 நூற்றாண்டுக் கால ஆட்சிக்குப் பிறகு வீழ்ச்சியடைந்த நிலையில், உலக ராஜ்யங்களின் அரசியல் நிலை என்பது ஒன்றுடன் ஒன்று கலவாததும், ஒன்றுக்கு ஒன்று எதிரானதாகவும் மாறியது.

உலக மக்களின் வாழ்க்கைத் தரம் என்பது இந்த இறுதிக் காலத்தில் அறிவால் உயர்ந்து, அநாகரிக ஒழுக்கக் கேடுகளால் தரம் தாழ்ந்து வீழ்ந்து கொண்டிருக்கிறது. இத்தகையச் சூழ்நிலையில், உலக ராஜ்யங்கள் முழுவதையும் ஒன்றாக ஆள்வதற்காக மாபெரும் மதபீடத்தில் அமர்ந்திருக்கும் மகா சக்தியொன்று, உலக சமாதானத்திற்காக மிகவும் கவலைப்படும் சாந்தசொரூபியாக வெளிப்படுகிறது. இந்த மகா சக்தியை வேதாகமத்தின் வெளிப்படுத்துதல் 13ஆம் அதிகாரம் ஒரு பயங்கர மிருகமாக வர்ணிக்கிறது. இந்த பயங்கர மிருகத்தை பிரம்மாண்டமான மகாவலிய சர்ப்பம் ஒன்று திரைமறைவிலிருந்து இயக்கிக் கொண்டிருப்பதாக அது விவரிக்கிறது. இந்த மகா சர்ப்பத்தைக் குறித்தும், அதனால் ஆளப்படும் பயங்கர மிருகத்தைக் குறித்தும் இனிக் காண்போம்.

ஏழு தலைகளும் பத்து கொம்புகளும் உடைய பயங்கர மிருகமாகிய மகா வலிய சர்ப்பம் :

இந்த உலகத்தை மட்டுமின்றி, சூரிய பிரபஞ்சத்தையே சுற்றி வளைத்துக் கொண்டிருக்கும் மகாசர்ப்பம், உலக இராஜ்யங்களின் அதிகார அரியாசனங்களில் காலங்கள் தோறும் அமர்ந்திருப்பதை, ஏழு தலைகளும், பத்து கொம்புகளும் கொண்ட பயங்கர மிருகமாகவும் வேதாகம தீர்க்கதரிசனம் சித்தரிக்கிறது. இந்துத்துவ நம்பிக்கையின்படி

சர்ப்பத்தின் ஏழு தலைகளும் பிரபஞ்சத்தின் ஏழு கிரகங்களாகும். இவற்றில் ஒரு தலையாக இருப்பதே இவ்வுலகமாகிய பூமி. இதனையே, 'புவியோ அரவினுக்கு ஒரு தலைப் பாரம்' என்று அவ்வையார் பாடியுள்ளார். இந்த சர்ப்பத்தை பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் என்றும், சாத்தான் என்றும் அடையாளம் காண்பிக்கிறது விவிலியம். (வெளி 12:9) விவிலிய வேத வசனங்கள் விவரிக்கிறவாறு, இந்த பயங்கர மிருகத்திற்கு ஏழு தலைகளும், பத்து கொம்புகளும் இருப்பதுடன், அதன் தலைகளின்மேல் பத்து முடிகளும், மெய்தேவனைப் பழிக்கும் நாமமும் இருந்தன. இந்த விசித்திர மிருகம் சிறுத்தையைப் போலிருந்தது. அதன் கால்கள் கரடியின் கால்களைப் போலவும், அதன் வாய் சிங்கத்தின் வாயைப் போலவும் இருந்தன. தானியேல் தனது தரிசனத்தில் கண்ட மிருகங்களில் மூன்றாவது இராஜ்யமாகிய கிரேக்க இராஜ்யத்துக்குரிய சிறுத்தையின் தோற்றமே இந்த பயங்கர மிருகத்தின் அடிப்படைத் தோற்றம். ஆனால், முதலாம் இராஜ்யத்துக்குரிய சிங்கத்தின் வாயையும், இரண்டாம் இராஜ்யத்துக்குரிய கரடியின் கால்களையும் பெற்றிருக்கிறது. அது நான்காம் இராஜ்யத்துக்குரிய மகா பயங்கர உருவத்துடன், இரும்புப் பற்களும், பத்து கொம்புகளும், அவற்றினிடையில் சிறிய கொம்பும் உடையதாய் மாறியது. இம்மிருகத்திற்குரிய முழுவலிமையும் திரைமறைவில் உள்ள மகாவலிய சர்ப்பத்தின் (சாத்தானின்) வலிமையாக உள்ளது. இந்தத் திரைமறைவு மகாசர்ப்பதிற்கு அரியாசனமும் அதிகாரமும் உள்ளன. அவற்றை அது ஏழு தலை மிருகத்திற்குக் கொடுத்துவிடுகிறது. திரைமறைவு மகாசர்ப்பம், ஏழு தலை மிருகம் இவற்றின் இரகசியம் என்ன?

மகாசர்ப்பம் மற்றும் ஏழுதலை மிருகத்தின் இரகசியம் :

ஆதி முதல் மனிதன் ஆதாமையும், அவனுடைய மனைவி ஏவாளையும் வஞ்சகமாய் ஏமாற்றி, மனித குலத்தின் ஆன்மீக (ஆவிக்குரிய) இராஜ்யத்தை தன்னுடையதாக்கிக் கொண்ட மகா சர்ப்பமாகிய சாத்தான், மனித குலத்தில் மகாராஜாக்களாக தன்னால் எழுப்பப்படும் மாமனிதர்கள் மூலம் இந்த உலகம் முழுவதையுமே ஒட்டுமொத்தமாக அரசியல் ரீதியாக அரசாட்சி செய்வதற்கு ஆதி முதல் அவன் போராடி வருகின்றான்.

உலகெங்குமுள்ள மனித குலம் முழுவதையும் தனது ஆதிக்க ஆளுகையின் கீழ் எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும் என்பதும், தவறியும் பரலோக மெய்தேவனின் அன்பின் ஆட்சியின் கீழ் எந்தவொரு மனிதனும் சென்றுவிடக் கூடாது என்பதும் சாத்தானின் நோக்கமாகும்.

கி.மு. 22ஆம் நூற்றாண்டில் பழைய பாபிலோனின் முதல் மன்னன் நிம்ரோத் என்பவன் மூலம் உலகம் முழுவதையும் ஆளவிரும்பிய சாத்தானின் ஆசை தொடக்கத்திலேயே பாபேல் கோபுரத்துடன் அற்ப ஆசையாய் முடிந்தது. மேற்காசிய அசிரீயர்கள், அகாடிய செமித்தியர்கள், அமோரியர்கள், ஏத்தியர்கள், கல்தேயர்கள் மற்றும் எகிப்தியர்களின் ஆட்சிக் காலங்களில் நிறைவேறாத தனது ஆசையை, சாத்தான் பிற்கால பாபிலோனின் முதல் மன்னன் நேபுகாத்நேச்சார் காலத்தில் நிறைவேற்ற முனைந்தான். வேதகாமம் உரைக்கும் தீர்க்கதரிசன உலக வரலாறு இங்கிருந்துதான் தொடங்குகிறது.

ஜெருசலேம் தேவாலயத்தைத் தாக்கி இஸ்ரவேலர்களைச் சிறைப்பிடித்து பாபிலோனுக்குக் கொண்டு வந்ததன் மூலம் சாத்தான் மனம் மகிழ்ந்தான். ஆனால் அவனால் இயக்கப்பட்ட நேபுகாத்நேச்சார் பரலோகத்தின் தேவனுக்கு சாட்சியாய் இறுதியில் மாறினான். பாபிலோனிய முதல் இராஜ்யமே, பயங்கர மிருகத்தின் முதல் தலை என்பதை முன்னதாகக் கண்டோம்: அடுத்து வந்த மேதியா இராஜ்ய ஆட்சிக் காலத்திலும், பெர்ஷியா இராஜ்ய ஆட்சிக் காலத்திலும் இஸ்ரவேலர்களை (யூதர்களை) இரண்டாம் தர குடிமக்களாக பாபிலோனில் வைத்திருந்ததன் மூலம், சாத்தான் தனது ஆசையை ஓரளவு நிறைவேற்றி திருப்தியடைந்தான். பெர்ஷியர்களின் காலத்தில் மத்தியத் தரைக் கடலின் வட பகுதி மற்றும் தென்பகுதி முதல், தென்னாசிய சிந்து நதிப் பகுதி வரையில் ஆண்ட பெர்ஷிய இராஜாக்களின் சிலர் பரலோகத்தின் தேவனுக்குரியவர்களாகவே தேவமக்களுக்கு உதவி செய்தார்கள். மேதிய-பெர்ஷியா இராஜ்யங்கள் என்பவை பயங்கர மிருகத்தின் இரண்டாம் தலை. மாசிடோனிய மாமன்னன் அலெக்ஸாண்டர், மேற்கத்திய கிரேக்கம் தொடங்கி கிழக்கத்திய சிந்து சமவெளி வரையில் சிறுத்தையைப் போல் சீறிப்பாய்ந்து வந்தான் என்றாலும், அவன் உயிருடன் தனது ஊருக்கு திரும்பச் செல்லவில்லை. அப்பொழுது சாத்தானின் ஆசை, அற்ப

ரோமாபுரிப் பேரரசு, சாத்தானுக்குரிய உலகாளும் ஆசையை ஓரளவேனும் நிறைவேற்றி வைப்பதாகவே இருந்தது.

கி.மு. 2ஆம் நூற்றாண்டில் தொடங்கி கி.பி. 6ஆம் நூற்றாண்டின் முற்பகுதிவரை மத்தியத் தரைக் கடலின் நாற்புறங்களிலும் இருந்த நாடுகள் அனைத்தையும் ஆண்ட ரோமப் பேரரசு, வலிய சர்ப்பத்தின் (சாத்தானின்) வெறித்தனமான வேட்கையை தணித்து வைத்தது. பரலோகத்தின் தேவனுடைய குமாரனாய் பூமியில் பிறந்த இயேசு கிறிஸ்துவை கி.பி. 31 இல் வலிய சர்ப்பத்தின் ஆட்சி வஞ்சகமாய் கொலை செய்தது. கி.பி 5 ஆம் நூற்றாண்டுடன் முடிவடைந்த ரோமபுரியின் அரசியல் ஆதிக்க இராஜ்யமே பயங்கர மிருகத்தின் நான்காம் தலை. கி.பி. 6ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சாத்தானின் சாம்ராஜ்யம் சரிந்துவிட்டதைப் போல் தோற்றம் கொண்டாலும், அது கிறிஸ்தவ மதத்தின் பெயரால் வேற்றுருவம் கொண்டதாய் வெகுண்டு எழுந்தது.

ரோமப் பேரரசன் கான்ஸ்டைன்டின் காலத்தில் (கி.பி. 4 ஆம் நூற்றாண்டு) சாத்தானின் வஞ்சகம் வழியாய் தோன்றிய கிறிஸ்தவ மதத்தின் பெயரால் ரோமாபுரிப் பேரரசாகிய பயங்கர மிருகம் (நான்காம் இராஜ்யம்) மறு தோற்றம் கொண்டது. பயங்கர மிருகத்தின் தலையில் முளைத்த 10 கொம்புகளுக்கிடையில் தோன்றிய ஒரு சிறிய கொம்பு, ரோமப் பேரரசுக்குரிய அரியாசனத்தில் அமர்ந்து, தன்னை மகா சக்கரவர்த்தியாகவும், மகா தேவனாகவும் காண்பித்துக் கொண்டது. அந்த சிறிய கொம்பின் சரியானப் பெயர் போப்பரசர் அல்லது போப்பாண்டவர். போப்பரசரின் கத்தோலிக்க மதம், ரோமுலஸ் தொடங்கிய ரோமாபுரிப் பேரரசையே தொடர்ந்து மகாவல்லமையுடன் நடத்திச் சென்றது. “வலுச்சர்ப்பம் தன் பலத்தையும், தன் சிங்காசனத்தையும், மிகுந்த அதிகாரத்தையும் அதற்குக் கொடுத்தது” என்ற முதலாம் நூற்றாண்டின் வேத வசனம், ஆறாம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டுவரை வெற்றிகரமாக நிறைவேறியது. விவிலியம் குறிப்பிடும் இதற்குரிய காலக் கணக்கு 1260 வருடங்களாகும். ரோமப் பேரரசின் பிற்பகுதியும் ஐந்தாம் இராஜ்யமுமாகிய கத்தோலிக்கப் பேரரசே 1260 வருடம் ஆட்சி நடத்திய பயங்கர மிருகத்தின் ஏழு தலைகளில் ஐந்தாம் தலையாகும்.

கிரேக்க ஞானத்தின் ஊற்றுக் கண்களாக விளங்கிய அரிஸ்டாடில், சாக்ரடிஸ், பிளேட்டோ போன்ற தத்துவஞானிகளின் சிந்தனைத் தாக்கங்கள், ஃப்ரான்ஸ் தேசத்தில் சில சிந்தனையாளர்களை 18ஆம் நூற்றாண்டில் எழுப்பியது. வால்டேர், டேவிட் ஹ்யூம், ரூசோ, திதரோட், மொந்தெஸ்க்யூ போன்றவர்களின் எழுத்துகள் ஃப்ரான்ஸ் மன்னராட்சிக்கு எதிரான பெரும்புரட்சியை ஏற்படுத்தியதுடன், கத்தோலிக்கப் போப்பாதிக்கத்தையும் எதிர்த்து கிளர்ச்சியை ஏற்படுத்தின. ஃப்ரஞ்சு புரட்சி, மக்களியக்க குடியரசு ஆட்சியை தோற்றுவித்தது. ஆனால், "நானே ஐரோப்பாவின் சக்கரவர்த்தி" என்று அறிவித்துக் கொண்ட நெப்போலியனையும் அந்த குடியரசு ஆட்சியே அரியணையில் அமர்த்தியது. மாவீரன் நெப்போலியன் ரோமாபுரியின் கத்தோலிக்கப் போப்பாதிக்கப் பேரரசுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்திட விரும்பினான். தனது தளபதி பெர்த்தியர் என்பவனை இத்தாலியின் வாத்திகனுக்குப் படைகளுடன் அனுப்பி, அப்பொழுதிருந்த போப்பாண்டவர் ஆறாம் பையஸ் என்பவரை 1798இல் கைது செய்து, ஃப்ரான்ஸ் தேசத்திற்குக் கொண்டுவந்து வாலென்ஸ் சிறையில் அடைத்தான். ஐந்தாம் மிருகமும் அல்லது ஐந்தாவது தலையும் ஆகிய கத்தோலிக்கக் கிறிஸ்தவ மதக் கொடுங்கோல் ஆட்சி அத்துடன் முடிவுக்கு வந்ததாக அனைவரும் கருதினர். உலகப் பத்திரிகைகளும் அவ்வாறே எழுதின.

ஆனால், இங்குதான் எவரும் எதிர்பாராத வகையில் விவிலியம் வேதவசனம் நிறைவேறியது. வெளிப்படுத்துதல் 13ஆம் அதிகாரத்தின் 3ஆம் வசனம் இவ்வாறு கூறுகிறது... "அதன் தலையில் ஒன்று சாவுக் கேதுவாய் காயம்பட்டிருக்கக் கண்டேன். ஆனாலும், சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி, அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும், மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதனோடு யுத்தம் பண்ணத் தக்கவன் யார்? என்று சொல்லி மிருகத்தையும் வணங்கினார்கள்..."

13ஆம் அதிகாரத்தில் கூறப்பட்ட பயங்கர மிருகம் பற்றிய தீர்க்கதரிசனம் தவிரவும், 17ஆம் அதிகாரத்தில் மீண்டும் இந்த விசித்திர மிருகம் மேலும் விவரிக்கப்படுகிறது. மேலும் இங்கு ஒரு விந்தைமிகு

பாபிலோனிய தாயும் பயங்கர மிருகமும்

காட்சி ஒன்றும் வர்ணிக்கப்படுகிறது.

ஏழு தலைகளும், பத்து கொம்புகளும் உடைய பயங்கர மிருகத்தின் மேல், அலங்கார ஆபரணங்களால் தன்னை அலங்கரித்துச் சிங்காரித்துக் கொண்டிருந்த சிங்காரி ஒருத்தி, தனது கரத்தில் மதுக் கிண்ணத்துடன் ஒய்யாரமாய் அமர்ந்திருக்கிறாள். அவள் மெய்யான தேவனுடைய மெஞ்ஞான மக்களின் இரத்தம் குடித்து வெறிகொண்ட வேசியாக காட்சியளிக்கிறாள். அவளுடைய நெற்றியில் மகாபாபிலோன் என்றும், உலகில் உள்ள அஞ்ஞான அருவருப்புகள் எல்லாவற்றிற்கும் தாய் என்றும் எழுதப்பட்டுள்ளது.

முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இந்த வசனங்களுக்குரிய அர்த்தம், 18 ஆம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் விளங்கத் தொடங்கியது. இயேசு கிறிஸ்துவின் காலத்தில் அவரையே மூலைக் கல்லாகக் கொண்டு எழுந்த முதலாம் நூற்றாண்டின் முதல் திருச்சபையின் தொடர்ச்சியாகிய பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந்த இறுதித் திருச்சபை எதுவோ, அதுவே வேதாகம தீர்க்கதரிசனங்களுக்குரிய விளக்கங்களை அளித்து, முடிவு கால சத்தியங்களை வெளிப்படுத்துவதாக தோன்றியது. இதுவே 21ஆம் நூற்றாண்டின் மெய்யான இறுதித் திருச்சபை. இன்றைய உலக கிறிஸ்தவ மதத்திற்கும் இந்த இறுதித் திருச்சபைக்கும் எவ்வித தொடர்பும் இல்லை; இது உலக மக்கள் அனைவருக்கும் உரிய மெய்யான மெஞ்ஞான கிறிஸ்துவ மார்க்கமாகும். மொழி, இன, தேசிய வேறுபாடுகளைக் கடந்து தேவனுடைய மக்கள் அனைவரும் இந்தத் திருச்சபையின் வழியாகவே தேவசமூகத்தில் கொண்டுவந்து நிறுத்தப்படுகிறார்கள்.

பயங்கர மிருகத்தின் மேல் ஏறி அமர்ந்திருக்கும் பரத்தையாகியப் பெண் இந்தத் திருச்சபையாகியப் பத்தினிப் பெண்ணை முற்றிலுமாய் அழிப்பதற்காகவே தனது முப்படைகளையும் முடுக்கிவிடுவாள்.

(ஆதியாகமம் 3:15இல் 'உன் வித்து' என்று தேவனால் அடையாளம் காண்பிக்கப்பட்டது எதுவோ, அதுவே மிருகத்தின்மேல் அமர்ந்திருக்கும் சாத்தானிய சிங்காரியாகிய இந்த அஞ்ஞான சபையே ஆகும். இவளுக்கு எதிரான பத்தினிப் பெண் என்பவள் இயேசுவை வெளிப்படுத்தும் மெய்யான திருச்சபை). முப்படைகளில் முதற்படை என்பது, கிறிஸ்துவின் பெயரில் தோன்றும் கள்ளக் கிறிஸ்துவின் மறைமுக மதச் சங்கமாகிய படை; இரண்டாவது படை என்பது கள்ளக் கிறிஸ்துவை அதன் ஆசனத்தில் அமரவைக்கும் கள்ள தீர்க்கதரிசிகளின் கிறிஸ்தவ மதப் படை; மூன்றாவது படை என்பது உலக மதங்களின் மாயமந்திரதந்திர ஆவி மார்க்க ஆன்மீகப் படை. இம்மூன்றும் இணைந்து, உலகின் பத்துவிதமான பெரும் இராஜ்யக் கூட்டமைப்புகளின் துணையுடன் கள்ளக் கிறிஸ்துவை (Anti-Christ) உலக மகா சக்கரவர்த்தி என்ற ஸ்தானத்தில் அமரவைத்திடும்.

வலுசர்ப்பமாகிய சாத்தானும், அவனுடைய சபையும் பயங்கர மிருகத்தின் மேல் ஏறி அமர்ந்திருக்கும் ஒய்யாரப் பெண்ணாக வர்ணிக்கப்படுகிறாள். அவளுடைய கரத்தில் உள்ள மதுக்கிண்ணம் என்பது, உலக மதங்களின் வழியாகவும், கிறிஸ்தவ மதத்தின் மூலமாகவும் உலக மக்களை மயங்க வைத்திடும் மெஞ்ஞானத்திற்கு விரோதமான அஞ்ஞான மதுவாகும். காண்பவர்களைக் கவர்ந்திழுக்கும் அவளுடைய அலங்காரம் என்பது, அஞ்ஞான அருவருப்புகளுக்குரிய போலியான ஆன்மீக வேத போதனைகளாகும். இந்த வேத போதனைகள், "எம்மதமும் சம்மதம்; எல்லாக் கடவுளும் ஒரே கடவுள்; எந்த ஒரு ஆத்மாவுக்கும் அழிவில்லை" என்ற அஞ்ஞான மூல போதனைகளையே அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

இயேசு கிறிஸ்துவைப் போல் தோன்றும் ஒருவனை (சாத்தானின் மனிதனை) கிறிஸ்தவ மதமும், கிறிஸ்தவ நாடுகளும், குறிப்பாக அமெரிக்காவும் உலக மகாசக்கரவர்த்தியின் ஸ்தானத்தில் அமரவைத்திடும் காலமே, உலக மகா இராஜ்யங்களின் முடிவு காலமாகும். தானியேல் தனது தீர்க்கதரிசனத்தில் கண்ட ஐந்தாம் மிருகமும், இராஜ்யமுமாகிய ரோமன் கத்தோலிக்கப் போப்பரசே இறுதியாக மீண்டும் உலக மகாப் பேரரசின் அரியாசனத்தில் அமரும். இதற்காகவே, உலக மக்கள் யாவரும் வாரத்தின் முதலாம் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில் ஓய்ந்திருந்து அவரவர் தெய்வங்களை வணங்க

வேண்டும் என்ற விநோதமான சட்டத்தை அமெரிக்காவும் பிற நாடுகளின் கூட்டமைப்புகளும் கொண்டுவரும் என்பது தீர்க்கதரிசனமாகும்.

ரோமப் பேரரசின் முதற்பகுதியில், கான்ஸ்டைன்டின் காலத்தில், கி.பி. 321இல், முதல் ஞாயிறு வழிபாட்டுச் சட்டத்தை ஓய்வு நாள் சட்டமாக சாத்தானிய சக்தி கொண்டு வந்தது. அதன் தொடர்ச்சியான இரண்டாவது இறுதிச் சட்டமே, இனி வரவிருக்கும் சட்டமாகும். ஞாயிற்றுக்கிழமையில் அவரவர் தெய்வங்களை வழிபடுதல் என்பது ஞாயிறு கிரகமாகிய சூரியனை வழிபடுதல் என்று அர்த்தமாகும். இந்த பிரபஞ்சத்தின் அதிபதியும், வலுசர்ப்பமுமாகிய சாத்தான், தன்னை சூரியனின் ஸ்தானத்தில் வைத்துக் கொண்டிருப்பதால், ஞாயிறு தினத்தில் எந்த தெய்வத்தை வழிபட்டாலும், அது சாத்தானை வழிபடுவதாகவே அர்த்தமாகும். உலகத்தின் இறுதிப் பேரரசாகிய ரோமப் பேரரசின் அரியாசனம் என்பதும், வாத்திகன் போப்பாசனமாகிய அரியாசனம் என்பதும் ஒன்றுதான். உலக இராஜ்யங்களின் அரியாசனங்களில் தனது பிரதிநிதிகள் மூலம் அரசாண்ட சாத்தான், உலகத்தின் இறுதி நாட்களில், இறுதிப் பேரரசின் இறுதியான அரியாசனத்தில், கிறிஸ்து என்ற கள்ளப் பெயரில், அதிசய அற்புதங்களை நிகழ்த்தி அரசாள இருக்கிறான்.

அவன் அரசாளும் காலம் என்பது மிகக் குறுகிய காலமாகவே இருந்திடும். அவன் தனது அரியணையில் அமர்வதற்கு முன்னதாகவே இவ்வுலகம் இயற்கையின் சீற்றங்களாகிய மகா உபத்திரங்களைச் சந்தித்திடும் கொடிய காலமாக மாறிவிடும். உலக இராஜ்யங்களை ஆளும் மானிட சக்தி இயற்கையின் முன்பாக தோற்றுப் போகிற நிலையில், மானிட சக்திக்கும் மேலான அசாதாரன சக்தியாகிய சாத்தானிய சக்தி உலக இராஜ்யங்கள் முழுவதையும் ஒரு குடையின் கீழ் நேரடியாக அரசாளும் நாட்களே உலகத்தில் இறுதி நாட்கள்.

அந்த நாட்களின் இறுதி நாளில் வானத்தில் இருந்து பெருஞ்சத்தங்களும், இடிமுழக்கங்களும், கடும் மின்னல்களும் உண்டாகும். அப்பொழுது மலைகள் பெயர்ந்து போகும்படியாய் நிலநடுக்கங்கள் உண்டாகும். அந்த நாளில் பஞ்ச பூதங்களும் வெந்து உருகிப்போகும்; பூமியும் அதிலுள்ள மானிடக் கிரியைகள் யாவும் எரிந்து

அழிந்து போகும். பூமி சூளையைப்போல் எரியும். அந்த நாள் உக்கிரத்தின் நாள் என்றும், இருளும் அந்தகாரமுமான நாள் என்றும், அந்த நாளில் உலக வரலாற்றின் இறுதிக் காட்சியாக, மேகங்களின் மேல் மெய்தேவன் பகிரங்கமாய் தோன்றுவார் என்றும் வேதவசனங்கள் அறிவிக்கின்றன. மகாக் கொடிய நாளாகிய அந்நாளில் பூமியின் சகல கோத்திரத்தாரும் மகாதேவனின் வருகையின் காட்சியைக் காணச் சகிக்காமல் அழுது புலம்பி மறைவிடம் தேடி ஓடுவார்கள். இவைகள் யாவும் வேத வசனம் விவரிக்கும் உலக இறுதி நாளின் காட்சிகளாகும். *(1 பேதுரு 3:10-12, மல்கியா 4:1, செப்பனியா 1:1-18, வெளிப். 1:17, 7:16, 16:18).*

இந்த இறுதி நாளே, தானியேல் கண்ட தரிசனத்தில் பயங்கர சிலையின் பாதங்களின் மீது, பெரும் பாறை ஒன்று மோதி, சிலையைத் தகர்த்தெறியும் நாளாகும்.

மாயன் இனத்தவரின் காலச் சக்கரக் கணக்கின் உண்மையான கடைசி நாளும், கடைசி காட்சிகளும் இவ்வாறாக நிறைவடையும்போது, உலக வரலாறும் முடிவடையும். இந்த இறுதி நாள் வந்துவிடக் கூடாது என்பதற்காகவே, அவர்கள் குகுல்கன் பிரமிடு கோயிலின் கோபுர உச்சியிலுள்ள பலிபீடத்தில் நரபலி கொடுத்து வந்தனர். இதையே, இந்திய ஆரியர்களும் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிவரையில் விஸ்வகர்மனை பலியிடும் ஸர்வமேத யாகமாக நடத்திவந்தார்கள். இந்த காரணத்திற்காகவே இந்தியத் துணைக் கண்டத்தின் பல பகுதிகளில் மகா யக்ஞவேள்விகள் இப்பொழுதும் நடத்தப்படுகின்றன. கிறிஸ்துவுக்கு முந்திய ரிக்வேதத்தின் பத்தாவது மண்டலம், புருஷ சூக்தத்தில் தேவர்கள் எல்லோரும் சேர்ந்து, தேவ புருஷர்களில் ஒரு சிறு குறையும் அற்றவராகிய புருஷபிரஜாபதியை, ஆட்டைப் பலியிடுவது போல், யூப ஸ்தம்ப விருட்சத்தில் கட்டிவைத்து பலியிட்டுவிட்டால், தேவர்களெல்லோரும் மரணத்திலிருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்று எழுதப்பட்டிருப்பதன் அர்த்தம் என்ன என்பதை இங்கு சிந்தித்துப் பார்த்திட வேண்டும்.

விவிலிய உண்மைகளின்படி தெய்வத்தையே தேவ-நரபலியாக கி.பி.31இல் உலகின் மத்தியப் பகுதியாகிய ஜெருசலேமின் கல்வாரி பலிபீடத்தில் பலியிட்டபிறகு, ஜீவபலி என்பது ஜீவ மார்க்கத்தைப் பொறுத்தவரையில் நிறைவேறி முடிந்துவிட்டது. மேற்கத்திய

மாயமந்திரங்களின் அடிப்படையிலும், கிழக்கத்திய அதர்வண மந்திரங்களின் அடிப்படையிலும், நரபலி செலுத்தி உலக முடிவு என்ற ஒன்று சம்பவிக்கக் கூடாதவாறு தற்காத்துக்கொள்ளும் இரகசிய சடங்குகள் உலகின் பல பகுதிகளில் இப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவே சில இரகசிய ஆன்மீக சங்கங்கள் பற்றிய தரவுச் செய்திகள் கூறுகின்றன.

வேதாகம தானியேல் புத்தகத்தில், தானியேல் கண்ட ஐந்தாம் மிருகம், ஏழாம் மிருகத்தின் வழியாய், எட்டாம் மிருகமாக வருவதற்கான ஆயத்தத்தின் காலமே இன்றையக் இறுதிக் காலம். பரலோகத் தேவனின் மெய்கிறிஸ்துவம், மதங்களைக் கடந்து உலக மக்கள் மத்தியில் வெளிப்படும் காலமும் இக்காலமே ஆகும். அது இப்பொழுது கிறிஸ்தவ மதம் சார்ந்ததாகக் கருதப்படும் ஒரு திருச்சபையின் வழியாக வெளிப்படுவதற்குப் போராடிக் கொண்டிருக்கிறது. தானியேல் புத்தகத்தில் எழுதியிருக்கிறபடி, எட்டாம் மிருகமாகிய இறுதிப் பேரரசன் வெளிப்பட்டவுடன், அவனைப் பரலோகத்தில் உள்ள நியாயசங்கம் சங்காரம் செய்து, உலகில் இனி அவனுடைய ஆட்சி இல்லாதபடி அவனை அழித்து நிர்மூலமாக்கும். (தானியேல் 7:11, 26)

பரலோகத்தின் நியாயசங்கம் என்பது பூலோக-பரலோக தேவாலயத்துடன் தொடர்புடையது. இது எப்பொழுது, எதற்காக அமர்ந்தது என்பது பற்றிய விளக்கங்களில், உலக முடிவு பற்றிய மற்றுமொரு முடிவுகால திர்க்கதரிசனம் அடங்கியுள்ளது.

10(ஆ) தேவனுடைய தேவாலயம் பற்றிய திர்க்க தரிசனம்

சிறிய கொம்பு:

விவிலியத்தின் தானியேல் புத்தகம் ஏழாம் அதிகார திர்க்கதரிசனத்தில், நான்காம் மிருகத்தின் தலையிலிருந்து எழுந்த பத்து கொம்புகளுக்கிடையில் ஒரு சிறிய கொம்பு எழும்பியது. அந்தக் கொம்பில் மனிதக் கண்களுக்கு ஒப்பானக் கண்களும்,

பெருமையானவைகளைப் பேசும் வாயும் இருந்தன. (7:8) அது உன்னதமானவருக்கு (மெய்தேவனுக்கு) விரோதமான வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கியது.(7:25)

நான்காம் மிருகத்திலிருந்து எழும்பிய இந்த சிறிய கொம்பு ஐந்தாம் இராஜ்யமாகி, உலக இறுதி நாட்களில் எட்டாம் இராஜ்யமாகி, தனக்கும் உலகத்திற்கும் அழிவைக் கொண்டுவருகிறது என்பதைக் கடந்த அதிகாரத்தில் கண்டோம்.

நியாய சங்கம்:

இந்த சிறிய கொம்பாகிய கொடுங்கோலரசு, தனது பூலோக அரியாசனத்தில் ஆன்மீக அரசாக அமர்ந்தவுடன், பரலோக தேவாலயத்தில், "சிங்காசனங்கள் வைக்கப்பட்டன; நீண்ட ஆயுள் உள்ளவர் (தேவாதி தேவன்) வீற்றிருந்தார்; அவருடைய உடை உறைந்த மழையைப் போலவும், அவருடைய சிரசின் முடி வெண்மையாகவும், வெண்பஞ்சைப்போல் துய்மையாகவும் இருந்தன. அவருடைய தேவாசனம் அக்கினித் தழலாகவும், தேவாசனத்தின் சக்கரங்கள் எரிகிற நெருப்பாகவும் இருந்தன. அவருடைய சந்நிதியிலிருந்து அக்கினி நதி புறப்பட்டு ஓடியது. ஆயிரமாயிரம் பேர் அவரைச் சேவித்தார்கள்; கோடானு கோடி பேர் அவருக்கு முன்பாக நின்றார்கள்; அப்பொழுது நியாயசங்கம் அமர்ந்தது; புத்தகங்கள் திறக்கப்பட்டன." (தானியல்7:9-10)

2300 வருட தீர்க்கதரிசனம்:

இந்த நியாயசங்கம், முடிவுபரியந்தம் சிறிய கொம்பைச் சங்கரிக்கும்படியாகவும், அழிக்கும்படியாகவும் அவனுடைய ஆளுகையை நீக்கிப்போடும். (7:26) என்று தானியேலுக்குத் தீர்க்கதரிசனமாக அறிவிக்கப்பட்டது. மேலும், 8ஆம் அதிகாரம் 9ஆம் வசனம் முதல் இந்தச் சிறிய கொம்பு குறித்து தொடர்ந்து எழுதப்படும்போது, பரலோக தேவனின் பரிசுத்த ஸ்தலம் அருவருப்புகளுக்கு உள்ளாக்கப்படும் பாதகமான செயல்கள் எதுவரையில் இருக்கும் என்ற தானியேலின் கேள்விக்கு, '2300 இராப்பகல் செல்லும்வரைக்கும் இருக்கும்; பின்பு பரிசுத்த ஸ்தலம் தூய்மைப் படுத்தப்படும்' என்று தானியேலுக்கு தரிசனத்தில் பதில்

அளிக்கப்பட்டது.

பரிசுத்த ஸ்தலம் பரிசுத்தக் குலைச்சல் ஆக்கப்பட்டு பாதிக்கப்படும் காலமாகிய 2300 இராப்பகல் என்பது 2300 வருடங்களாகும். இது கி.மு. 457இல் தொடங்கி கி.பி. 1844இல் முடிவடைவதாக கிறிஸ்துவ மார்க்கத்தின் இறுதித் திருச்சபையின் முன்னோடிகள் கணக்கிட்டனர். 2300 வருட தரிசனம் தானியேல் தீர்க்கதரிசிக்கு அருளப்பட்ட காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியாக இருந்தது. அது, பாபிலோனிய, மேதியா, பெர்ஷியாவின் காலமாகும். ஐந்து மிருகங்களில் (இராஜ்யங்களில்) முதல் மிருகத்தின் காலத்திலேயே தேவனுடைய பரிசுத்த ஸ்தலமாகிய பரிசுத்த தேவாலயத்திற்கு குலைச்சல் உண்டாக்கப்படுதல் தொடங்கியது. ஏழு தலை மிருகத்தை இயக்கிக் கெண்டிருப்பவனாகிய வலுசர்ப்பம் என்ற சாத்தான், முதல் தலையின் காலத்திலிருந்தே (பாபிலோனின் காலத்திலிருந்தே) தேவாலயப் பரிசுத்தத்திற்கு விரோதமான குலைச்சலை (திட்டுப்படுத்துதலை) தொடங்கினான்.

அஞ்ஞான அருவருப்பு:

தேவாலயத்தின் பரிசுத்தக் குலைச்சல் என்ற அருவருப்புக்குரிய திட்டுப்படுத்தப்படுதலாகிய தேவ தூஷனத்திற்குரிய செயலைச் சாத்தான் 2300 வருடங்களுக்கு மேலாகவே செய்தான். இதனை அஞ்ஞான அருவருப்பு என்று விவிலியம் கூறுகிறது. கி.மு. 605 இல் பாபிலோனியப் பேரரசன் நேபுகாத்நேச்சார் ஜெருசலேம் மீது படையெடுத்தபோது தேவாலயத் திட்டுப்படுத்துதல் தொடங்கிவிட்டது. தேவாலயம் வழிபாடற்றுக் கிடந்த நிலையில், தானியேலின் தரிசனத்தில் இது குறித்து விளக்கப்பட்டபோது, ஜெருசலேமைத் திரும்ப எடுத்துக் கட்டுவதற்கான கட்டளை பெர்ஷியா மன்னனால் பிறப்பிக்கப்படும் காலம் முதல் 2300 வருடக் காலக் கணக்கு தொடங்கியது. 2300 வருடக் காலக் கணக்கில், சாத்தான் மெய்கிறிஸ்தவத்தின் மூலைக் கல்லாகிய இயேசுவைக் கொலை செய்து, ஜெருசலேம் தேவாலயத்தை முற்றிலுமாக அழித்து, தொடர்ந்து மெய்யான கிறிஸ்துவ மார்க்கத்தினரையும் அழித்தான். பின்னர் கிறிஸ்துவின் பெயரில் போலியான அஞ்ஞானக் கிறிஸ்தவ மதத்தைத் தொடங்கிய பிறகு, தேவாலயத்திற்கு விரோதமான அஞ்ஞான அக்கிரமங்களை உள்ளே கொண்டுவந்தான். இதுவே பரிசுத்த

ஸ்தலத்திற்கு விரோதமான சாத்தானின் பரிசுத்தக் குலைச்சலாகிய திட்டுப்படுத்துதலின் உச்சக்கட்டமாகும்.

பாவ நிவாரணம்:

இத்தகைய அக்கிரமச் செய்கைக்காக சாத்தானுக்கு அனுமதிக்கப்பட்டக் காலம் 1844 அக்டோபர் 22 இல் (2300 வருட முடிவு) முடிவடைந்த போது, மெய்தேவனின் தேவாலயமாகிய பரலோக மகாபரிசுத்த ஸ்தலத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, மகாபிரதான ஆசாரியார் என்ற ஸ்தானத்தில் அமர்ந்து பரலோக தேவாலயத்தைப் பரிசுத்தப்படுத்தத் (தூய்மைப்படுத்தத்) தொடங்கினார். பரலோகத் தேவாலயத் தூய்மைப்படுத்தப்படுதல் என்பது கிறிஸ்துவுக்கு முன் பூலோகத் தேவாலயத்தில் ஆண்டுக்கொருமுறை நிழலாட்டமான ஒத்திகை நிகழ்வுகளாக சடங்காச்சாரத்தின் அடிப்படையில் பண்டிகையாக நடைபெற்று வந்தது. பாவ நிவாரணப் பண்டிகையின் பத்தாம் நாளின் நிகழ்ச்சியே நியாயத்தீர்ப்புக்குரிய நிகழ்ச்சியாகும். பாவ நிவாரணம் வேண்டி ஆலய பலிபீடத்தருகில் வந்து நின்று பலி செலுத்திய பக்தர்கள் அனைவருக்காகவும், ஆண்டுக்கொருமுறை நிகழும் பாவநிவாரண உற்சவப் பண்டிகையின் இறுதி நாள் (பத்தாம் நாள்) நிகழ்ச்சியே பரலோகத்தில் 1844இல் அசல் நிகழ்ச்சியாகத் தொடங்கியது. பாவநிவாரணம் வேண்டிய பக்தர்கள் அனைவர் சார்பிலும் பூலோகத் தேவாலயத்தில் ஆண்டுக்கொருமுறை ஆடு பலிகொடுக்கப்பட்டது. காலம் நிறைவேறியபோது கி.பி. 31இல் பூலோகத் தேவாலயத்தில் பக்தர்களுக்குரிய ஆடு பலிகொடுக்கப்படும் வேளையில், அந்த ஆடு தப்பித்து ஓடியது. ஆனால், அதே வேளையில், உலகத் தோற்றத்திற்கு முன்பே, பலி பீடத்தில் பலியிடப்படுவதற்காக பரலோக தேவ சமூகத்தில் தீர்மானிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்து, ஜெருசலேமுக்கு வெளியில் கல்வாரி கபால ஸ்தலத்தில் பலியிடப்பட்டார். அப்பொழுது, 'இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பில்லை' என்ற வேதவாக்கியம் முழுமையாக நிறைவேறி பலிமுறை அத்துடன் ஒழிந்துபோயிற்று. அவர் சிந்திய இரத்தம், பாவ நிவாரணம் தேடும் உலக மக்கள் அனைவருக்குமுரியது; ஒரு மதத்தினருக்கு மட்டும் உரியதல்ல.

நியாயத்தீர்ப்புக்குரிய நியாயவிசாரணை :

பலியிடப்பட்டவராகிய இயேசு கிறிஸ்து, உயிர்த்தெழுந்தவராய் பரலோகம் சென்றடைந்து, பரலோக தேவாலயத்தின் பரிசுத்த ஸ்தலத்திற்குரிய ஆசாரியப் பணியை செய்பவராக இருந்தார். பூலோகத்தில் கிறிஸ்தவ மதத்தின் பெயரில் மெய்க்கிறிஸ்துவர்களைக் கொடுமைப்படுத்தி சிரழித்திடவும், அஞ்ஞான அக்கிரமங்களைச் செய்திடவும், சாத்தானுக்கு அனுமதிக்கப்பட்டக் காலம் 1798இல் முடிவடைந்ததும், முதலாம் நூற்றாண்டில் இயேசுவையே அடித்தளமாகக் கொண்டு எழுந்த மெய்திருச்சபை, 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பூமியில் மீண்டும் வெளிப்பட்டது. அது மூன்று தூதர்களின் செய்தியை (வெளிப்படுத்துதல் 14:6-12) ஒவ்வொன்றாக அறிவிக்கத் தொடங்கியது. அப்பொழுது பரலோக தேவாலயத்தின் மகாபரிசுத்த ஸ்தலத்தில் மகாபிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்து, நியாயத் தீர்ப்புக்குரிய நியாயவிசாரணையை தேவதூதர்களிலிருந்தே தொடங்கினார். தேவ தூதர்களுக்குரிய நியாயவிசாரணை முடிவுற்றதும், பூமியில் மனம் வருந்தி பாவ நிவாரணம் வேண்டிய பக்தர்களுக்குரிய நியாயவிசாரணையை முதல் மனிதன் ஆதாமிலிருந்து தொடங்கினார். முதலாவது மரணமடைந்தவர்களுக்குரிய நியாயவிசாரணைத் தொடங்கி, இறுதியில் உயிருடன் இருப்பவர்களுக்குரிய நியாய விசாரணையாக அது முடிவடையும்.

பரலோக நியாய விசாரணை என்பது, கிறிஸ்துவின் காலத்திற்கு முன்பு, மெய்யான தேவனை ஏற்றுக் கொண்டு, அவருடைய பத்துக்கட்டளைகளின்படி வாழ்ந்தவர்களுக்கும், அல்லது வாழத்தவறிய நிலையில் மனம்வருந்தி பலி செலுத்தி பாவ நிவாரணம் தேடியவர்களுக்கும் உரியது. கிறிஸ்துவின் சிலுவை பலிக்குப் பிறகு, தங்கள் பாவங்களுக்காக கிறிஸ்துவையே பலியாகச் செலுத்தித் தீர்த்தவர்களும், பத்துக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதற்காக போராடும் நிலையில் பாவ நிவாரணம் தேடும் அனைவரும், பரலோக நியாயவிசாரணைக்குரியவர்கள் ஆகிறார்கள். பரலோக தெய்வத்தையும், இயேசு கிறிஸ்துவையும் தங்கள் தெய்வமாக ஏற்றுக் கொள்ளாமலும், தங்கள் பாவங்களுக்காக கிறிஸ்துவின் இரத்தத்தின் வழியாய் பாவநிவாரணம் தேடாதவர்கள் அனைவரும் பரலோக நியாய விசாரணைக்குரியவர்கள் அல்ல.

மகாபிரதான ஆசாரியர்:

பூலோக தேவாலயத்தில் ஆண்டுக்கொருமுறை நிகழும் பிரதானப் பண்டிகையாகிய பாவ நிவாரண நாளில், மனம் வருந்தி பாவ மன்னிப்பை வேண்டியவர்களுக்காக ஒரு பலியாடு பலியிடப்பட்டது. பத்துக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதவர்களுக்காகவும் பாவமன்னிப்பை வேண்டாதவர்களுக்காகவும், பாவ மன்னிப்பை வேண்டி பலி செலுத்திவிட்டுப் பின்னர் பாவம் செய்தவர்களுக்காகவும் மற்றொரு ஆடு ஒன்றும் பலிபீடத்திற்குக் கொண்டுவரப்பட்டு, நியாயவிசாரணைக்கு அப்பாற்பட்டவர்கள் அனைவருடைய பாவங்கள் யாவும் அந்த ஆட்டின் மீது சுமத்தப்பட்டு, மனித சஞ்சாரமே இல்லாத வனாந்திரத்திற்கு அந்த ஆடு கொண்டுபோய் விடப்பட்டது. அங்கே அது பாவசாபத்திற்குரிய ஆடாக அலைந்து திரிந்து அது சாகவேண்டும். அப்பொழுது பாவத்திற்கும் சாபத்திற்கும் முடிவு வரும்.

இதற்குரிய அசல் நிகழ்வு 1844இல் பரலோகத்தில் தொடங்கியது. பரலோக நியாயவிசாரணையில், மெய்யான தேவனையும், தேவக் குமாரனையும், தேவ கட்டளைகளையும் ஏற்றுக் கொண்டு வாழ்ந்தவர்களுக்காகவும், கட்டளைகளின்படி வாழத் தவறிய நிலையில் தங்கள் பாவங்களுக்காக மனம்வருந்தி பாவ மன்னிப்பு வேண்டியவர்கள் அனைவருக்காகவும், பூலோகத்தில் பலியிடப்பட்டவராகிய ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்துவே, தேவதந்தையின் திருச்சமூகமாகிய நியாயவிசாரணை மன்றத்தில் மகாபிரதான ஆசாரியராய் அமர்ந்து அவர்களுக்காகப் பரிந்து பேசி நியாயத்தீர்ப்பு செய்யத் தொடங்கினார்.

நியாயத் தீர்ப்பின் வழியாய் பரலோகம் செல்பவர்கள்:

மனம் வருந்திப் பாவ நிவாரணம் தேடிய பூலோக மக்கள் அனைவருக்குமுரிய நியாயவிசாரணையும், நியாயத் தீர்ப்பும் முடிவடைந்தவுடன், தேவனுடைய பத்துக்கட்டளைகளின்படி வாழாமல், அதற்கு விரோதமாக வாழ்ந்த பூலோக மக்கள் அனைவருடைய பாவ அக்கிரமங்கள் எல்லாவற்றையும், பத்துக் கட்டளைகளுக்கு விரோதமாக வாழும்படி அவர்களைத் தூண்டிய மகாப்பிசாசும், மகாவலிய சர்ப்பமுமாகிய சாத்தான் மீது சுமத்தி, மக்களே இல்லாத மகாநரகமாகிய பூலோகத்தில் அலைந்து திரியும்படி அவன் கைவிடப்படுவான். பூலோக

தேவாலயத்தின் பாவ நிவாரணப் பண்டிகையின் இறுதியில் பாவ சாபங்கள் எல்லாவற்றையும் சுமந்துகொண்டு மனித சஞ்சாரமற்ற வனாந்தரத்திற்கு விரட்டப்பட்ட ஆடும், பரலோக நியாய விசாரணைக்குப் பிறகு பூலோகப் பாவங்கள் எல்லாவற்றையும் சுமந்து கொண்டதால் மனிதர்களே இல்லாத நிலையில் பூமியில் ஆயிரம் வருடங்கள் அலைந்து திரியும் சாத்தானும் ஒன்றுதான். ஆறாயிரம் வருடங்களாக மனிதகுலத்தைத் தனது மகா ஞானத்தைக் கொண்டு ஆண்டு கொண்டிருந்த சாத்தான், இந்த ஆயிரம் வருடங்களில் பைத்தியம் பிடித்தவனைப் போல அலைந்து கொண்டிருப்பான். (இந்துத்துவ சர்ப்பக்கடவுள் ஒன்று, தனது பிரம்மஹத்தி (பைத்தியம்) தோஷம் நீங்க அலைந்து கொண்டிருந்த புராணக் கதையை இங்கு ஒப்பு நோக்கவும்.)

மகாபிரதான ஆசாரியராய் அமர்ந்து பரலோக நியாய விசாரணையை முடித்ததற்குப் பிறகு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நியாயத்தீர்ப்புகளுடன் நியாயாதிபதியாய் தேவதூதர்களுடன் பரலோகத்திலிருந்து புறப்பட்டு, பூலோக வானத்தின் மேகங்களின்மேல் வருகைதரும்போது, நல்லவர்களாய் நியாயந்தீர்க்கப்பட்ட அனைவரையும் தேவதூதர்கள் பெயர் சொல்லி அழைக்கிறார்கள். அவர்கள் மரித்தவர்களாய் இருந்தாலும், உயிருடனிருப்பவர்களாய் இருந்தாலும் மறுரூபப்படுத்தப்பட்டவர்களாய் பூலோகத்தை விட்டுப் புறப்பட்டு வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

நியாயத்தீர்ப்படையாத அனைவரும் இறுதி மரணத்திற்கென்று பூமியில் கைவிடப்படுவார்கள். இன்றைய உலகத்தின் சரித்திரம் மகாப் பேரழிவுடன் அப்பொழுது முடிவடைகிறது. பாவம், அநீதி, அக்கிரமக் கொடுமைகள், தீமைகள் ஆகிய எல்லாவற்றிற்கும் காரணமாகிய மகாசர்ப்பமாகிய சாத்தானுக்குரிய நியாயத்தீர்ப்பு, பரலோக நியாயசங்கத்தால் அப்பொழுது வழங்கப்படுகிறது.

"நியாயசங்கம் உட்கார்ந்தது; புத்தகங்கள் திறக்கப்பட்டன. அப்பொழுது முடிவுபரியந்தம் அவனை (சாத்தானை) சங்கரிக்கும்படியாகவும், அழிக்கும்படியாகவும் அவனுடைய ஆளுகையை நீக்கிப்போடுவார்கள்." (தானியேல் 7:10,26) என்ற வசனங்களும், "தேவ சபையிலே தேவன் எழுந்தருளி இருக்கிறார்;

தேவர்களின் நடுவிலே அவர் நியாயம் விசாரிக்கிறார்" (சங்கீதம் 82:1) என்ற வசனங்களும் அப்பொழுது நிறைவேறும்.

2300 இராப்பகல் (வருடங்கள்) தரிசனங்கள் முடிவடைந்து, பரலோகத்தில் நியாயசங்கம் தனது நியாயவிசாரணையை தேவதூதர்களிலிருந்து தொடங்கிய உடனேயே, சாத்தான் மீதும் அவனுடைய தூதர்கள் மீதும் நியாயவிசாரணைத் தொடங்கி நியாயத்தீர்ப்பும் எழுதப்பட்டுவிட்டதாக அர்த்தமாகிறது. எனினும், அவனுக்குரிய நியாயத்தீர்ப்பு உலக முடிவின் நாளிலேயே நிறைவேற்றப்படுகிறது.

ஐந்தாம் மிருகமாக வந்தது எதுவோ, அதுவே ஏழு தலை வலுசர்ப்ப மிருகங்களில் இறுதி மிருகமாக வெளிப்பட்டு தனது ஆட்சி, அதிகாரத்தை நியாயாதிபதியாகிய இயேசுவின் இரண்டாம் வருகையின் போது இழந்து, ஆயிரம் வருடங்கள் கழித்து ஆண்டவருடைய மூன்றாம் வருகையின்போது சர்வ சங்காரம் செய்யப்படும்.

ஆயிரம் வருடங்களில்:

மிருகத்தின் ஆட்சியாகிய சாத்தானின் ஆட்சி முடிவடையும் நாளும், இன்றைய உலக அழிவின் நாளும் ஒன்றுதான். மகாபிரதான ஆசாரியராய் அமர்ந்து பரலோகத்தில் நியாய விசாரணை செய்து நியாயத் தீர்ப்பு எழுதிய இயேசு கிறிஸ்து உலக மகா நீதிபதியாய் தூதர்களுடன் வானத்தில் வெளிப்படும்போது, இறந்தவர்களும், உயிருடன் இருப்பவர்களுமாகிய தேவமக்கள் நன்மையான நியாயத் தீர்ப்புக்குரியவர்களாகி தேவனுடன்கூட பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்று வாசித்தோம்.

அவர்களுக்காக ஆயத்தம் செய்யப்பட்டிருந்த பரலோகப் பரிசுத்த நகரத்தில் அவர்கள் ஆயிரம் ஆண்டுக் காலம் தேவ இரகசியங்களையும், வேத இரகசியங்களையும் அறிந்துகொள்வார்கள். பூமியில் இரண்டாம் மரணத்திற்கென்று கைவிடப்பட்ட மக்கள் அனைவருக்குமுரிய நியாய விசாரணையையும், நியாயத்தீர்ப்பையும் அவர்களே செய்வார்கள். இதனை விவிலியம் 'ஆயிரம் வருட அரசாட்சி' என்று கூறுகிறது. சாத்தான், இன்றையக் கிறிஸ்தவ மதத்தின் வழியாய், இந்த ஆயிரம் வருடங்களில் இயேசு கிறிஸ்து பூமியில் அரசாட்சி செய்வார் என்று கூறி

இறுதிக் காலச் சத்தியத்தைக் குழப்புகிறான்.

வானத்திலிருந்து இறங்கிவந்த தேவதூதன், பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தைப் பிடித்து, அதை ஆயிரம் வருடங்கள் அளவும் கட்டிவைத்து, அந்த ஆயிரம் வருடங்கள் நிறைவேறும் வரையில், அது மக்களை மோசம்போக்காதபடிக்கு அதைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதன்மேல் முத்திரை போட்டான். ஆயிரம் வருட முடிவில் அது தன் காவலிலிருந்து விடுதலையாக வேண்டும். (வெளிப்படுத்துதல் 20:1)

ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு:

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, 'இராஜாதி இராஜா, கர்த்தாதி கர்த்தா என்ற நாமத்துடன் மூன்றாம் முறையாக தனது தேவ மக்கள் அனைவருடனும் பரலோகத்திலிருந்து இறங்கி வருவார். சாத்தானும், அவனுடைய மக்கள் அனைவரும் வானத்திலிருந்து பொழியப்படும் அக்னிக் கடலில் மூழ்கி அழிந்து போவார்கள். (வெளிப்படுத்துதல் 20:1–7,10, 19:20) அப்பொழுது புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகிறது; சமுத்திரங்களும் இல்லாமல் போகிறது. பரலோக வானத்தில் இயேசுவால் படைக்கப்பட்ட பரிசுத்த கிரகமும், நகரமுமாகிய புதிய ஜெருசலேம், இயேசு கிறிஸ்துவுடனும், தேவ மக்களுடனும், பூமியின் ஒலிவ மலையின்மேல் வந்திறங்கும். அதுவே புதிய உலகத்தின் தெய்வீக தலைநகரமாயிருக்கும். தேவமக்கள் அனைவரும் தேவனுடைய ஆலயங்களாயிருப்பார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அவர்களில் வாசமாயிருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். புதிய உலகத்திற்கு சூரியனும், சந்திரனும் தேவையில்லை; ஏனெனில் தேவனுடைய மகிமையே சூரியப் பேரொளியாய் விளங்கும்.

புதிய உலக மக்களின் வாழ்க்கையில் மரணம் இல்லை, துக்கம் இல்லை, அலறுதல் இல்லை, வருத்தம் இல்லை, பழைய உலக மக்களின் வேதனைச் சுவடுகளும், தடயங்களும் முற்றிலுமாய் ஒழிந்துபோய்விடும். (வெளிப்படுத்துதல் 21:4, நாகூம் 1:9)

11

விவிலிய தீர்க்கதரிசனங்களின் முடிவும், மகாசர்ப்பத்தின் முடிவும்

விவிலியத்தின் முதல் மகா தீர்க்கதரிசனம் மகாசர்ப்பத்தைப் பற்றியது என்பதை ஒன்பதாவது அதிகாரத்தில் கண்டோம். மகாசர்ப்பமாகிய சாத்தானின் தலை இறுதியாக நசுக்கப்படுவதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே, மகாசர்ப்பத்தின் ஆயிரம் ஆண்டுக்கால ஆளுகைக்குரிய உலகம் அழிந்துபோய்விடுகிறது. உலக அழிவை ஏற்படுத்துவது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை. மகா சர்ப்பத்தின் தலை இயேசு கிறிஸ்துவின் மூன்றாம் வருகையில் முற்றிலுமாக நசுக்கப்படுகிறது. அதற்கு முன்னதாகவே, 'சமாதானத்தின் தேவன், இறுதித் திருச்சபையின் பரிசுத்த ஊழியர்களின் கால்களின் கிழாக சாத்தானை நசுக்கிப் போடுவார்' என்ற வேதவசனம் (ரோமர் 16:20) நிறைவேறத் தொடங்கிவிடுகிறது.

விவிலியத்தின் இரண்டாவது மகாதீர்க்கதரிசனம் உலக மகா இராஜ்யங்களைப் பற்றியது என்பதை பத்தாம் அதிகாரத்தின் (10அ) முதற்பகுதியில் கண்டோம். கி.மு. 24ஆம் நூற்றாண்டில் யுகப்பிரளயத்தைக் கடந்த நோவாவின் மகன் காம் என்பவனின் கொள்ளுப் பேரன் நிம்ரோத் காலத்தில் (கி.மு. 23ஆம் நூற்றாண்டு) மெசபடோமிய நிலப்பகுதியில் உருவாகவிருந்த முதல் மகாராஜ்யம் உருக்குலைந்தது. வேதாகமம் வரிசைப்படுத்தும் வரலாற்றின்படி எகிப்திய இராஜ்யம் அதற்குப் பிறகே உருவாகியது. பெற்றோர் பெயர் அறியாத சர்கோன் என்பவன் உருவாக்கிய அக்காடிய செமித்தியர்களின் இராஜ்யமே வரலாற்றில் முதல் மகா இராஜ்யமாகக் கருதப்படுகிறது. தொடர்ந்து அமோரியர்களால் ஏற்படுத்தப்பட்ட ஹமுராபியின் இராஜ்யமே மெசபடோமியாவின் இரண்டாவது மகாராஜ்யம். அடுத்து சிறிய ஆசியப் பகுதியிலிருந்து படையெடுத்து வந்த ஏத்தியர்களின் இராஜ்யம் ஏற்பட்டது. இதையடுத்து கி.மு. ஏழாம் நூற்றாண்டில்

தோன்றியதே கல்தேயர்களின் பாபிலோனிய மகாராஜ்யம். விவிலியம் சிலை வடிவத்தில் வரிசைப்படுத்தும் மகா இராஜ்யங்கள் பாபிலோனிலிருந்தே தொடங்குகிறது. உலக மகா சர்ப்பமாகிய சாத்தானின் உலகாளும் ஆதிக்க ஆசை இங்கிருந்துதான் நிறைவேறத் தொடங்குகிறது.

மனித குலத்தை ஆளும் சாத்தானின் அதிகார ஆளுகை என்பது இருவகையானது. முதல் ஆளுகையை மனிதனின் மூலாதாரத்திலிருந்து தொடங்கியதாக இந்துத்தவ வேதங்களின் மூல வேதம் கூறுகிறது. ஆசைக்கும் இச்சைக்கும் உரிய அழகிய கனியிலிருந்து அவனது ஆதிக்கம் தொடங்கியதாக விவிலியத்தின் ஆதியாகமம் கூறுகிறது. மனித குலத்தின் மனதை ஆளுகை செய்யும் சாத்தானின் ஆளுகை என்பது, ஆவியையும், ஆன்மாவையும் ஆளுகை செய்வதாகும். தேவன் இல்லை என்று கூறும் நாத்திகர்களும் தேவனைப் பற்றிக் கவலைப்படாத அறிவு ஜீவிகளும் சாத்தானின் ஆளுகைக்கு அப்பாற்பட்டவர்கள் அல்ல. தெய்வீக ஜீவ மரபணுவின் வழியாய் தேவ குணத்திலும், தேவ சாயலிலும் மனிதனை உருவாக்கிய தேவன், தனது தேவசித்தம் நிறைவேறாததற்காகத் துயரம் அடைந்தார். இதன் விளைவே பெருவெள்ள ஊழிப் பிரளயம். ஆதாமின் இரு சந்ததிகளில் ஒரு சந்ததியாகிய நோவா என்ற மனிதனின் குடும்பத்துடன், மனித குலத்தின் இரண்டாம் அத்தியாயம் தொடங்கியது. நோவாவின் மூன்று சந்ததிகளில் முதல் சந்ததி தேவனுக்குரியதாகவும், மற்ற இரு சந்ததிகள் சாத்தானுக்குரியதாகவும் மாறியது. தனக்குரிய இரு சந்ததிகளை நேரடியாக ஆள்வதும், தேவனுக்குரிய தேவ சந்ததியை மறைமுகமாக ஆள்வதும், சாத்தானுக்குரிய நோக்கமாயிருந்தது.

நோவாவின் காலமாகிய கி.மு. 24ஆம் நூற்றாண்டிலிருந்து, உலகை ஒரு குடையின் கீழ் ஆள வேண்டுமென்பதையே சாத்தான் தனது இலட்சியமாகக் கொண்டிருந்தான். ஆனால் அவனது இலட்சியம், தேவன் செய்த இருபெருங்காரியங்களால் தொடக்கத்திலேயே தகர்ந்தது. ஆதாம் காலம் முதல் கி.மு. 23ஆம் நூற்றாண்டின் நிம்ரோத் காலம் வரையில் மனித குலம் முழுவதும் ஒரே மொழியையே பேசியதாக வேதம் குறிப்பிடுகிறது. மனித குலத்தின் ஒரே மொழியைத் தேவன் பேதப்படுத்தி பல மொழிகளாக மாற்றினார். அடுத்து நோவாவின் ஐந்தாம் சந்ததியில், ஒரே நிலப்பரப்பாக இருந்த பூமி, பல கண்டங்களாகவும், பல தீபகற்பங்களாகவும், பல தீவுகளாகவும் தேவனால் பிரிக்கப்பட்டன.

மொழியாலும், நிலத்தாலும் ஏற்பட்ட இருபெரும் பாதிப்புகளால், மனிதகுலம் மொழிவழி, தேசிய வழி இனப் பாகுபாடுகளைக் கண்டது. இதன் காரணமாக, உலகம் முழுவதையும் ஒன்றாக ஆள வேண்டும் என்ற சாத்தானின் இலட்சியக் கனவு தொடக்கத்திலேயே சிதைந்தது. எனினும், மொழிவழி இனங்களுக்கேற்பவும், தேசிய வழி இனங்களுக்கேற்பவும் சாத்தான், பல்வேறு மதங்களை உருவாக்கி மக்கள் மனதை ஆன்மீக ரீதியாக ஆளுகை செய்யத் தொடங்கினான். 15 நூற்றாண்டுகளுக்குப் பிறகு கல்தேயர்களின் பாபிலோனிய மாமன்னன் நேபுகாத்நேச்சார் காலத்திலிருந்து, அந்நிய தேசங்களின் மீது படையெடுத்துப் பேரரசை நிறுவ முயலும் பேராசையை சாத்தான் செயற்படுத்தத் தொடங்கினான். பாபிலோனியப் பேரரசின் காலத்திலிருந்து ரோமப் பேரரசின் காலம்வரையில் ஏறத்தாழ 1100 ஆண்டுகள் அரசியல் ஆதிக்கம் செய்தும், உலகம் முழுவதையும் அவனால் ஒன்றாக ஆளமுடியவில்லை.

கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து சாத்தான் தனது அரசியல் ஆதிக்க சிம்மாசனத்தையும், ஆன்மீக மத ஆதிக்க சிம்மாசனத்தையும் ஒன்றாக்கினான். அரசியலும் ஆன்மீகமும் கலந்த ஒரே சிம்மாசனத்தில் அவன் தனது அநுக்கிரகத்திற்குரியவர்களை அமர்த்தி ஆட்சி செய்த காலம் 1260 வருட காலமாகும். 13 நூற்றாண்டுகள் அதிகார அரசியல் மூலமாகவும், ஆன்மீக ஆதிக்கம் வழியாகவும் மாபெரும் பேரரசை சாத்தான் ரோமன் கத்தோலிக்கப் போப்பாசனப் பீடத்திலிருந்து ஆட்சி செய்தான். இந்த ஆட்சிக்கு ஒப்பான மற்றொரு ஆட்சி உலகில் அதற்கு முன்பும் இல்லை பின்பும் இல்லை. 13 நூற்றாண்டுகள் அரசியலையும் மதத்தையும் இணைத்து அவன் ஆட்சி நடத்தினாலும், ஐரோப்பிய தேசங்களை மட்டும்தான் அவனால் ஆளமுடிந்ததேயன்றி, உலகம் முழுவதையும் அவனால் ஆளமுடியவில்லை.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில், போப்பு ஆறாம் பையஸ் என்பவரைக் கைது செய்து சிறையிலடைத்தன் மூலம் 1260 வருட போப்பாட்சிக்கு முடிவு ஏற்படுத்திய மாவீரன் நெப்போலியன் ஐரோப்பிய பேரரசனாகத் தனக்குத்தானே முடி சூட்டிக்கொண்டு உலகம் முழுவதையும் ஆளப் புறப்பட்டான். அவனது உலகாளும் ஆசையை உந்தித் தள்ளும் சக்தி, சாத்தானிய சக்தியாவே இருந்தது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் முதலாம் உலகப் போருக்குக் காரணமாக இருந்த வில்லியம் கெய்சரின் பின்புலமாக இருந்ததும்,

தொடர்ந்து இரண்டாம் உலகப் போருக்குக் காரணமாக இருந்த ஜெர்மனியின் அடால்ஃப் ஹிட்லரை இயக்கியதும் சாத்தானிய சக்தியே ஆகும். சிலையின் பாதப்பகுதி இரும்பும் களிமண்ணுமாய் ஒன்றுடன் ஒன்று கலவாதது போல் 19 ம் நூற்றாண்டுக்குப் பிறகு உலக தேசங்கள் ஒன்றுடன் ஒன்று உறவு கொள்ளாமல் உள்ளன.

உலகம் முழுவதையும் ஒரு பெரும் உலகப் பேரரசாக ஆளவேண்டும் என்ற சாத்தானின் இலட்சியம், இதுவரை ஈடேறவில்லையென்றாலும், இனிவரும் நாட்களில் சொற்பகாலத்திற்கு அது ஈடேறும் என்பதுதான் விவிலிய தீர்க்கதரிசனமாகும்.

வேதாகமத்தின் இறுதிப் புத்தகமாகிய வெளிப்படுத்துதல் தீர்க்கதரிசனப் புத்தகத்தின் 13 மற்றும் 17ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள விசித்திர மிருகமும், அதனை இயக்கிக் கொண்டிருக்கும் மகாவலிய சர்ப்பமும், "முன்பு இருந்தது என்றும், இப்பொழுது இல்லை என்றும், இனிவருகிறது என்றும், அது பாதாளத்திலிருந்து ஏறிவருகிறது என்றும், அது நாசமடையப் போகிறது என்றும், அதை நம்பியிருக்கும் மக்களே அதைக் கண்டு ஆச்சரியத்துடன் அதிர்ச்சியடைவார்கள் என்றும்" எழுதப்பட்டுள்ளது.

விவிலியத்தின் மூன்றாவது மகாதீர்க்கதரிசனம் என்பது தேவனுடைய தேவாலயம் பற்றியது என்பதை பத்தாம் அதிகாரத்தின் (10ஆ) பிற்பகுதியில் கண்டோம். மனித குலத்தின் மூன்றாம் அத்தியாயம் என்பது தேவாலயம் பற்றிய தீர்க்கதரிசனத்திற்குரிய தெய்வீகத் திருப்பணியின் வழியாகவே தோன்றுகிறது. ஆதாம் என்ற முதல் மனிதனுக்குள் தோன்றத் தவறிய தேவ சந்ததியாகிய மனித குலம், ஒரு மகாப்பிரளயமாகிய பெருவெள்ளப் பேரழிவுக்குட்படுத்தப்பட்டு, நோவா என்ற ஒரே ஒரு மனிதனின் குடும்பத்தின் வழியாய் இரண்டாம் அத்தியாயமாய்த் தோன்றியது. நோவாவின் வழியாகவும், அவனது பதினொன்றாம் தலைமுறையாகிய ஆப்ரகாம் வழியாகவும் வெளிப்பட்ட தேவனுக்குரிய மனிதகுலம், ஆதாமின் ஐம்பத்தொன்பதாம் தலைமுறையாக இயேசு கிறிஸ்து பிறந்தபோது, அவருக்குள் மூன்றாவது அத்தியாயமாய் பிறந்தாகவேண்டும். இந்த மூன்றாவது மனிதகுலம் என்பது மெய்யான தேவனின் திருக்குணத்தையும், திருச்சபையையும் வெளிப்படுத்தி தேவசமூகத்துடன் ஐக்கியப்படும் மனிதகுலம். இது இயேசு

கிறிஸ்துவையே வெளிப்படுத்தும் தேவ ஆவிக்குரிய மனிதகுலம். இதுவே மெய்யான தேவகுலம். தேவாலயம் பற்றிய தீர்க்கதரிசனத்திற்குரிய திருமுறைத் திருப்பணிகளின் வழியாகவே இந்த இறுதி மனிதகுலம் வெளிப்படுகிறது. இந்த மனித குலத்தவர்களே இயேசு கிறிஸ்துவைத் தங்களில் வெளிப்படுத்தும் அசல் ஆதாம்கள். அசல் மனிதர்களாகிய தேவ ஆவிக்குரிய மனிதர்கள் பூமியில் தோன்றக் கூடாது என்பதற்காகவே மகாசர்ப்பமும், பிரபஞ்சத்தின் அதிபதியுமாகிய சாத்தான், தனது ஆளுகையை ஆன்மீக ரீதியாக ஒவ்வொரு தனிமனிதனுக்குள்ளும், அரசியல் ரீதியாக ஒவ்வொரு தேசத்திலும் பிரயோகிக்கிறான். அசல் ஆதாமை கிறிஸ்துவின் வழியாக தங்களில் வெளிப்படுத்துபவர்களே அசல் மனிதர்களாகிய தேவ மனிதர்கள். இவர்கள் கிறிஸ்தவ மதத்தினர் அல்ல; கிறிஸ்துவையே (அசல் ஆதாம்) வெளிப்படுத்தும் மெய்யான கிறிஸ்துவர்கள். இவர்கள் வெளிப்படக்கூடாது என்பதற்காகவே, கி.பி. நான்காம் நூற்றாண்டில் அவன் கிறிஸ்தவ மதத்தை ஏற்படுத்தினான்.

ஆறாயிரம் ஆண்டுக்கால மானுடப் பயிர் விளைச்சலில் இயேசு கிறிஸ்துவையே நூற்றுக்கு நூறு விழுக்காடு வெளிப்படுத்தக் கூடிய தேவ சந்ததி, மணிக் கதிர்களாய் முதிர்ந்திடும் இறுதிக் காலக் கட்டத்தில், சாத்தான் தனது முழு அதிகாரத்தையும், உலக அரசியல் ஆட்சியின் மூலமாகவும், உலக மத ஆன்மீக ஆட்சியின் மூலமாகவும் செயற்படுத்துவான். இத்தகையக் காலச் சூழ்நிலையில் தேவாலய தீர்க்கதரிசனத்திற்குரிய காரியங்களாகிய நியாயவிசாரணையும், நியாயத்தீர்ப்பும் தேவலோக மகாபரிசுத்த ஸ்தலமாகிய மகா தேவாலயத்தில் நிறைவு பெறுகின்றன. மனம்வருந்தித் திருந்தி மகாதேவனின் மெஞ்ஞான மார்க்கத்திற்குள் பிரவேசிக்கும் மக்கள் அனைவருக்காகவும் மகாபிரதான ஆசாரியராய் மகாபரிசுத்த ஸ்தலத்தில் அமர்ந்து, நியாயவிசாரணையும், நியாயத் தீர்ப்பும் செய்து முடித்த இயேசு கிறிஸ்து, நியாயாதிபதியாய் பூலோகத்தின் மேகங்களின்மேல் பகிரங்கமாய்த் தோன்றுவார். அப்பொழுது, உலகமகா சக்கரவர்த்தியாய் அமர்ந்திருக்கும் கள்ளக் கிறிஸ்து (சாத்தானின் ஏகப்பிரதிநிதி) நிர்மூலம் ஆக்கப்படுவான். அதைத் தொடர்ந்து தேவகோபம் பூலோகத்தின் மீது இறுதிப் பிரளயமாய்த் தோன்றும். அதுவே இன்றைய உலக வரலாற்றின் முடிவாக அமையும்.

12

நான்காவது தீர்க்கதரிசனம்

ஆதாம் தேவ சமூகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட நேரம் முதல் தொடங்கும் ஆறாயிரம் ஆண்டுக் காலத்தின் முடிவில் மற்றொரு தீர்க்கதரிசனமும் நிறைவேறுகிறது. இது நான்காவது மகாதீர்க்கதரிசனம். எனினும், முந்திய மூன்று தீர்க்க தரிசனங்களுடன் தொடர்புடையது; மூன்று தீர்க்கதரிசனங்களையும் முடித்து வைப்பது.

வேதாகமத்தின் இறுதிப் புத்தகமாகிய வெளிப்படுத்திய புத்தகத்தின் 12 ஆம் அதிகாரத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது...

"வானத்திலே யுத்தம் உண்டாயிற்று; மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள்; வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும் யுத்தம்பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற் போயிற்று. உலகம் அனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது; அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது, அதனோடேகூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்....

....வலுசர்ப்பமானது ஸ்திரீயின்மேல் கோபங்கொண்டு, தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்கிறவர்களும், இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம் பண்ணப் போயிற்று. (வெளி. 12:7-9, 17)

முதலாம் மகாதீர்க்கதரிசனத்தின்படி, தன் தலையை நசுக்கப்போவதற்காக மனித குலத்தில் தோன்றப்போகும் தேவகுமாரனை, மனித குலத்திலேயே தோன்றவிடாமற் தடுப்பதற்காக, வலுசர்ப்பமாகிய சாத்தான் ஆதாமின் முதல் சந்ததியின்

காலத்திலிருந்தே சதி திட்டம் தீட்டி தனது கொலை வெறியைச் செயற்படுத்தத் தொடங்கினான்.

தேவகுலமாகிய இஸ்ரேல் குலம் (யூத குலம்), மோசஸ் தீர்க்கதரிசியின் காலத்தில், தேவ கட்டளையாகிய பத்துக் கட்டளையின் வழியாக தேவ சமூகத்துடன் உடன்படிக்கை ஒப்பந்தத்திற்கு உரியதாக்கப்பட்டது. உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்குரிய முதல் வழிபாட்டுக்குரிய வாசலாக, பாவ நிவாரணம் தேடுவதற்குரிய பலிசெலுத்துதல் இருந்தது. தேவாலயத்தின் பிரகார வாயிலில் உள்ள பலிபீடத்தில் பலி செலுத்தியவர்களுக்கும், கர்ப்பக்கிரஹ கருவறையில் (மகாபரிசுத்த ஸ்தலம்) கோயில் கொண்டிருக்கும் தெய்வத்திற்கும் இடையில் உடன்படிக்கை வழியாய் ஏற்பட்ட வழிபாட்டு முறையீடு, தேவ சமூகத்தின் நியாயத் தீர்ப்புக்குரியதாக்கப்படவேண்டும்.

பலிசெலுத்திடும் பக்தனுக்கும், நியாயத் தீர்ப்பினை வழங்கும் மெய்தேவனுக்கும் இடையில் உடன்படிக்கை வழியாய் ஏற்படும் உறவின் ஐக்கியத்திற்குரிய பெயரே திருச்சபை. இந்தத் திருச்சபைக்குரிய தேவ புருஷனாகப் பிறப்பவரே இயேசு கிறிஸ்து என்ற உண்மையை மகாசர்ப்பமாகிய சாத்தான் நன்கறிவான். ஆதலால், இயேசு கிறிஸ்து தோன்றப்போகும் திருச்சபையைத் தேவாலயம் எழுப்பப்பட்ட காலத்திலிருந்தே சாத்தான் சீர்குலைத்துச் சிதைத்திடும் செயலில் ஈடுபட்டான். தேவனுடைய ஒரே திருச்சபையாகிய கிறிஸ்துவின் திருச்சபை பற்றிய தீர்க்கதரிசனம் முழுவதும் வேதாகமத்தின் வெளிப்படுத்தினப் புத்தகத்தின் 12 ஆம் அதிகாரத்தில் அடங்கியுள்ளது.

திருச்சபையை ஒரு கற்புடையப் பெண்ணுக்கு ஒப்பிட்டுப் பேசும் தீர்க்கதரிசனம், அந்தப் பெண் தனது ஆண் பிள்ளையைப் பெற்றவுடன், பிள்ளையைக் கொலை செய்வதற்காக வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றதென்றும், அந்த பிள்ளை தேவனிடத்திற்கும், அவருடைய சிங்காசனத்திற்கும் எடுத்துக் கொள்ளப்பட்டது என்றும் கூறப்பட்டுள்ளது. மேலும், திருச்சபையாகியப் பெண் வனாந்திரத்திற்கு ஓடிப் போனாள் என்றும், அங்கே 1260 நாளளவும் (1260 வருடங்கள்) அவளைப் போஷிப்பதற்காக தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது என்றும் எழுதப்பட்டுள்ளது.

இயேசு கிறிஸ்துவை பூமியில் தோன்றச் செய்ததும், இயேசுவையே மூலைக் கல்லாகக் கொண்டு எழுந்ததும், வலுசர்ப்பமாகிய பிசாசின் பெருந்தொல்லைகள் காரணமாக வனாந்திரத்திற்குந் சென்றதும், வனாந்திரத்திற்குச் செல்வதற்குக் காரணமாக இருந்த ஐந்தாம் மிருகத்தின் ஆட்சி வீழ்ந்ததும் வனாந்தரத்தைவிட்டு வெளியில் வந்ததும், தானியேல் தீர்க்கதரிசனத்தின் 2300 வருடக் கணக்கை வெளிப்படுத்தி பரலோகப் பரிசுத்த ஸ்தலமாகிய தேவாலயத்தில் நடைபெறும் நியாயவிசாரணையைப் பற்றிய உண்மையை எடுத்துரைப்பதும், பரலோக நியாயவிசாரணை நடைபெறும் அதே வேளையில் பூலோக மக்களுக்கு இறுதிக்காலச் சத்தியத்தை எடுத்துச் சொல்வதும், தனக்கு மீண்டும் ஒரு இறுதிச் சோதனை ஏற்பட்டதற்குப் பிறகு, மிக வல்லமையான ஊழியத்தைச் செய்து முடித்து, இயேசு கிறிஸ்துவின் சாட்சியங்களானவர்களின் சந்ததியை (1,44,000 பரிசுத்ததேவ மக்கள்) பூமியில் இறுதியாக வெளிப்படுத்துவதுமாகிய ஒரே திருச்சபை... பூமியில் தோன்றக் கூடாது என்பதே சாத்தானின் இலட்சியமாக இருந்தது, இப்பொழுதும் இருக்கிறது.

இதற்காகவே, ஒரு போலியான திருச்சபையை கிறிஸ்துவின் பெயரால் (ரோமன் கத்தோலிக்கம்) ஏற்படுத்தியது மட்டுமின்றி, உலக அஞ்ஞான வழக்கங்களை அதனுள்ளே கொண்டுவந்து அதை மதமாக்கினான் சாத்தான். தேவாலயத் தூய்மைக்குரிய 2300 வருட தீர்க்கதரிசனத்தை, முதல் 490 வருடங்களுக்குப் பிறகு துண்டித்து, அதன் காரணத்தைச் சீர்குலைத்தான். இயேசு கிறிஸ்துவையும், மெய்யானக் கிறிஸ்துவையும் உலகம் மிகச்சரியாகத் தெரிந்துகொள்ளக் கூடாது என்பதற்காகவே, 19 ஆம் நூற்றாண்டின் மத்தியப் பகுதியிலிருந்து பல போலியான கிறிஸ்தவ சபைகளையும், குறிப்பாக ஆவிமார்க்க சபைகளையும் (Churches of Pentecostal Charismatic Spiritism) சாத்தான் அவ்வப்போது ஏற்படுத்தத் தொடங்கினான். வெளிப்படுத்தின புத்தகத்தின் 12ஆம் அதிகாரம் கூறும் திருச்சபையாகிய கற்புக்கரசியை, சாத்தான் கத்தோலிக்கத்தின் மூலம் மேரி மாதாவாக சித்தரித்துக் காண்பிக்கிறான்.

வானத்திலிருந்து தள்ளப்பட்டதும், மகாவலிய சர்ப்பமுமாகிய சாத்தான் தனது ஆறாயிரம் ஆண்டுக் கால அஞ்ஞான ஆன்மீகப் போராட்டத்திலும், அரசியல் ஆதிக்கப் போராட்டத்திலும் மாபெரும்

தோல்வியைத் தழுவிக்கொள்ளும்போது, நான்காம் தீர்க்க தரிசனத்துக்குரிய திருச்சபை, கிறிஸ்து என்ற தேவராஜ குமாரனை மணவாளனாக மணந்துகொள்ளும். இதுவே திருச்சபைக்குரிய இறுதி வெற்றியாகும். மதம் கடந்த இத்திருச்சபையில், தேவனுடையத் திருக்குணத்தை வெளிப்படுத்தும் அனைவரும் அங்கம்வகிப்பார்கள். தேவ சமூகத்தில், தேவனுடன்கூட, தேவனுக்குரிய நித்திய இளைப்பாறுதலை அவர்கள் அனுபவிப்பார்கள். விவிலிய ஆதியாகமத்தின் இரண்டாம் அதிகாரத்தின் தொடக்கத்தில் கூறப்படும் ஏழாம் நாள் என்ற நித்தியப் பெருநாள், எல்லை அற்றதாகவும், முடிவற்றதாகவும் அங்கிருந்து தொடங்கும். பரலோகம் என்ற தேவலோகத்தின் எல்லைகள், புதிய பூமியையும், புதிய பிரபஞ்சத்தையும் உள்ளடக்கியதாய் அப்பொழுது விரிவடையும்.

மெய்யான திருச்சபை

13

ஆறாயிரம் ஆண்டுக்கால காலச்சக்கரச் சுழற்சியின் முடிவு

தேவலோகத்திலிருந்து பறந்துவந்த தெய்வீக சர்ப்பத்தின் (குகுல்கன்) காலக் கணக்கு, அதன் வாலிலிருந்து தொடங்கி தலையில் முடிவடைகிறது. இதுவே இந்த உலகக் கணக்கின் தொடக்கமும் முடிவும் ஆகும். அது தேவலோகத்திவிருந்து வெளியேற்றப்பட்டப் பாம்பு என்று விவிலியம் கூறுகிறது. அது வெளியேற்றப்பட்ட நேரம் முதல், பழைய பாம்பு என்றும், பிசாசு என்றும், சாத்தான் என்றும் அழைக்கப்படுகிறது.

அதைத் தெய்வமாக ஏற்றுக் கொண்டவர்களில் மிகப் பெரும்பான்மையினர், அதன் குணத்தையே தங்கள் குணமாகக் கொண்டவர்கள் ஆனார்கள். அதன் குணத்திற்கு மாறுபட்டக் (நன்மையான) நற்குணத்தைக் கொண்ட சிறுபான்மையினரும் அதன் ஆளுகையின் கிழ் உள்ளவர்கள் ஆனார்கள். இந்த பிரபஞ்சத்தின் தலைமைக் கிரகமாகிய சூரியனுக்குரிய இடத்தில் அது தன்னை வைத்துக் கொண்டதால், அதை வணங்கும் மக்கள் சூரிய தேவனாகவே வணங்குகிறார்கள். பண்டைய காலங்களில் மட்டுமின்றி, இன்றைய இறுதிக் காலத்திலும் உலக மதத்தினர் பலர் சூரிய தேவனை சர்ப்பமாகவே வணங்குகிறார்கள்; அல்லது சர்ப்பத்தை சூரியதேவனாகவே வணங்குகிறார்கள்.

தேவலோகத்திலிருந்து அது வெளியேற்றப்படும்போது, அதனுடன்கூட அதன் தூதர்களும் வெளியேற்றப்பட்டனர். அதன் தளபதிகளைப் போலிருந்தவர்கள் சூரியனை அடுத்திருக்கும் கிரகங்களுக்கு உரியவர்கள் ஆனார்கள். இவர்களின் சஞ்சல சஞ்சாரங்களுக்கேற்பவும், ஆட்டுவிக்கும் ஆட்டத்திற்கேற்பவும், இவர்களால் ஆளப்படும் மனிதர்களும் ஆடுகிறார்கள். இந்த ஆட்டமாகிய வாழ்க்கைக்குப் பெயரே கர்ம வாழ்க்கை. மானிட கர்ம வாழ்க்கை என்பது, சர்ப்பங்களாகிய பிசாசுகளின் காலச் சக்கரச் சுழற்சி ஓய்வதற்கு

முன்பாகவே அவைகளால் ஆளப்படும் மக்களின் காலச்சக்கரம் ஓய்ந்து ஒடுங்கிவிடுகிறது. சாத்தானின் சுழற்சி வேகத்திற்கேற்பவே, அவனால் சுழற்றப்படும் மானிடப் பம்பரங்களும் சுற்றிச் சுழன்று ஓய்ந்து சாய்ந்து விடுகின்றன.

காலச் சக்கரம் என்பது கர்ம வாழ்க்கைக்குரிய சக்கரம். காலசர்ப்பமாகிய சாத்தானின் ஆளுகைக் காலம் என்பது சூரிய பிரபஞ்சத்தையும், குறிப்பாக பூலோக பூமியையும் சுற்றி வளைத்து ஆளுகை செய்திடும் காலச் சக்கர சுழற்சிக்குரியதாகும். தேவலோக நியாய விசாரணையும், நியாயத் தீர்ப்பும் நிறைவடைந்திடும்போது, அதனுடைய காலச் சக்கர சுழற்சி நிறைவடைந்துவிடுகிறது.

தலைமை சர்ப்பத்தின் காலக் கணக்கு எதுவோ, அதுவே ஏனைய சர்ப்பங்களின் காலக் கணக்கும் ஆகும். குகுல்கன் மற்றும் பல பெயர்களால் மாயன் இனத்தவர் சர்ப்பதேவனை அழைப்பது போலவே, உலக இனத்தவர் அனைவரும் தங்கள் தங்கள் மொழிகளில் கால சர்ப்பத்தைப் பெயரிட்டு அழைப்பதையும், வழிபடுவதையும் முன்னதாகக் கண்டோம்.

மகாலிங்க மகாசர்ப்பம்

தென்னாசிய இந்துத்துவ வழிபாடுகளில், அது குமாரக் கடவுள் எனப்படும் முருகன் தவிர, மற்ற அனைத்துக் கடவுள்களுடனும் நெருக்கமாகக் காணப்படுகிறது. மனிதனின் மூலாதாரத்திலிருந்து எழும் மூல சர்ப்பமாகிய அதுவே, சிரகின் உச்சியைத் தட்டித் திறக்கும் சஹஸ்ர சர்ப்பமாகவும் கபாலீஸ்வரனின் கண்டம் சுற்றிய கபால சர்ப்பமாகவும், பிரம்மலிங்கத்தைச் சுற்றியிருக்கும் பிரம்மாண்ட தியானலிங்க சர்ப்பமாகவும் உள்ளது. கிறிஸ்துவத்தின் பெயரில் தொடங்கிய கத்தோலிக்கத்திலும் இது தன் அடையாளத்தை சூரிய முத்திரையாகவும், சர்ப்ப முத்திரையாகவும் பதித்துள்ளது.

இந்த உலகத்தையும், சூரிய பிரபஞ்சத்தையும், மனிதனையும் ஆளுகை செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட மகாவலிய சர்ப்பத்தைப் பற்றிய விவிலிய தீர்க்கதரிசனம் ஆறாயிரம் ஆண்டுக் காலத்திற்குரியதாகும்.

இவற்றினுள் நிறைவேறிய தேவ தீர்க்கதரிசனங்களில் சிலவற்றைக் காண்போம்...

* சர்ப்பத்தின் தலையை நசுக்கப்போகும் தேவகுமாரன் மனித குலத்தில் மனிதனாகவே தோன்றப் போகிறார் என்பதை நாற்பதுக்கும் மேற்பட்ட வசனங்களின் வழியாக கி.மு. 15ஆம் நூற்றாண்டு முதல் 1500 வருடங்களாக தனது தீர்க்கதரிசிகள் மூலம் தேவன் முன்னறிவித்தார்.

* கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தனது தீர்க்கதரிசியாகிய தானியேல் மூலம் 26 நூற்றாண்டுகளுக்கும் மேலாக உலக இராஜ்யங்களைப் பற்றிய தீர்க்கதரிசனத்தை தேவன் முன்னறிவித்தார்.

* ஜெருசலேம் தேவாலயம் முதன் முறையாக பாழாக்கப்பட்டதற்குப் பிறகு, அதனைத் திரும்ப எடுத்துக் கட்டுவதற்கான ஆணையைப் பெர்ஷிய மன்னன் கோரஸ் (Cyrus) பிறப்பித்திடுவான் என்பதை 400 வருடங்களுக்கு முன்பாகவே தேவன் தமது தீர்க்கதரிசியாகிய ஏசாயா மூலமாக முன்னறிவித்தார்.

* பூமியில் ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் வாழ்ந்த வாழ்க்கைக்குரிய நியாயத்திர்ப்பு உண்டு என்பதையும், மெய்யான தெய்வத்தையும், அவருடைய தேவமார்க்கத்திற்குள் தேவாலயத்தின் வழிபாட்டு நடைமுறைகள் வழியாகப் பிரவேசிப்பவர்களுக்கும் நல்ல நியாயத் தீர்ப்பு வழங்கப்படவிருப்பதையும், இதற்குரிய நியாயவிசாரணை 2300 வருடங்களுக்குப் பிறகு (கி.பி. 1844 இல்) தொடங்கி நடைபெற்று முடியும் என்பதையும் கி.மு. 5 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தானியேல் ஞானியின் மூலம் மெய்தேவன் தீர்க்கதரிசனமாக முன்னறிவித்தார்.

* கி.பி. 1844 க்குப் பிறகு தேவலோகத்தில் நடைபெறத் தொடங்கிய மிகமுக்கியமான தெய்வீகத் திருப்பணிக்குரிய ஒத்திகையான சடங்காச்சாரக் காரியங்கள், பூலோக தேவாலயத்தில் கி.மு. 1500 முதல் நடைபெறத் தொடங்கியபோது, அவைகள் 33 நுற்றாண்டுகளுக்குப் பிறகு நிகழவிருக்கும் தீர்க்கதரிசனத்தின் முன்னடையாளங்களாகவும், முன்னறிவிப்புகளாகவும் தேவன் அறிவித்தார்.

* சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து தேவலோகம் சென்றதும், யோவான் தீர்க்கதரிசி மூலம் கி.பி. முதலாம் நூற்றாண்டு முதல், அவருடைய இரண்டாம் வருகைக்குரிய 21ஆம்

நூற்றாண்டு வரையிலான ஆவிக்குரிய திருச்சபையைப் பற்றியதும், மகாசர்ப்பத்தின் ஆதிக்கம் பற்றியதுமான 21 நூற்றாண்டுகளுக்குரியத் தீர்க்கதரிசனங்களைத் தேவன் வெளிப்படுத்திய புத்தகத்தின் மூலம் முன்னறிவித்தார்.

* இயேசு கிறிஸ்து தேவலோகம் சென்றடைந்து தேவதந்தையின் சமூகத்தில் இருந்தபோது, தேவனின் வலது கரத்தில் ஏழு முத்திரைகளால் முத்திரையிடப்பட்டுக் கட்டப்பட்டிருந்த தீர்க்கதரிசனப் புத்தகத்தைத் தனது கரங்களில் பெற்று, ஒவ்வொரு முத்திரையாக உடைக்கத் தொடங்கினார். (வெளிப்படுத்துதல் 5 ஆம் அதிகாரம் முதல்...) அதுமுதல் உலகில் ஒவ்வொரு முக்கியமான நிகழ்வுகள் நிகழத்தொடங்கின. முதலாம் நூற்றாண்டின் முதல் திருச்சபையின் காலத்திலிருந்து 21ஆம் நூற்றாண்டின் ஏழாம் திருச்சபையின் காலம்வரையில் நிகழவேண்டிய மகாசம்பவங்களில், இன்றைய நாள்வரையில் சம்பவிக்க வேண்டிய யாவும் சம்பவித்து முடிவடைந்துவிட்டன. எஞ்சியுள்ள குறுகிய காலத்துக்குரிய மகாசம்பவங்களே மீதமாயுள்ளன.

வேதாகம இறுதிப் புத்தகத்தில் மறைபொருளாய் எழுதப்பட்டுள்ள தீர்க்க தரிசனங்களின்படி, கி.பி. முதலாம் நூற்றாண்டுக்குப் பிறகு இதுவரை நிகழ்ந்தவற்றில், மிகவும் முக்கியமான சம்பவங்கள் சிலவற்றைக் காண்போம்...

1. கிறிஸ்துவின் ஊழியர்கள் என்ற போர்வையில், சாத்தானின் ஊழியர்கள் கிறிஸ்தவ மார்க்கத்திற்குள் இரண்டாம் நூற்றாண்டு முதல் பிரவேசித்தது. (அப்போஸ்தலர் 20:29)

2. அக்கிரமக்காரன் தன்னை ஆண்டவர் என்றழைத்துக் கொண்டு தேவனுடைய ஆலயத்தில் தேவனைப் போல் அமர்ந்தது.... (2தெசலோனிக்கர் 2:3 – 10)

3. ரோமப் பேரரசும், ரோமன் கத்தோலிக்கப் பேரரசும் மெய்கிறிஸ்துவப் பரிசுத்தவான்களைச் சித்திரவதை செய்ததும், தேவனுடைய பிரமாணங்களையும், காலங்களையும் மாற்றியதும்.... (எபிரேயர் 11:35–38, வெளிப்பாடு 6:9, தானியேல் 7:26)

4. பரலோக தேவதந்தையின் கரங்களிலிருந்த புத்தகத்தை, குமாரனாகிய தேவன் பெற்று, அதன்மீது இடப்பட்டிருந்த ஒவ்வொரு முத்திரையையும் அவர் ஒவ்வொன்றாக உடைத்தபோது கி.பி. முதல் நூற்றாண்டு முதல் நிகழ்ந்த ஒவ்வொரு வரலாற்றுச் சம்பவங்களும் முக்கியமானவை. (அவற்றின் நீண்ட பட்டியலின் நிகழ்வுகளை இங்கு எழுதுவதற்கு இடமில்லை. அவற்றில் சிலவற்றை மட்டும் குறிப்பிடுகிறோம்...)

4(அ). கி.பி ஏழாம் நூற்றாண்டில் அரபு மதம் வெட்டுக்கிளிகளாய் புறப்பட்டு வெளியில் வந்தது. *(வெளிப்படுத்துதல் 9:1–11)*

4(ஆ). துருக்கிய ஒட்டமான் அரசின் வீழ்ச்சி *(வெளிப்படுத்துதல் 9:12–21)*

4(இ). *1755*இல் நிகழ்ந்த மாபெரும் லிஸ்பன் நிலநடுக்கம். *(வெளிப்படுத்துதல் 6:12)*

4(ஈ). *1780* மே *19*இல் சூரியனும் சந்திரனும் இருண்டுபோன சம்பவம். *(வெளிப்படுத்துதல் 6:12)*

4(உ). *1833* ஜனவரி *11*இல் வானத்தின் நட்சத்திரங்கள் கூட்டமாக பூமியின்மேல் வீழ்ந்த காட்சி. *(வெளிப்படுத்துதல் 6:13)*

5. இயேசு கிறிஸ்துவிடம், உம்முடைய (இரண்டாம்) வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன என்று அவருடைய சீடர்கள் கேட்டபோது, அவர் பின்வரும் அடையாளங்களைக் குறிப்பிட்டார்.

* கள்ள தீர்க்கதரிசிகளின் வஞ்சகமான கள்ளத் தீர்க்க தரிசனங்கள்
* யுத்தங்கள்
* மக்களுக்கு விரோதமாய் மக்கள் எழுதல்
* இராஜ்யத்திற்கு விரோதமாய் இராஜ்யம் எழுதல்
* பஞ்சங்கள்
* கொள்ளை நோய்கள்.

* இயேசு கிறிஸ்து இரகசியமாக வந்துவிட்டார் என்று அறிவிக்கப்படுதல்.

மேற்காணும் அடையாளங்கள் இதுவரை நிகழ்ந்ததைவிட இனிவரும் இறுதி நாட்களில் அதிகமாக நிகழ்ந்திடும்.

இறுதி நாளில்....

* சூரியனும் சந்திரனும் அந்தகாரப்பட்டு, நட்சத்திரங்கள் பூமியில் விழுந்திடும்.

* இதுவரையில் இல்லாத அளவுக்கு மிகக் கடுமையான பூமி அதிர்ச்சிகள் ஏற்படும். (மத்தேயு 24:3–7, 23,29)

விவிலிய வேதாகம திர்க்கதரிசனங்களின் முன்பாக, மாயன் காலக் கணக்கும் மற்றையக் காலக் கணக்குகளும் அர்த்தமற்றவைகளும், அற்பமானவைகளும் ஆகும். அவைகள் தகுந்த அடிப்படைக் காரணங்களும் நோக்கங்களும் அற்றவை. சாத்தானால் எழுப்பப்படும் நாஸ்டர்டேம் போன்றவர்கள் வெளிப்படுத்தும் திர்க்கதரிசனங்கள் எவ்வித அடிப்படை முகாந்திரங்களும் இலட்சியங்களும் அற்றவை. இதுவரையில் வாசித்த விவிலிய வேதாகம திர்க்கதரிசனங்களுடன் தொடர்பற்றவைகள்.

உலகபோலி தீர்க்கதரிசிகளும், கள்ள தீர்க்கதரிசிகளும்:

உலக ஞான திருஷ்டிக்காரர்களில் (சாத்தானின் திர்க்கதரிசிகள்) டாக்டர் மைக்கேல் நாஸ்டர்டாம் என்ற நாஸ்டர்டாமஸ் பெரும்புகழ்மிக்கவர். பிறப்பினால் யூதரும், மதத்தினால் கத்தோலிக்கக் கிறிஸ்துவரும், தொழிலால் மருத்துவருமாகிய இவர், கி.பி. 1503 முதல் 1566 வரையில் ஃப்ரான்சில் வாழ்ந்தவர். இவர் நூற்றாண்டுகள் என்ற தலைப்பில் பத்து தொகுதிகளாக கவிதை நடையில் எழுதிய 942 திர்க்க தரிசனங்களில் பலவும் நிறைவேறியுள்ளதாக அவருடைய திர்க்க தரிசனங்களை ஆராய்ந்தவர்கள் கூறுகிறார்கள். இனி நடக்கவிருக்கும் அவருடைய திர்க்கதரிசனங்களில் முக்கியமானதாகக் கருதப்படுவது இதுதான்...

நாஸ்டர்டேம்

“இரத்த மனிதன் ஒருவன் வருகின்றான்;

அவன் வந்ததும் மூன்றாம் உலக யுத்தம் தொடங்கும்;

அந்த யுத்தம் நச்சு நோய்க் கிருமிகளாலும்,

நச்சு வேதியியல் பொருட்களாலும் நடந்திடும்;

அது இருபத்தொன்றாம் நூற்றாண்டின்

முற்பகுதியில் தொடங்கும்;

உலகின் பல நாடுகளும் ஒன்றுபட்டு

அந்த இரத்த மனிதனை வீழ்த்தும்;

அந்த மனிதன் அந்திக் கிறிஸ்து என்ற

அடையாளத்திற்குரியவன்;

அவன் பெயர் 'மாபஸ்' என்று

மறைமுகமாய் அழைக்கப்படும்;

அவனுடைய வீழ்ச்சிக்குப் பிறகு

ஆயிரம் ஆண்டுகள் அமைதி திரும்பும்;”

நாஸ்டர்டேம் எழுதியுள்ள 942 தீர்க்கதரிசனங்களில் மேற்காணும் தீர்க்கதரிசனம் ஒன்றுமட்டுமே வேதாகமத் தீர்க்கதரிசனத்தை நெருங்கி வருவதுபோல் அமைந்திருந்தாலும், உண்மையில் நெருங்கிவரவில்லை.

சாத்தானிய சர்ப்ப ஞானம் என்பது எகிப்திய மாய மந்திரங்களையும் (Occult Science), இந்துத்துவ ஆரிய அதர்வனத்தையும், பாபிலோனிய-கல்தேய வான சோதிட சாஸ்திரத்தையும் அடிப்படையாகக் கொண்டது. சாத்தானிய சர்ப்ப ஞானத்தை மூலாதாரமாகக் கொண்ட நாஸ்டர்டேம், குண்டலினியோக சர்ப்பசக்தியை, முக்கோண - அறுகோண சக்கரத்தின் மைய்த்தில் வைத்து, பிரமிடு கோபுர உச்சிக்குக் கொண்டு சென்றதால் ஏற்பட்ட விபரீத விளைவுகளே அவருடைய தீர்க்கதரிசனங்கள்.

மேலும், சாத்தானுடைய ஞானப் பேராற்றலில், அவனது பாதாள ஆயுட்காலத்தின் எதிர்கால பூலோக நிகழ்வுகள் அனைத்தையும், அவனது ஆளுகைக்குட்பட்ட உலகத்தின் நிகழ்வுகளையும், கர்மவிதிகளின் சூத்திரதாரியாகிய அவனால் இயக்கப்படும் மனிதர்களின் எதிர்கால வாழ்க்கையையும் அவன் முன்னறிவிக்கக் கூடியவன் என்பதையே நாஸ்டர்டேம் போன்ற தீர்க்கதரிசிகள் மூலம் அவ்வப்போது வெளிப்படுத்துகிறான். அவைகள் யாவும் தேவ சமூகத்தின் தேவ சித்தத்திற்கும், தேவ திட்டத்திற்கும் அப்பாற்பட்டவைகள். அன்றியும், தேவ சித்தத்தின் அடிப்படையிலான விவிலிய - வேதாகம தீர்க்கதரிசனங்களை அறிந்துகொள்ளக் கூடாதவாறு மானிட மனங்களைக் குழப்புவதற்காகவே சாத்தான் இவற்றை வெளிப்படுத்துகிறான்.

ஒரு வலைத்தளச் செய்தி இவ்வாறு கூறுகிறது....

"புதிய உலக ஒழுங்குமுறைக்குரிய இறுதிக் கட்டமைப்பை சாத்தான் தொடங்குகிறபோது, அந்திக் கிறிஸ்து (கிறிஸ்துவின் எதிரி) பற்றிய இரகசியத்தைப் பின்வரும் இருபெரும் காரியங்களின் வழியாக வெளிப்படுத்துகிறான்.

1. கணிதவியல், அறிவியல், ஆன்மீகயியல் ஆகியவற்றின் இன்றைய நவீன கோட்பாடுகளின் வழியாக...

2. இறுதிக் காலம் (நாள்) பற்றிய பின்வரும் 4 தீர்க்கதரிசனங்கள் குறுகி ஒன்று சேருவதன் வழியாக....

அ). ரபிகதூரியின் ஜெருசலேம் தீர்க்கதரிசனம்.

ஆ). செயின்ட் மலாக்கியின் வாடிகன் தீர்க்கதரிசனம்.

இ). மாயன் காலச் சக்கர தீர்க்கதரிசனம் மற்றும் விவிலிய வெளிப்படுத்தின விசேஷ வசனம் 9:11ன் அடிப்படையாகக் கொண்ட தீர்க்கதரிசனம்.

ஈ). ஸ்கேன் ஆலன் இராபர்ஸின், சிருஷ்டி கர்த்தாவை குறித்த ஆதாரத்தைக் கண்டறியும் தீர்க்கதரிசனம்.

Ref: wesdancin.wordpress.com

மேற்காணும் தீர்க்கதரிசனங்கள் மற்றும் கோட்பாடுகள் மெய்தேவனுடனும் அவருடைய விவிலியத்துடனும் தொடர்புடையவைகள் அல்ல. வெளிப்படுத்தின விசேஷ 9:11 தீர்க்கதரிசனம் முடிவடைந்து நிறைவேறிய ஒன்று.

செயின்ட் மலாக்கியின் வாடிகன் தீர்க்கதரிசனம் கி.பி. 1139இல் எழுதப்பட்டு, 1590இல் வெளிப்படுத்தப்பட்டு 1913 Catholic Encyclopedia மூலம் வெளியிடப்பட்டது. இதன்படி இப்பொழுதுள்ள 267வது போப் பதினாறாம் பெனடிக்ட் என்பவரே இறுதி போப் என்று சிலரும், 268வது போப்பாக பெட்ரூஸ் ரோமானஸ் அல்லது ரோமாபஸ் என்ற மறைபெயரில் வருபவரே இறுதி போப் என்று சிலரும் கூறுகின்றனர்.

மேற்காணும் தீர்க்கதரிசனங்களில் மாயன் தீர்க்கதரிசனமும் இணைக்கப்பட்டுள்ளது.

இவைகள் யாவும் விவிலியம் கூறும் அடிப்படை தீர்க்க தரிசனங்களுக்கு அப்பாற்பட்டவைகளும், அவைகளிலிருந்து மாறுபட்ட சிந்தனையோட்டத்தை ஏற்படுத்துபவையாகும்.

பாவத்தின் ஊற்றுக் கண்ணும், உலகம் சபிக்கப்படுவதற்குக் காரணமாக இருந்தவனுமாகிய சாத்தான் கூறும் தீர்க்கத்தரிசனங்கள் நிறைவேறுவதாகவே இருந்தாலும் அவைகளை நம்பக் கூடாதென்றும், வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், கள்ள தீர்க்கதரிசிகளுக்கும் எச்சரிக்கையாய் இருந்திடுமாறும் தேவன் விவிலிய வசனங்கள் வழியாய் எச்சரிக்கை செய்கிறார். (எண்ணாகமம் 13:1-3, மத்தேயு 24:24, 1திமோத்தேயு 4:1)

மேலும், குறிசொல்கிறவர்கள், நாள்-நட்சத்திரம் பார்க்கிறவர்கள், அஞ்சனம் பார்க்கிறவர்கள், சூனியக்காரர்கள், மந்திரவாதிகள், மாயவித்தைக்காரர்கள், இறந்தவர்களிடத்தில் குறிகேட்பவர்கள் ஆகிய யாவரும் தேவனுடைய பார்வைக்கு அருவருப்பானவர்கள் என்று விவிலிய வசனங்கள் எச்சரிக்கின்றன (யாத்திராகமம் 22:18, உபாகமம் 18:10-12, லேவியர் ஆகமம் 19:31, 20:6,27)

அஞ்ஞான அருவருப்புகளின் ஊற்றுக் கண்ணாகிய சாத்தான், இன்றைய இறுதி நாட்களில் அஞ்ஞான அருவருப்புகள் அனைத்தையும் செய்திடும் அவனுடைய மனிதர்களை கிறிஸ்தவ மதத் திருச்சபைகளுக்குள் கொண்டுவந்திருப்பதுதான் வியப்புக்குரிய

உண்மையும், விபரீத விளைவுகளை ஏற்படுத்தக்கூடியவைகளும் ஆகும். கிறிஸ்தவ மத தீர்க்கதரிசிகளும், உலக மதங்களின் தீர்க்கதரிசிகளும் கடைசி நாட்களில் சாத்தானின் நோக்கம் நிறைவேறுவதற்காக ஒன்று சேருவார்கள். எனினும், தேவன் தமது மெய்யான திருச்சபையின் தீர்க்கதரிசியையும், தீர்க்கதரிசனங்களையும் கிறிஸ்தவ ஆவிக்குரியத் திருச்சபைகள் ஏற்படுத்தும் குழப்பங்களுக்கு மத்தியிலும் அடையாளம் காண்பிக்கவே செய்கிறார்.

திருச்சபையும், திருச்சபைக்குரிய தீர்க்கதரிசியும் :

முதல் மனிதன் ஆதாம் சாத்தானிய பாவத்திற்குள் பிரவேசித்ததற்குப் பிறகு, 2500 ஆண்டுகள் தேவன் மனித குலத்துடனும், குறிப்பாக தேவ குலத்துடனும் போராடி வந்தார். எகிப்தில் 430 வருடங்கள் அடிமைகளாக இருந்த தேவ குலத்தை மோசஸ் என்ற தீர்க்கதரிசியின் மூலம் விடுவித்த பிறகு, தேவ கட்டளையாகிய வேதத்தையும், ஆசரிப்புத் .தொழுகைக்குரிய ஆசரிப்புக் கூடாரத் திருச்சபையையும் தேவன் ஏற்படுத்திக் கொடுத்தார்.

மோசஸ் மூலமாகவும், மற்றும் பல தீர்க்கதரிசிகள் மூலமாகவும் கி.மு. 1500 முதல் கி.பி 100 வரையில் 1600 ஆண்டுகள் பல தீர்க்கதரிசிகளைக் கொண்டு எழுதப்பட்ட வேதாகமமே, 39 பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களாகவும், 27 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களாகவும் உள்ளன. இவற்றுள் பல பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் அந்தந்த காலத்திற்குரிய தீர்க்கதரிசனங்களை அறிவிப்பதுடன், எதிர்காலம் மற்றும் முடிவுகால தீர்க்கதரிசனங்களையும் அறிவிக்கின்றன. குறிப்பாக, தானியேல் புத்தகம் உலக வரலாற்றையும், தேவாலய திருச்சபை வரலாற்றையும் உள்ளடக்கிய மாபெரும் தீர்க்கதரிசனப் புத்தகமாக உள்ளது. புதிய ஏற்பாட்டின் இறுதிப் புத்தகமாகிய வெளிப்படுத்தின விசேஷப் புத்தகத்தை யோவான் தீர்க்கதரிசியைக் கொண்டு இயேசுவே எழுதச் செய்தார்.

இயேசுவையே அடித்தளமாகக் கொண்டு எழுந்த முதல் நூற்றாண்டின் முதல் திருச்சபை தொடங்கி, இருபத்தொன்றாம் நூற்றாண்டின் இறுதித் திருச்சபையாகிய ஏழாம் திருச்சபைக்குரிய காலம் வரையில் தீர்க்கதரிசனங்களை எழுதச் செய்தார். 19ஆம் நூற்றாண்டில் இறுதித் திருச்சபையாகிய ஏழாம் திருச்சபையின்

தொடக்கம் என்பது தேவன் எழுப்பிய தீர்க்கதரிசிகள் அளித்த தீர்க்கதரிசனங்களையே அடிப்படையாகக் கொண்டு எழுந்தது. குறிப்பாகவும், சிறப்பாகவும் எலன் கூட் ஹார்மன் என்ற ஈ.ஜி.ஒயிட் என்ற பெண்மணி மூலமாகவே. ஆதி முதல் மனிதனின் காலம் முதல் இறுதி மனிதனின் காலம் வரையிலான தொடர்ச்சியான செய்திகள் பலவும், பரலோகத்தில் ஏற்பட்ட பிரச்சினையின் தொடக்கம் முதல் பூலோகத்தில் தேவனுடைய இராஜ்யம் ஏற்படுவது வரையிலான தொடர்ச்சியான செய்திகள் பலவும், பல தொகுதிகளைக் கொண்ட புத்தகங்களாக வெளிவந்தன. திருமதி ஈ.ஜி.ஒயிட் அவர்களுடைய காலத்தில் எழுதிய தீர்க்கதரிசனப் புத்தகங்களின் எண்ணிக்கை 55க்கும் மேற்பட்டதாகும். சாட்சியாகமம் என்ற புத்தகம் பல தொகுதிகளைக் கொண்டதாகும். இவைகள் யாவும் வெளிப்படுத்தின விசேஷ 19ஆம் அதிகாரத்தின் 10ஆம் வசனத்தின்படி, தீர்க்கதரிசன ஆவியைக் கொண்டு எழுதப்பட்டு, இயேசுவின் சாட்சிகளை உருவாக்கி கிறிஸ்துவின் மெய்யானத் திருச்சபையை நிலைநிறுத்துவதாக உள்ளது.

ஈ.ஜி. ஒயிட்

"இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன்." (மல்கியா 4:5) என்ற வார்த்தையின்படியே, மூன்றாம் எலியாவாகிய தமது தீர்க்கதரிசியை இறுதித் திருச்சபையாகிய ஏழாம் சபையின் தீர்க்கதரிசியாக தேவன் அனுப்பி வைத்தார். தேவன் அருளிய தரிசனங்களை பலமணி நேரங்கள் கண்களை மூடியவாறும், சுவாசிக்காத நிலையிலும் ஜீவனுடன் தேவ சமூகத்தில் ஒன்றியிருந்து கண்டவற்றையே அவர் பல புத்தகங்களில் எழுதிவைத்தார். கர்த்தராகிய தேவன் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார் (ஆமோஸ் 3:7) என்ற வேத வசனத்தின்படி, இன்றைய இறுதி நாட்களுக்குரிய தீர்க்கதரிசனத்தை, இறுதித் திருச்சபையின் தீர்க்கதரிசியின் மூலமாகவே வெளிப்படுத்தினார்.

14

சபிக்கப்பட்ட பூமியின் சரித்திர முடிவு

படைப்புகள் பலவற்றையும் படைப்பதற்கு முன்னதாகவே, படைத்தவராகிய தேவன் வானங்களை விரித்து, பூமியை அதற்குரிய இடத்தில் ஒரு போதும் நிலை பெயராதபடி அதன் ஆதாரங்களின் மேல் நிலை நிறுத்தினார் என்றும், அவர் பூமியைத் தமது வல்லமையினால் உண்டாக்கி, பூச்சக்கரத்தைத் தம்முடைய அறிவினால் விரித்தார் என்றும் விவிலிய வசனங்கள் கூறகின்றன.

“என் கரமே பூமியை அடித்தளமிட்டது; என் வலது கை வானங்களை அளவிட்டது; நான் அவைகளுக்குக் கட்டளையிட, அவைகள் அனைத்தும் நிற்கும்” என்றும் விவிலியத்தில் தேவன் உரைக்கிறார்.

பூமி உருண்டை என்பதையும், அது அந்தரத்தில் சுழன்று கொண்டிருக்கிறது என்பதையும் விவிலியத்தில் கி.மு. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே தேவன் அறித்தார். (ஏசாயா 40:22, யோபு *26:7*)

தேவன் தமது படைப்பாகிய தெய்வீக பூமியை பரலோகத்தின் ஒரு பகுதியாகவே படைத்தார். பூலோகத்தில் தேவன் எழுந்தருளும் தேவாலயமாகத் திகழ்வதற்காகவே மனிதனை பூமியின் மண்ணைக் கொண்டு உருவாக்கினார். தேவன் தாம் உருவாக்கிய மனிதனை, தாம் உண்டாக்கிய கற்பகச் சோலையாகிய ஏதேன் என்ற எழில் சோலையில் வாழும்படி செய்தார். தேவ சமூகத்தில் தேவனுடன் தேவ மனிதன் ஒன்று கூடி ஒய்ந்திருக்கும் திருச்சபை, இந்த இயற்கை வளம் நிறைந்த எழில் சோலையில் சங்கமித்துக் கூடவேண்டும் என்பதே தேவ சித்தமும், தேவ திட்டமுமாய் இருந்தது. தேவனுடைய திருச்சித்தத்தையும், திட்டத்தையும் அதன் தொடக்கத்திலேயே கெடுத்த தியசக்தியே, பழைய பாம்பாகிய

பெரிய வலுசர்ப்பம் என்றும், சாத்தான் என்றும் அழைக்கப்படுகிறது.

தேவ ராஜ்யம் தோன்றவேண்டிய தெய்வீக மானுடத்திற்குள், சாத்தானின் அஞ்ஞான ராஜ்யம், ஆன்மீக ராஜ்யமாகவும், ஆதிக்க ராஜ்யமாகவும் தோன்றியது.

ஏதேன் கற்பகச் சோலை

தேவனுக்கும் தேவ மனிதனுக்கும் இடையில் சாத்தான் வஞ்சகமாய் நுழைந்ததன் காரணமாகவே, ஏதேன் கற்பகச் சோலையில் அமைந்திருந்த ஜீவ விருட்சத்தின் கனியை புசிக்க இயலாத நிலையும், அந்த சோலையில் வசிக்க இயலாத நிலையும் மனிதனுக்கு ஏற்பட்டது. மனிதனுக்குள் ஊடுருவிய சாத்தானிய பாவத்தின் காரணமாகவே பூமி சபிக்கப்பட்டது. அது முதல், பூமியும், பஞ்ச பூதங்களின் இயற்கைச் சூழலும் மனிதனுக்கு விரோதமாக மாற்றமடையத் தொடங்கின. பூமியின் இயக்கமும், அது சார்ந்துள்ள பிரபஞ்சத்தின் இயக்கமும் சீர்கேடடையத் தொடங்கின.

தேவாலயமாய்த் திகழ வேண்டிய மானுடம், பிசாசுக்குள் ஒழுக்கக் கேடடைந்ததன் காரணமாக முதல் ஊழிப் பிரளயத்தை தேவன் அனுமதித்தார். தேவ ராஜ்யம் தோன்றக் கூடாதபடி முதல் ஆதாம் தன்னைக் கெடுத்துக் கொண்டதன் காரணமாகவே, தேவராஜ்யத்தின் தோற்றத்திற்குரிய இரண்டாம் ஆதாமாக இயேசு கிறிஸ்து நான்காயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றினார். அவரையே அடித்தளமாகக் கொண்டு ஆவிக்குரியத் திருச்சபை தோன்றியது. இந்த திருச்சபையின் மூலமாகவே தேவ சந்நிதானத்தில் தேவனுடன் ஒன்றுகூடி ஒய்ந்திருக்கும் பரிபூரண பரிசுத்த மக்கள் தோன்றியாக வேண்டும். இத்தகைய தெய்வீகத் திருப்பணியாகிய செயற்பாடுகளைத் தடைசெய்திடும் வஞ்சகங்களையே சாத்தான் பூமியில் இப்பொழுது செய்து வருகின்றான்.

ஆதாமின் அசல் சந்ததியாகிய தேவ சந்ததி இயேசுவின் வழியாய் பூமியில் தோன்றக் கூடாது என்பதற்காகவே கிறிஸ்துவின் பெயரில்

கிறிஸ்தவ மதம் நடத்தியும், ஆவி அபிஷேக சபைகளை நடத்தியும் மக்களைக் குழப்புகிறான். பூமியின் மக்கள் அனைவரும் அவனுடைய அஞ்ஞான ஆன்மீகத்திற்குள்ளாகவும், ஆட்சி அதிகாரத்திற்குள்ளாகவும், அறிவியல் தொழில்நுட்ப அனுபவங்களுக்குள்ளாகவும், பண்பாடற்ற பாலியல் கிளர்ச்சிகளுக்குள்ளாகவும் அடிமைகளாக்கப்பட்டு ஆட்டுவிக்கப்படுகிறார்கள். சாத்தானியத்தின் காரணமாகவே சபிக்கப்பட்ட பூமியின் சரித்திரத்தை தேவன் ஒரு முடிவுக்குக் கொண்டுவரும் நாள் நெருங்கிவருகிறது. அந்த நாள் தேவனுடைய தீர்க்கதரிசனங்கள் வழியாய் எவ்வாறு நெருங்கிவருகிறது என்பதைக் கடந்த அத்தியாயங்களில் வாசித்தோம். நெருங்கிவரும் அந்த முடிவுநாள் கர்த்தராகிய தேவனின் உக்கிர கோபத்தின் நாள்.

அந்நாளில், வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும், வெட்டாந்தரையையும் அசையச் செய்வார். (முன்பொருமுறை அவருடைய சத்தம் பூமியை அசையச் செய்தது; அவர் மறுமுறை பூமியை மட்டுமின்றி வானத்தையும் அசையச் செய்வேன் என்று வாக்குரைத்திருக்கிறார்.) (ஆகாய் *2:6*, எபிரேயர் *12:26*)

அந்நாளில், சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும் உண்டாகும்; பூமி மிகவும் அதிர்ந்திடும்; பூமியில் அதற்கு முன்பு எப்பொழுதும் அவ்வாறு அதிர்ச்சிகள் உண்டானதில்லை. (வெளிப்பாடு *16:18*)

அந்நாளில், வானங்கள் மடமடவென்று அகன்றுபோகும். (IIபேதுரு *3:10*)

அந்நாள் உக்கிரத்தின் நாள்; இக்கட்டும் இடுக்கமுமான நாள்; பாழாக்கும் பேரழிவின் நாள்; இருளும் அந்தகாரமுமான நாள். தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்தபடியால் மனிதர்கள் குருடர்களைப்போல் நடந்திடும் நாள். (செப்பனியா *1:15–17*)

அந்நாள், மனிதர்களுடைய பணமும், பொன்னும், வெள்ளியும் அவர்களை விடுவிக்காத நாள் (செப்பனியா *1:18*, எசேக்கியல் *7:19*)

அந்நாள் அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்குப் பலன் அளிக்கப்படும் நாள். (வெளிப்பாடு *22:12*)

அந்நாளில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, தமது மகிமையுடன் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவராய் தமது தூதர்களுடன் கூட மேகங்களின் மேல் வருவார். கண்கள் யாவும் அவரைக் காணும். பூமியின் மக்கள் அனைவரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். (வெளிப்பாடு 1:7, மத்தேயு 25:31)

அந்நாள் ஒரு கொடிய நாள்; அது இன்றைய உலக வரலாற்றின் இறுதி நாளாக விரைந்து வருகிறது.

அந்நாளில், சபிக்கப்பட்ட பூமியின் சரித்திரமும், காலச் சர்ப்பத்தால் இயக்கப்படும் காலச் சக்கரச் சுழற்சியின் கடைசி நாளும் முடிவடைந்திடும்.

புதிய வானமும், புதிய பூமியும் மறுபடைப்பாய் படைக்கப்படும் "அக்காலத்திலே, கர்த்தராகிய தேவன் லிவியாதான் என்னும் நீண்ட பாம்பை, லிவியாதான் என்னும் கோணலான சர்ப்பத்தையே, கடிதும் பெரிதும் பலத்ததுமான தமது பட்டயத்தால் தண்டிப்பார்; சமுத்திரத்தில் இருக்கிற வலுசர்ப்பத்தைக் கொன்று போடுவார்." (ஏசாயா 27:1)

15

விவிலிய காலச்சக்கரம் ஒருபோதும் ஓய்வதில்லை.

மெய்யான ஒரே தேவன் தனது சிருஷ்டிப்பாகிய எல்லாவற்றையும் ஆறு நாட்களில் சிருஷ்டித்து, ஆறாம் நாளின் இறுதியில் மனிதனைச் சிருஷ்டித்து முடித்ததும், ஏழாம் நாளுக்குள் பிரவேசித்தார் என்று விவிலியத்தின் முதல் இரண்டு அதிகாரங்கள் கூறுகின்றன. முதல் ஆறு நாட்களுக்கும் முடிவுகள் இருந்தன. ஏழாம் நாளுக்கு முடிவு என்பது இல்லை; அது முடிவற்றது, நித்தியமானது, நிலையானது.

கி.மு. 15ஆம் நூற்றாண்டில் தொடங்கி கி.பி. முதலாம் நூற்றாண்டு வரையில் எழுதப்பட்ட விவிலிய வேதாகமம் (தேவ வார்த்தை), ஏழாம் நாள் என்ற நித்தியத்திற்குள் பிரவேசிக்கத் தவறிய மனித குலத்தை (தேவ சந்ததியை) ஆறாயிரம் ஆண்டுக் காலப் போராட்டத்திற்குப் பிறகு, மீண்டும் ஏழாம் நாள் என்ற நித்தியத்திற்குள் பிரவேசிக்கச் செய்கிறது. கிருத யுகம், திரேத யுகம், துவாபர யுகம், கலியுகம் ஆகிய மகாயுகம் முடிவடைந்து, கற்பயுகம் என்ற கிறிஸ்துவின் யுகம் நித்திய யுகமாக சாத்தானிய சர்ப்பத்தின் தலை நசுக்கப்பட்ட நேரம் முதல் தொடங்கும்.

ஏழாம் நாள் என்ற நித்திய நாளுக்குள் (நித்திய யுகத்திற்குள்) மனிதகுலம் பிரவேசிக்கக் கூடாது என்பதே சாத்தானின் இலட்சியம் ஆகும். அதற்காகவே அவன் தனது முழு பலத்தையும் இப்பொழுது பிரயோகிக்கிறான்.

ஏழாம் நாள் என்ற நித்தியத்திற்குரிய நாள் தேவனுடைய பத்துக்கட்டளைகளில் நான்காம் கட்டளைக்குரிய ஆன்மீக (ஆத்மாவுக்குரிய) பயிற்சியின் நாளாக உள்ளது. இந்த நாளில் (வாரத்தின இறுதி நாளாகிய சனிக்கிழமையில்) ஓய்ந்திருந்து ஆத்ம இளைப்பாறுதலுக்குரியப் பயிற்சியைப் பெற்றிடக்கூடாது

என்பதற்காகவே, சாத்தான் தன்னுடைய நாளாகிய சூரிய நாளில் (ஞாயிற்றுக்கிழமையில்) வழிபாட்டு ஆராதனையை கிறிஸ்துவத்தின் பெயரிலேயே தொடங்கி வைத்து பதினாறு நூற்றாண்டுகளுக்கு மேலாகிவிட்டன.

இந்துத்துவ வேதங்களின் வழியாக, இந்த நாளுக்குரிய தத்துவத்தை, 'ஓம்' என்ற பிரணவ மந்திர தத்துவமாகவே பிறப்பித்தான். ஒங்காரமும் ஆங்காரமுமாய் மூலாதாரத்திலிருந்து பிறந்திடும் சர்ப்பத்தின் சீற்றம், ஓம் (அஉம்) என்று குறுகி, தனக்குள்தானே உள்ளடங்கும்படி செய்து, போலியான ஆத்ம அமைதியை ஏற்படுத்தித் தருவதே சாத்தானிய பிரணவ மந்திர தத்துவமாகும். இது, மூடப்பட்ட முதன்மை வாசல் வழியாய் ஏதேன் என்ற ஜீவவிருட்ச சோலைக்குள் பிரவேசிக்க முடியாதவர்களை, பின்புறமாய் குறுக்கு வழியில் கள்ளத்தனமாகப் பிரவேசிக்கச் செய்திடும் சாத்தானின் முயற்சியாகும்.

நித்திய இளைப்பாறுதலுக்குரிய தேவ சந்நிதானத்தில், தேவன் ஒய்ந்திருக்கும் நாளில், தேவனுடன் கூட இணைந்தமர்ந்து பெறும் ஒய்வே முறையான ஆத்மீக நித்திய ஒய்வாகும். இதன் வழியாகவே முடிவற்றதும், எல்லையற்றதுமாகிய தேவசந்நிதிதான நித்தியப் பெருவாழ்வு (Divine Eternity) பிறக்கிறது.

ஆதலால், விவிலியம் விவரிக்கும் காலச் சக்கரச் சுழற்சி என்பது ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என்ற தேவ வார்த்தையிலிருந்து தொடங்குகிறது. அது தேவ மக்கள் தேவ சந்நிதானத்தில் தேவனுடன் கூட ஒய்ந்திருக்கும் ஒய்வின் வழியாகவே நித்திய சுழற்சிக்குள் பிரவேசிக்கிறது; அது ஒருபோதும் ஒய்வதில்லை.

தேவனுக்குரிய மானுடம், தேவனுடைய ஆலயமாய் மாறும்போது, அது மண்ணையும் விண்ணையும் கடந்த மகாகோபுரமாய் எழுந்து, அண்ட சராசரம் எங்கும் விரிவடைந்திடும். அதற்கு முடிவு என்பதே இல்லை. இந்த தெய்வீகத் தத்துவத்திற்கு முன்பாக, சாத்தானின் இன்றைய உலக அஞ்ஞான ஆன்மீகத் தத்துவங்கள் யாவும் பொய்த்துப் போகும். தேவனுக்குரிய மானுடம், தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து இயேசுவுக்குள் மறைந்திருக்கிறது என்பதே தேவ இரகசியம். (1 யோவான் 5:12) இந்த இரகசியத்தை ஆத்மீகமாய் அனுபவிப்பவர்களின் காலச் சக்கர சுழற்சி ஒருபோதும் ஒய்வதில்லை.

சர்ப்பத்தின் தலை நசுக்கப்பட்ட பிறகு...

மகா சர்ப்பத்திற்கும் மகாதேவனுக்கும் இடையிலான "மாபெரும் ஆன்மீக போராட்டம் முடிவடைந்தது. இனி பாவமும் இல்லை, பாவிகளும் இல்லை. பிரபஞ்சம் முழுவதும் பரிசுத்தம் நிறைந்தது. படைப்பின் ஒவ்வொரு நாடித்துடிப்பிலும் நன்மையும், மகிழ்ச்சியும் இணைந்து ஒலித்திடும் இனிய இசை பிரபஞ்சமெங்கும் கேட்கிறது. அனைத்தையும் படைத்த தேவனிடமிருந்து, எல்லையற்ற அண்டப்பெருவெளி எங்கிலும், ஜீவனும், ஜீவ ஒளியும், ஜீவப் பேருவுவகையும் பொங்கிப் பிரவாகித்து ஓடுகின்றன. அணு முதல் அண்டம் வரையில், உயிருள்ளவை உயிரற்றவை ஆகிய எல்லாவற்றிலும் காணப்படும் களங்கமற்ற கலையழகும், பரிபூரணப் பேரானந்தமும், 'தேவன் அன்பாகவே இருக்கிறார்' என்ற ஜீவ தத்துவத்தைப் பிரகடனப்படுத்துகின்றன.

தேவனுடைய தீர்க்கதரிசி

ஈ.ஜி. ஒயிட் அம்மையார்.

Great Controversy - P. 678

உலக முடிவு எப்பொழுது என்பதை ஆராய்வதைக் காட்டிலும், தன்னுடைய முடிவு எப்பொழுது என்பதை ஆராய்பவர்களே ஆன்மீக அறிவுடையவர்கள்.

தன்னுடைய முடிவுக்குப் பிறகு, தன்னை மரண பாதாளத்திலிருந்து எழுப்பப்போகிற மெய்யான தெய்வத்தையும், அவருடைய மெஞ்ஞான மார்க்கத்தையும் கண்டறிபவர்களே ஆன்மீக ஞானமுடையவர்கள்.

அவர்களின் ஞானமே மெஞ்ஞானம்....

மெஞ்ஞானத்தை அடைந்தவர்களின் காலச் சக்கரச் சுழற்சி ஒரு போதும் ஓய்வதில்லை.

முடிவுரையே முன்னுரை!

காலச் சக்கரம் எப்பொழுது சுழலத் தொடங்கியது என்பதைக் கடவுள் மட்டுமே அறிவார். எனினும், கடவுளின் குமாரன் ஆதாம், கற்பகச் சோலையாகிய ஏதேனிலிருந்து வெளியேற்றப்பட்ட நேரத்திலிருந்து ஒரு காலக் கணக்கு சுழலத் தொடங்கியது. அதுவே பூலோக காலச் சக்கரக் கணக்கு.

இந்தக் கணக்கு, காலச் சர்ப்பமாகிய பூலோக அதிபதியின் ஜாதகச் சக்கரக் கணக்கு. ஆறாயிரம் ஆண்டுக் காலத்தைக் கடந்துவிட்ட இந்த ஜாதகச் சக்கரக் கணக்கு, விவிலியம் என்ற வேதாகமத்தின் அறுபத்தாறு புத்தகங்களுக்குள் அமைதியாய் அடங்கிக் கிடக்கிறது. இன்றைய அறிவுலக, ஆன்மீக உலக ஆரவாரங்களுக்கிடையில் காலச் சர்ப்பத்தின் ஜாதகக் கணக்கை மிகச் சிலர் மட்டுமே கண்டறிபவர்களாக உள்ளனர். இந்த காலச் சக்கரம், அதன் கடைசி சுற்றுக்குள் இப்பொழுது சுழன்றுகொண்டிருக்கிறது.

காலச் சர்ப்பத்தின் ஜாதகக் கணக்கும், இந்த உலகத்தின் ஜாதகக் கணக்கும் ஒன்றுதான். மெய்யான தெய்வத்தை, மெய்யான வேதத்தின் வழியாய் தேடுபவர்கள், உலக ஜாதகமாகிய காலதேவனின் ஜாதகத்தை மட்டுமின்றி, தங்களின் சொந்த ஜாதகத்தையும் கண்டுகொள்வார்கள்.